பக்கங்கள்: இருபத்துஎட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 22 வியாழக்கிழமை (08.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 012




அதிகாரப் பகிர்வு அனுபவங்களை பகிரத் தயார்




சுமக்கத் தவறிய ஆரம்ப வீரர்கள்




கிண்ணம் வென்றது ஸ்பெயின்

## விவசாயத்தில் மிளிர்ந்த வன்னி மக்கள் இன்று மண்வெட்டி இல்லாமல் தவிப்பு!

### நாடாளுமன்றில் சிவசக்தி ஆனந்தன் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.8

விவசாயத்தில் செல்வச்செழிப்புடன் திகழ்ந்த வன்னி மக்கள் இப்போது அனைத்தையும் இழந்து மண்வெட்டிகூட இல்லாமல் வாழ்கின்றனர் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வன்னி மாவட்டம் விவசாயம் மற்றும் கால்நடை உற்பத்தியில்

பக் 25

## போர்த் தளபாடப் பராமரிப்பு நிலையம் இலங்கையில்

### திட்டமிடுகிறது ரஷ்யா

மொஸ்கோ, டிசெ.8

இலங்கையில் போர்த் தளபாடங்களைப் பராமரிக்கும் நிலையங்களை அமைக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளதாக 'வொய்ஸ் ஒவ் ரஸ்யா' தகவல் வெளியிட்டுள்ளது.

ரஷ்யா அல்லது சோவியத் தயாரிப்பான போர்த் தளபாடங்களின் சேவை மற்றும் பராமரிப்புக்காகவே இந்தப் பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

ரஷ்யாவின் பாதுகாப்புத் தளபாட ஏற்றுமதி

பக் 25

# ஐ.தே.கவின் எதிர்ப்புப் பேராட்டத்தில் தமிழர் பிரச்சினைகள் புறக்கணிப்பு!

### கிளர்ந்தெழுந்து இடதுசாரிகள் போர்க்கொடி
### சஜித்துடன் விக்கிரமபாகு கடும் கருத்து மோதல்

கொழும்பு, டிசெம்பர் 8

அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுக்கும் தேசிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது எனவும் இதில் தமிழர்கள் பிரச்சினைகள் எதுவும் உள்வாங்கப்படவில்லை என்பதால் அவ்வாறான ஆர்ப்பாட்டத்தைப் புறக்கணிப்பதற்கு இடதுசாரிக் கட்சிகள் தீர்மானித்துள்ளன எனவும் தெரியவருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் சிரால் லக்திலக்கவின் இல்லத்தில் எதிர்க்கட்சிகளின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலின் போது சூடான வாதப் பிரதி வாதங்கள் இடம்பெற்றுள்ளன. கட்சித் தலைவர்கள் சிலர் கூட்டத்திலிருந்து வெளிநடப்பும் செய்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக் கொள்கை இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது என இதன்போது கடும் எதிர்ப்பை வெளியிட்ட இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களான விக்கிரமபாகு கருணாரட்ன, சிறிதுங்க ஜயசூரிய ஆகியோர் தமிழர் விடயங்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் முதன்மை வகிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டி

பக் 25



அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராகவும் அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை அதிகரிக்கக் கோரியும் பொருள்களின் விலையைக் குறைக்குமாறு வலியுறுத்தியும் ஐக்கிய தொழி லாளர் சம்மேளனத்தின் தலைமையில் கொழும்பு, லிப்டன் சுற்றுவட்டத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (த-சி)

## அமைதி முயற்சி தோல்வியில் நோர்வேக்கும் பங்கு உண்டு!

### சொல்ஹெய்மிடம் தெரிவித்தார் ராஜித

கொழும்பு, டிசெ.8

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அமைதி முயற்சிகள் வெற்றியளிக்காமல் போனதற்கு இலங்கை, இந்தியா மட்டும் காரணமல்ல. நோர்வேக்கும் இதில் புங்குண்டு என இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த வாரம் நோர்வே சென்றிருந்த

பக் 25

## யாழ்ப்பாணத்தில் கே.பி.

யாழ்ப்பாணம், டிசெ.8

யுத்தம் முடிவடைந்து இரண்டரை ஆண்டுகள் கடந்துள்ளபோதும் யுத்தத்தால் பாதிப்படைந்த தமிழ் மக்களின் வாழ்வாதரத்தில் இதுவரை எந்தமுன்னேற்றமும் கிட்டவில்லை என குமரன் பத்மநாதன் (கே.பி.) 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

தற்போது இலங்கை அரசின் பாதுகாப்பில் உள்ள குமரன் பத்மநாதன் (கே.பி.) கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

யாழ்.வந்த அவர் குடாநாட்டின் பல இடங்களுக்கும் சென்று இடம்பெயர்ந்த மக்களைச் சந்தித்து அவர் களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்துள்ளார். அத்துடன் பொதுமக்களையும், மீனவர்களையும் அவர் சந்தித்துப்

பக் 25

## குடாநாட்டுக் கரையோரங்களில் மக்கள் நேற்று இடம்பெயர்வு

### கடும் காற்று அபாயம் ஏற்பட்டமையால்

யாழ்ப்பாணம், டிசெ.8

குடாநாட்டுக் கடற்கரையோரங்களில் கடும் காற்று வீசும் என்று நேற்று எச்சரிக்கை விடப்பட்டதை அடுத்து வடமராட்சி கிழக்குக் கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் இடம்பெயர்ந்து உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் நேற்றைய இரவுப் பொழுதைக் கழித்தனர்.

நேற்று முற்பகல் 11.15 மணி முதல் அடுத்து வரும் 18 மணித்தியாலங்களுக்கு யாழ்ப்பாணம் முதல்

பக் 27

## மங்களநேசன் கட்சியிலிருந்து ஏற்கனவே நீக்கப்பட்டுவிட்டார்

### ஆளும் தரப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ். மாநகரசபை ஆளுந் தரப்பு உறுப்பினர் மனுவல் மங்களநேசன் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரே கட்சியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளார். அவர்மீது கட்சியின் உயர் பீடம் உரிய விசாரணையை மேற்கொண்டு முடிவை மாநகரசபைக்கு அறிவிக்கும் என ஆளும் தரப்பு உறுப்பினரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சகாவுமான கந்தசாமி கமலேந்திரன் தெரிவித்தார்.

நேற்று புதன் கிழமை அமைச்சர்

பக் 25

## தமிழக மீனவர்கள் தலைகீழாக நின்றாலும் கைதானோரை உடன் விடுவிக்க முடியாது

### அவர்கள் போதை கடத்தல்காரர்கள் என்கிறார் அமைச்சர் ராஜித

கொழும்பு, டிசெ.8

தமிழக மீனவர்கள் கூறுவது போல ஒரு தமிழக மீனவராவது இலங்கைச் சிறையில் இல்லை. அனைவரும் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுவிட்டனர். போதைப் பொருள் கடத்தல் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட இந்தியர்களே இங்கு சிறைவைக்கப்பட்டுள்ளனர் என கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

மாறாக இந்தியக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள 21 இலங்கை மீனவர்களையும் இந்தியா விடுவிக்கவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இலங்கைக் கடற்படையினரால் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டு, இலங்கைச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய

பக் 27

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com



அனைத்து மாவட்டங்களிலும் வானிலை மேகமூட்டத்துடன் காணப்படும் சாத்தியம்

# பலாலி விமான நிலையப் பகுதி பற்றி அதிகம் விசாரித்தார் நோர்வே தூதுவர்

யாழ்ப்பாணம், டிசெ. 8

மக்கள் மீளக்குடியமராத பலாலி விமான நிலையத்தை அண்டிய பகுதிகள் மற்றும் அவற்றுடன் இணைந்ததாக உள்ள இராணுவக் காவலரண்கள் அடங்கிய பகுதிகள் குறித்து நோர்வே தூதுவர் அடங்கிய அதிகாரிகள் அதிக கவனம் செலுத்தியதாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்கு நேற்று புதன்கிழமை விஜயம் செய்த நோர்வேத் தூதரக அதிகாரிகள் குழுவினர் காலையில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியைச் சந்தித்தனர். தொடர்ந்து நண்பகல் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரையும் அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக யாழ். அரச அதிபர் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாணத்தில் மக்கள் சுமுகமான முறையில் வாழ்கின்றனரா மற்றும் அவர்களது வாழ்வாதாரச் செயற்பாடுகள் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றதா என்பதை அறிவதே அவர்களின் விஜயத்தின் நோக்கமாக இருக்க வேண்டும்.

நான் அவர்களிடம் சில தேவைகள் குறித்துத் தெரியப்படுத்தினேன். முக்கியமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கான இருதய சிகிச்சைக் கூடம் பற்றியும், கண் வைத்தியசாலையை அமைப்பதற்கான காணி கிடைக்கப்பெற்றும் வைத்தியசாலை அமைப்பதற்கான நிதி இல்லாமலிருக்கின்றது என்றும் அதற்கு உதவுமாறும் கேட்டுக்கொண்டேன்.



யாழ்ப்பாணத்தின் வீட்டுத் தேவைகள் தொடர்பான புள்ளி விவரங்களையும் அவர்களுக்கு வழங்கினோம். அத்துடன் விதவைகள், அங்கவீனர்கள், முன்னாள் போராளிகளுக்கான வாழ்வாதார உதவிகள், வேலை வாய்ப்புகள் தொடர்பாகவும் அவர்களுடன் கலந்துரையாடினோம். அவர்களால் எந்தவொரு உறுதிமொழியும் எமக்குத் தரப்படவில்லை.

அத்துடன் அவர்கள் மக்கள் மீளக்குடியமர்த்தப்படாத வலி. வடக்கின் பலாலி விமான நிலையத்தை அண்டிய பகுதிகள் மற்றும் இராணுவ முகாம்கள் உள்ள பகுதிகள் பற்றி அறிவதில் அவர்கள் ஆர்வம் காட்டினார்கள். அவர்களுக்கு அந்தப் பகுதிகளை வரைபடத்தில் காட்டினோம். அவர்கள் நாங்கள் ஏற்கனவே அந்தப் பகுதிக்கு விஜயம் செய்ததாகவும் குறிப்பிட்டனர் - என்றார்.

நோர்வே அதிகாரிகள் தரப்பில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹில்டே ஹரலட்ஸ்ரர், ஜோன் ஓபுரோ டொலொட், சமாதானம் மற்றும் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நாவின் பணிப்பாளர் நாயகம் ஜிரோ பீட்டர்வன், லேசி ஜொகன்சென் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தக் குழுவினர் யாழ். ஆயரையும் சந்தித்து உரையாடினர். (த-15)

## திருட்டுக்களை தடுப்பது பற்றி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 8

யாழ்ப்பாணம் பொலிஸாரும் யாழ். வர்த்தக சங்கத்தினரும் இணைந்து யாழ். நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் இடம்பெறும் திருட்டுக்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று மாலை யாழ். வணிகர் கழகக் கேட்போர் கூடத்தில் கழகத் தலைவர் ஆர். ஜெயசேகரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் யாழ். நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள் சுமார் 30 பேர் வரை கலந்துகொண்டனர்.

யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் சமன் சிகேரா மற்றும் பொலிஸ் அதிகாரி அபயசிங்க பண்டாரா ஆகியோர் இதில் பங்கேற்று வர்த்தகர்களின் பிரச்சினைகள் பற்றி கேட்டறிந்தனர்.

வர்த்தக நிலையங்களில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களை தடுப்பதற்காக 20 பேர் கொண்ட பாதுகாப்புக் குழு ஒன்றை நியமிப்பது என இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பாதுகாப்புக்குழு இரவில் யாழ். நகரப் பகுதியில் கடமையில் இருக்கும் பொலிஸார் இரவில் ரோந்துக் கடமையில் ஈடுபட்டு பாதுகாப்புக் குழுவை மேற்பார்வை செய்வார்கள் எனவும் கூறப்பட்டது. (த-14)

## சட்டத்தரணியாக நாமல் 15 ஆம் திகதி சத்தியப் பிரமாணம்

கொழும்பு, டிசெ. 8

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சட்டத்தரணி என்பது உங்களுக்குத் தெரிந்த விடயம்தான். தெரியாத இன்னுமொரு விடயத்தைக் கேளுங்கள். அவரது புதல்வரும் எம்.பியுமான நாமல் ராஜபக்ஷவும் சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளார். எதிர்வரும் 15 ஆம் திகதி பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க முன்னிலையில் இந்த சத்தியப் பிரமாணம் இடம்பெறவுள்ளது. தந்தையார் மஹிந்த ராஜபக்ஷ, தாயார் சிராந்தி ராஜபக்ஷ மற்றும் குடும்பத்தின் முக்கிய உறுப்பினர்கள் இந்தச் சத்தியப்பிரமாண நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (த-சி)

## தூக்கில் தொங்கிய நிலையில் மாணவி சடலமாக மீட்பு

வன்னி யுத்தத்தின்போது பெற்றோர் சகோதரர்களை இழந்து பேர்த்தியாருடன் வாழ்ந்த 15 வயதுப் பாடசாலை மாணவி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை வரணி- இயற்றாலைப் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சுரேந்திரன் சுஜிவணா (வயது-15) என்னும் வரணி மகா வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவியே மரணமானவராவார்.

இவரது சடலம் கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் சடலத்தைப் பார்வையிட்டு வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி உறவினரிடம் சடலத்தை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (த-207-122)

# ஐ.தே.கவின் தேசிய மாநாடு: இன்னும் 10 நாள்களுள் முடிவு

### செயற்குழுவில் நேற்றுத் தீர்மானம்

கொழும்பு, டிசெ. 8

கட்சித் தலைவரைத் தெரிவு செய்வதற்கான ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாட்டை எப்போது கூட்டுவது என்பது தொடர்பாக தீர்மானிப்பதற்கு எதிர்வரும் 10 நாள்களுக்குள் கட்சியின் செயற்குழுவைக் கூட்டி முடிவு எடுக்கப்படுமென நேற்று கூடிய ஐ.தே.கவின் செயற்குழுக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கட்சித் தலைவர் பதவிக்காகப் போட்டியிட விரும்புவோர் எதிர்வரும் 10 நாள்களுக்குள் அதற்காக விண்ணப்பிக்கலாம் என்றும் செயற்குழுக் கூட்டத்தின்போது அறிவிக்கப்பட்டது என எதிர்க்கட்சிப் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

கட்சித் தலைமைத்துவப் பிரச்சினைகள், உட்பூசல்கள் என்பன வலுப்பெற்றுவரும் சூழ்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நேற்று முற்பகல் கட்சித் தலைமையகத்தில் கூடியது.

தலைமைத்துவப் பிரச்சினைகள் தொடர்பிலான விமர்சனங்கள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்படவில்லை.

இருப்பினும், இந்தக் கூட்டத்தின்போது தலைமைத்துவப் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 10 நாள்களுக்குள் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இதற்காக கட்சியிலிருந்து எவரும் விண்ணப்பிக்காத பட்சத்தில் தொடர்ந்து தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே பதவிவகிப்பார்.

உறுப்பினர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் ரணில் விக்கிரமசிங்கவும் அதற்காக விண்ணப்பிக்கநேரிடும். தெரிவுசெய்யும் முறைமை அதற்குப்பின்னர் அறிவிக்கப்படும்.

இதேவேளை, நேற்றைய செயற்குழுக் கூட்டத்தின்போது கட்சியிலிருந்து உறுப்பினர் பதவி தற்காலிகமாக ரத்துச்செய்யப்பட்ட புத்திக்க பத்திரண எம்.பி. மற்றும் மேல்மாகாண சபை உறுப்பினர் விராஜ் லக்திலக்க ஆகியோர் தொடர்பாகப் பேசப்பட்டது.

அதாவது, தனக்கு எதிராக குழு அமைத்து ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள முடியாது. இது சட்டவிரோதச் செயல் என புத்திக பத்திரண எம்.பி. ஒழுக்காற்று குழுவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இது தொடர்பாக ஒழுக்காற்று குழு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்றும் செயற்குழுக் கூட்டத்தின்போது அறிவிக்கப்பட்டது - என்றார் அவர். (த-சி)

# நிகழ்வுகள் இன்று

### கலைவிழா

கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளியின் வருடாந்தக் கலைவிழாவும் பரிசளிப்பும் பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளியின் வளர்ச்சிக் குழுத்தலைவர் திருமதி ச.ஜெயமதி தலைமையில் கைதடி சரஸ்வதி கலையரங்கில் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத் தலைவர் ப. செல்லத் துரை கலந்து கொள்வார். இந்நிகழ்வில் மழலைகளின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (ம-288)

### ஒளி விழா

பண்டத்தரிப்பு கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தின் ஏற் பாட்டில் ஒளிவிழா நிகழ்வு பிற்பகல் 2மணிக்கு பண்டத் தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பண் டத்தரிப்பு கிராம அலுவலர் சா. அருள்ஞானானந்தன் கலந்து கொள்வார். (ம-130)

***

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் ஒளிவிழா முற்பகல் 11 மணிக்கு கல்லூரியின் கலையரங்கில் இடம்பெறவுள்ளது. கல்லூரியின் கிறிஸ்தவ மாணவர் மன்றத் தலைவர் ஜோ.கொலின் ராஜ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி கலந்துகொள்வார். (ம-313)

***

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் ஒளிவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. தீவக வலயபிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன்குயின்ரஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (த-15)

### நூல் அறிமுகம்

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் சனாதனனால் எழுதப்பட்ட 'The Incomplete Thombu' என்ற நூலின் அறி முக விழா மாலை 5 மணிக்கு இல.195, கோயில் வீதி, நல் லூரில் உள்ள யாழ். ஹரிரேச்ட் விடுதியில் இடம்பெறவுள் ளது. இந்த நிகழ்வின்போது குமுதா சோமசுந்தரக்குருக் களின் வீணைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. (ம-319)

### பிரிவுபசாரவிழா

கைதடி நவபுரம் எருதிடல் அ.த.க.பாடசாலை அதிபர் வே.பாலசுப்பிரமணியத்தின் பிரிவுபசார விழா பி.ப 12.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள், பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப் பினர்கள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-121)

### பணிநயப்புவிழா

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் அதிபராக இருந்து ஓய்வு பெற்ற சுப்பிரமணியம் புண்ணியசீலனின் பணி நயப்பு விழா காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது. கல்லூரியின் அதிபர் வே.க. இரட்ணகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் விருந்தினராகக் கலந்து கொள்வார். (ம-38)

### சஞ்சிகை வெளியீடு

முரசுமோட்டை முருகானந்த வித்தியாசாலையின் உயர்தர மாணவர்களால் 'முரசு' என்ற சஞ்சிகை இன்று நண்பகல் 12 மணியளவில் வெளியிடப்படுகின்றது. யாழ். பல்கலைக்கழகப் பொருளியல்துறை மூத்த விரிவுரையாளர் பேராசிரியர் சின்னத்தம்பி முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சஞ்சிகையை வெளியிட்டு வைப்பார்.

# வீரவன்ஸவை இனவாதியாகக் காட்ட தமிழ் ஊடகங்கள் முயற்சியாம்

## அவரே சொல்கிறார்

கொழும்பு, டிசெ.8

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள மக்களின் இதயங்கள் உடைந்து போயுள்ளன. அவர்களின் மனங்களை முழுமையாக எம்மால் வென்றெடுக்க முடியவில்லை. அனைவரும் ஒன்றுபட்டே அதனைச் செய்ய முடியும். தமிழ் ஊடகங்களில் என்னை இனவாதியாகவே காட்ட முனைகின்றனர். ஆனால், நான் அப்படிப்பட்டவன் அல்லன்.

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்றுக்காலை நடைபெற்றது. இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்காக அனைத்து சமூகத்தினரும் ஒன்றிணைந்து பணியாற்றவேண்டும்.

தமிழ் மொழியால் உரையாற்ற முடியாததையிட்டு நான் கவலையடைகின்றேன். நாடாளுமன்றத்தில் தமிழ் மொழியை கற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வேலைப்பளு காரணமாக அதில் கலந்துகொள்ள முடியாமல் போனது.

அந்தப் பயிற்சிகளில் கலந்துகொண்டிருந்ததால் சிறிதளவு தமிழிலாவது நான் இந்த வைபவத்தில் உரையாற்றியிருப்பேன். மாணவ சமுதாயத்தின் கைகளிலேயே எதிர்காலம் தங்கியுள்ளது. சர்வதேச ரீதியாக நாட்டுக்கு புகழையும் கீர்த்தியையும் கொண்டுவர வேண்டியது மாணவர்களின் கடமையாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நாட்டுக்கு சமாதானம் ஏற்பட்டுள்ளது. தமிழர்கள் சிங்களவர்கள் முஸ்லிம்கள் என அனைவரும் ஒற்றுமையாக வாழ்வதற்கான வழியை ஜனாதிபதி ஏற்படுத்திக்கொடுத்துள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேசங்கள் தற்போது துரிதமான வளர்ச்சியை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது. அந்தப் பகுதிகளிலுள்ள மக்களின் இதயங்கள் உடைந்து போயுள்ளன.

அவற்றை முழுமையாக வென்றெடுக்க எம்மால் முடியாது போனது. அனைவரும் ஒன்றுபட்டே அதனை செய்ய முடியும். தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றுபடுவதன்மூலமே இலங்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம்.

பிரிந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்திலிருந்தால் எம்மால் முன்னேற்றத்தை அடைய முடியாது. சில வெளிநாட்டு சக்திகள் எமக்குள் பிரச்சினைகளை ஏற்படுத்தி அதன் மூலம் தமது சக்தியை நிலைநாட்ட முயலுகின்றன.

அத்தகைய சர்வதேச சக்திகளின் அழுத்தங்களை தோற்கடிக்கக்கூடிய சக்தி மாணவ சமுதாயத்தினரிடையே உள்ளது. அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் செயற்பட்டால் அநேக பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணலாம்.

சமாதானம் தற்போது ஏற்பட்டுள்ளது. கடந்த காலத்தில் எம்மிடம் காணப்பட்ட தவறுகளை திருத்திக்கொள்வதற்கான காலம் தற்போது எமக்கு வந்துள்ளது. தமிழ் ஊடகங்களில் என்னை இனவாதியாகவே காட்ட முனைகின்றனர். நான் அப்படிப்பட்டவன் அல்லன்.

நானும் மனித இனத்தைச் சேர்ந்தவன். இன, மத, பேதத்தை மறந்து சேவை செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்டிருப்பவன். இந்து பௌத்த சமயத்துக்கும் கலாசாரத்துக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு. எனவே, நாங்கள் பிரிந்து நிற்காமல் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

இந்த நாள் எனது அரசியல் வாழ்க்கையில் மிக முக்கியமான நாள். கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் பரிசளிப்பு விழாவுக்கு பிரதம விருந்தினராக என்னை அழைத்தமைக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் பாடசாலைக்கும் என்னாலான உதவிகளை செய்து கொடுப்பேன் - என்றார் அவர். (த-சி)

# நாடு - நகரத் திட்டமிடல் திருத்தச் சட்டமூலம் வாபஸ்

## சபையில் அறிவிப்பு

கொழும்பு, டிசெ.8

நாட்டில் பெரும் சர்ச்சையையும், பல தரப்பினரதும் எதிர்ப்பையும் கிளப்பிவிட்ட நாடு - நகர திட்டமிடல் திருத்தச் சட்டமூலம் அரசால் வாபஸ் பெறப்பட்டது.

அரசின் சார்பில் ஆளுங் கட்சியின் பிரதம கொரடாவும், அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன நேற்று இந்தச் சட்டமூலத்தை வாபஸ் பெறுவதாக நாடாளுமன்றில் கூறினார்.

நாடு - நகர திட்டமிடல் திருத்தச் சட்டமூலம் ஏற்கனவே நாடாளுமன்றில் (முதலாம் வாசிப்பு) சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இரண்டாம் வாசிப்பின்போது விவாதிக்கப்படவிருந்த நிலையிலேயே இந்தச் சட்டவரைவு வாபஸ் பெறப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அமைச்சுகள் நீக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இப்புதிய திட்டத்தின்படியே நாடு - நகர திட்டமிடல் திருத்தச் சட்டம் ஏற்கனவே சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இத்திருத்தச் சட்டவரைவு தொடர்பாக உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பில் இவ்விடயம் சகல மாகாணசபைகளிலும் விவாதிக்கப்பட்டு தீர்மானம் பெறவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே குறிப்பிட்ட திருத்தச் சட்டமூலம் வாபஸ் பெறப்பட்டுள்ளது. (த-சி)

# பெண் எம்.பி தலதாவுக்கு மேர்வின் 'பறக்கும் முத்தம்'

## சபையில் சிரிப்பொலி

ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட எம்.பியான தலதா அத்துகோரளவுக்கு அமைச்சர் மேர்வின் சில்வா சபையில் வைத்துப் 'பறக்கும் முத்தம்' (Flying Kiss)கொடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை தெங்கு அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதம் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. இதன்போது தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமாரவுக்கும் ஐ.தே.க. எம்.பி. தலதா அத்துகோரளவுக்குமிடையே அடிக்கடி வாதப்பிரதிவாதம் ஏற்பட்டது.

அமைச்சர் ஜகத் புஷ்பகுமாரவும் தலதா அத்துக்கோரளவும் வாதிட்டுக்கொண்டிருக்கையில் சபைக்குள் வந்த அமைச்சர் மேர்வின் சில்வா 'தலதா என் இதய தேவதையே' என்று கூறிவிட்டு 'பறக்கும் முத்தம்'(Flying Kiss) வழங்கினார். இதனால் சபையில் மட்டுமன்றி கலரியிலும் பெரும் சிரிப்பொலி எழுந்தது. தலதா அத்துக்கோரளவும் பலமாக சிரித்துக்கொண்டு அமர்ந்திருந்தார். (த-சி)

# கோதுமை மா இறக்குமதியை நிறுத்தி உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்குக!

## யாழ். மக்களின் கூடுதலான பாவனை அரிசிமாவே என்கிறார் பிரதமர்

கொழும்பு, டிசெ.8

கோதுமை மா இறக்குமதி செய்வதை அரசு முற்றாக நிறுத்தி அதற்குப் பதிலாக அரிசிமா மற்றும் சோளம் மாவைப் பாவிக்க வேண்டும் - என்று பிரதமர் டி.எம்.ஜயரட்ன நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அத்துடன், பழ வகைகள் இறக்குமதியும் முற்றாக நிறுத்தப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசிமாவின் பாவனையையும், சோள மாவின் பாவனையையும் ஊக்குவிக்கவேண்டும். தமிழ்நாட்டில் இட்லி, தோசை ஆகியவற்றுக்கு அரிசிமாவே பயன்படுத்தப்படுகின்றது.

யாழ்ப்பாண மக்கள் கோதுமை மாவின் பாவனையை கணிசமான அளவு குறைத்து அரிசி மாவையே பயன்படுத்துகின்றனர்.

நாம் பாண் சாப்பிடுவதை நிறுத்தி வெளிநாடுகளுக்குச் செல்லும் எமது பணத்தைத் தடுக்கவேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து நாம் பழவகைகளை இறக்குமதி செய்கின்றோம். அதை நிறுத்தி இங்கு பழங்களை உற்பத்தி செய்ய நாம் ஊக்குவிக்கவேண்டும்.

இலங்கையில் காய்கறிகள் உற்பத்தி காலத்திற்குக் காலம் கூடுவதும் குறைவதுமாகவுள்ளது. கூடுகின்றபோது மீதமானவற்றை நாம் வீசுகின்றோம். வெளிநாடுகளில் வீசாது பாதுகாக்கும் முறைமை உள்ளது. இங்கும் ஆகக்குறைந்தது இரண்டு மாதங்களாவது அவற்றைப் பாதுகாக்கக்கூடிய ஒரு முறைமை தேவை - என்றார். (த-சி)

# தமிழ் வர்த்தகர் கடத்தல் குறித்து பல கோணங்களில் விசாரணை

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 8

கொழும்பு, கொட்டாஞ்சேனை, ஜெம்பட்டா வீதியில் தமிழ் வர்த்தகர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக பல கோணங்களில் தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்று மூன்று தினங்கள் கடந்த நிலையிலும் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த தமிழ் வர்த்தகரைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட வெள்ளை நிற வான், அதன் இலக்கத்தகடு குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர்.

கடத்தப்பட்ட தமிழ் வர்த்தகரான கிறிஸ்தோபர் பெர்னாண்டோவுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் மற்றும் வர்த்தக, சமூக ரீதியில் எவராவது எதிராளிகள் உள்ளனரா என்பது தொடர்பாகப் பொலிஸார் அதி தீவிரமாகப் புலனாய்வு செய்துவருகின்றனர் எனத் தகவல்கள் கசிந்துள்ளன.

அதுமாத்திரமன்றி, கிறிஸ்தோபர் பெர்னாண்டோவின் வீட்டுத் தொலைபேசி மற்றும் அவரதும், அவரது குடும்ப அங்கத்தவர்களதும் தொலைபேசிகளுக்கு அண்மைக்காலமாக வந்த அழைப்புகள் தொடர்பாகவும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என நம்பகரமாகத் தெரியவருகிறது.

கிறிஸ்தோபர் பெர்னாண்டோவின் உறவினரான கொழும்பு மாநகரசபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் அன்ரன் ரோய் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்கவிருந்தார். எனினும், ஜனாதிபதி நாட்டில் இல்லாததால் அச்சந்திப்பு இடம்பெறவில்லை.

அதேபோன்று பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவையும் சந்திக்க அனுமதி கோரியுள்ளார் என ரோய் தெரிவித்தார்.

வர்த்தகரான கிறிஸ்தோபர் பெர்னாண்டோ கடத்தப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவரை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியும் ஜம்பட்டா பகுதி மக்கள் கடந்த இரண்டு தினங்களாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

# வர்த்தக நிறுவனங்களுக்கு வீசா சலுகை; பிரிட்டன் முடிவு

தெரிவுசெய்யப்பட்ட சில இலங்கை வர்த்தக நிறுவனங்களுக்கு வீசா வழங்குவதில் விசேட சலுகைகள் வழங்கப்படவுள்ளது என பிரிட்டன் அறிவித்துள்ளது.

பிரிட்டனுக்கு அடிக்கடி விஜயங்களை மேற்கொள்ளும் சில வர்த்தக நிறுவனங்களின் பணியாளர்களுக்கு வீசா வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது. இலங்கையைச் சேர்ந்த இருபது நிறுவனங்களுக்கு இந்த விசேட சலுகை வழங்கப்படவுள்ளது என தெரியவருகிறது.

இவ்வாறு வீசா வழங்குவதற்காக விசேட கட்டணமொன்று அறவீடு செய்யப்படவுள்ளதுடன் துரித கதியில் வீசா வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

# ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழக உபவேந்தரை பதவி விலகக் கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ. 8

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்பாக மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து ஊர்வலமாக வந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னால் உபவேந்தருக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக லிப்டன் சுற்றுவட்டத்திலிருந்து நேற்று பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்களுடன் உயர் கல்வி அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அதன் உயர் அதிகாரிகள் ஆகியோர் பேச்சு நடத்தினர்.

# இந்தோனேஷியா விரைந்தார் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ. 8

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக்காலை இந்தோனேஷியாவிலுள்ள பாலித்தீவுக்கு புறப்பட்டுச் சென்றார்.

இந்தோனேஷியா அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட 'நாட்டுத் தலைவர்கள் ஜனநாயக அரங்கம்' நிகழ்வில் கலந்துகொள்ளவே ஜனாதிபதி இந்தோனேஷியா சென்றுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (த-சி)

# ஊனமுற்ற நிலையில் காணப்படும் 50 வீதமான முல்லை வர்த்தகர்கள்

முல்லைத்தீவு, டிசெ.8

முல்லைத்தீவு நகர வர்த்தகர்களில் ஐம்பது வீதமானோர் ஊனமுற்றவர்களாகக் காணப்படுகின்றனர் என்று வர்த்தக சங்க நிர்வாகம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு நகரில் இடப்பெயர்வுக்கு முன்னர் சுமார் 165 வர்த்தகர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். ஆனால் தற்போது 25 வரையான வர்த்தகர்கள் மட்டுமே தமது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

அதிகமானவர்கள் முதல் இல்லாததால் தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இவர்களுள் பலர் வங்கிகளில் கடன்களைப் பெற்று வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் முல்லைத்தீவு நகர வர்த்தகர்களில் ஐம்பது வீதமானவர்கள் கடந்த கால யுத்தம் காரணமாக ஊனமுற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஆனால் கடந்தகாலங்களைப் போன்று வியாபார நடவடிக்கைகள் அமையவில்லை. இதனால் வருமானமும் இல்லை.

அத்துடன் முல்லைத்தீவு நகர வீதிகள் எவையும் புனரமைக்கப்படாத நிலையில் பெரிய குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மழை நீர் தேங்கிக் காணப்படுகின்றது.

இதனால் வாகனங்கள் செல்லும் போது சேற்று நீர் வீசப்படுவதால் விற்பனைக்கு வைக்கப் பட்டிருக்கும் பொருள்கள் சேதமடைவதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (க-6)

# கிளிநொச்சி பொலிஸ் நிலையங்களில் மக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக உரிய விசாரணைகள் நடைபெறுவதில்லை

கிளிநொச்சி, டிசெ.8

கிளிநொச்சிப் பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் பொது மக்களால் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக உரிய முறையில் விசாரணைகள் நடைபெறுவதில்லையெனப் பல தரப்பினராலும் குறை கூறப்படுகின்றது.

கிளிநொச்சி, அக்கராயன்குளம், வட்டக்கச்சி ஆகிய பொலிஸ் நிலையங்களில் பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் எந்த வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படாமல் மாதக் கணக்கில் கிடப்பில் போடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பாதிக்கப்பட்ட பலர் முறைப்பாடுகளைத் தெரிவித்துவிட்டுப் பொலிஸ் நிலையங்களுக்குத் தாம் அலைந்து திரிவதாகவும் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளமை தொடர்பாகக் கடந்த 14 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும் சந்தேக நபர் இதுவரை கைது செய்யப்படாததோடு அது தொடர்பான விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறே பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு தெரிவித்த பலரும் அலைந்து திரிவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-6)

# மன்னார் ஹிலாறி முன்பள்ளியில் ஒளிவிழாவும், பட்டமளிப்பு விழாவும்



துணுக்காய், டிசெ.8

மன்னார் காவற்கட்டு பகுதியில் அமைந்த ஹிலாறி முன்பள்ளியின் 2011 ஆம் ஆண்டுக்கான ஒளி விழா மற்றும் பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

மேற்படி நிகழ்வுகள் அருட் சகோதரன் யோகானந்தன் தலைமையில் புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன.

மங்கள விளக்கை பிரதம விருந்தினர்களான அருட் சகோதரர்களான சாந்த டயஸ், அன்னை ஜோசேப், அருட் சகோதரர் ஞானசேகரம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து தரம் ஒன்றுக்குச் செல்லும் மாணவர்களைக் கௌரவிக்கும் முகமாகப் பட்டமளிப்புக்கள் இடம் பெற்றன. பின்னர் சிறார்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பொது மக்கள், பெற்றோர், அருட் சகோதரிகள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

யுத்தத்தின் பின்னர் இத்தகையதொரு சிறார்களின் நிகழ்வு சிறப்பான முறையில் நடைந்தோறியமை கிராம மக்களிடையே மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-415)

# கலாசாரத்துக்குப் புறம்பான செயற்பாடுகளை தடுத்து உதவுமாறு கோரிக்கை

வவுனியா, டிசெ.8

வவுனியாவிலுள்ள சில கிராமங்களில் இடம்பெறுவதாகக் கூறப்படும் கலாசாரத்துக்குப் புறம்பான செயற்பாடுகளைத் தடுத்து உதவுமாறு பொலிஸாருக்குப் பொது மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வவுனியா தேக்கவத்தைக் கிராமத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் கூட்டத்தின்போது இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மேலும் இத்தகைய கலாசாரச் சீர்கேடுகளால் தமது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதோடு கலாசாரத்துக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸாரால் உறுதி மொழி வழங்கப்பட்டது.

சமீப காலமாக வவுனியாவில் பல கலாசாரச் சீரழிவான நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுகின்றமை சமூக ஆர்வலர்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-421)

# சிறார்கள் மகிழ்வுடன் இருந்தால்தான் நாமும் மகிழ்வுடன் இருக்க முடியும்

## ஆரோக்கியபுரம் பங்குத்தந்தை கூறுகிறார்

அக்கராயன்,டிசெ.8

சிறார்கள் மகிழ்வுடன் இருக்கும்போதுதான் ஒளிவிழா போன்ற நிகழ்வுகள் சிறப்புப் பெறுகின்றன. இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் அக்கராயன் ஆரோக்கியபுரம் பங்குத்தந்தை அருட்திரு கமலானந்தன் அடிகளார்.

அக்கராயன் சமாதானபுரம் அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபையால் நடத்தப்படும் முன்பள்ளியின் ஒளிவிழா நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இறை சிந்தனையுடன் மகிழ்வாக இருக்க வேண்டும் என்பதற்காகவே பாலனின் பிறப்பை நாம் கொண்டாடுகின்றோம். இந்த நாளில் சிறார்கள் மகிழ்வுடன் இருப்பதை நாம் அவதானிக்கின்றோம்.

சிறார்கள் மகிழ்வுடன் இருக்கும்போதுதான் நாமும் மகிழ்ச்சியாக இருக்க முடியும். யேசு பிரான் கூட சிறார்கள் மீது அதிக பாசம் கொண்டிருந்தார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(க-410)

# வவுனியா முகாம்களில் தங்கியிருந்த சிலரின் மீள் குடியமர்வு பணி ஆரம்பம்

முள்ளியவளை, டிசெ.8

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆறுமுகத்தான் குளம் கிராமத்தில் நேற்று முன்தினம் மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலுள்ள நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த இவர்கள் அழைத்து வரப்பட்டு கடந்த திங்கட்கிழமை குமிழமுனைப் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

64 குடும்பங்களைச் சேர்ந்த 213 பேர் இவ்வாறு மீள்குடியமர்வு செய்யப்பட்டனர். (க-433)

# புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தற்காலிக வீடமைக்கும் பணி

முல்லைத்தீவு, டிசெ.8

பருவமழையைத் தொடர்ந்து புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்த மக்களின் நலன்கருதி பொது நிறுவனங்களின் உதவியுடன் தற்காலிக வீடுகள் அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருவதாகப் புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் ஜெயகாந்த் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டு வருகின்றார்கள். அண்மையில் பெய்த தொடர் மழை காரணமாக நூற்றுக் கணக்கான குடும்பங்கள் வாழ்விட வசதியின்றி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குடும்பங்களின் நிலையை உணர்ந்த பல பொது நிறுவனங்கள் இவர்களுக்குத் தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளன. இந்த வகையில் சோபா நிறுவனம் தேவிபுரத்தில் 325 தற்காலிக வீடுகளையும், டிஆர்.சி நிறுவனம் கோம்பாவில் பகுதியில் 450 வீடுகளையும், ஐ.ஓ.எம். நிறுவனம் வள்ளிபுரத்தில் 225 வீடுகளையும், யூ.என்.ஓ.பி.ஈ. நிறுவனம் உடையார்கட்டு தெற்குப் பகுதியில் 200 வீடுகளையும் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

தற்காலிக வீடுகள் அமைக்கும் பணி துரிதமாக இடம் பெற்று வருவதாகத் தெரிவித்துள்ள உதவி அரச அதிபர், இந்த வீடுகள் அமைப்பதன் மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் நன்மை அடைவார்கள் என்றும் கூறினார்.

(க-115)

# நிரந்தர வைத்தியரைத் தேடும் ஒட்டுசுட்டான் மத்திய மருந்தகம்

(நேற்றைய தொடர்ச்சி)

இந்தப் பிரதேசத்தில் உள்ள மக்கள் நோயினால் ஏற்படும் அவதியுடன் வீதியில் காவல் நிற்கவேண்டும். பஸ்ஸில் பல இன்னல்களை எதிர்கொண்டு வவுனியா அல்லது முள்ளியவளை செல்ல வேண்டும். இந்தப் பிரதேசத்தில் விசகடிகள் அடிக்கடி ஏற்படுவதுண்டு. பாம்புகடித்த ஒருவரை உடனே கொண்டு செல்ல முடியாது. கொண்டு சென்றாலும் அங்கே வைத்தியர் இல்லாத பட்சத்தில் முள்ளியவளை அல்லது வவுனியா செல்வதானால் அதிலேயே சில மணி நேரம் கழிந்து விடும்.

இப்படியே காலம் கடந்து விட்டால் உயிரைக்கூட இழக்க வேண்டிய நிலை. அதுமட்டுமல்ல ஒரு கர்ப்பவதித்தாய்க்குச் சுகவீனம் என்றால் இங்கே முதலுதவிக்குக்கூட எவரையும் நாடமுடியாதுள்ளது. இரவு நேரம் என்றால் விடியும் வரை உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டு இருக்க வேண்டும். இந்தப் பிரதேசத்தில் தனியார் சிகிச்சை நிலையம் கூட இல்லை.

யுத்த காலத்திலும், இடம் பெயர்ந்த வேளையிலும் வைத்திய வசதிகளைத் தாராளமாகப் பெறமுடிந்தது. அதுமட்டுமல்ல முகாமில் இருந்தபோதும் வசதிகள் கிடைத்தன.

ஆனால் மக்களை மீள்குடியமர்த்திவிட்டு வைத்தியசாலையையும் புனரமைப்புச் செய்துவிட்டு சில தாதியர்களையும் நியமித்து விட்டு அங்கே நிரந்தரமில்லாத வைத்தியரையும் வைத்துக் கொண்டு பிரதேச மக்கள் சிகிச்சை பெறுகிறார்கள் என்ற செய்திகள் மட்டுமே ஊடகங்கள் மூலம் தெரிவிக்கப்படுகின்றன.

ஆனால் இந்தப் பிரதேச மக்கள் சிகிச்சை பெறுவதில் படும் துன்பங்கள் அவர்களின் நோயை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன. நாளாந்தம் கைக் குழந்தைகளோடு வயதானவர்களை ஏற்றிக் கொண்டு வருவதிலும் போவதிலும் மக்களின் காலம் கழிகிறது.

இவற்றைக் கருதி ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலைக்கென நிரந்தர வைத்தியரை நியமித்து நோயற்ற வாழ்வு வாழ வழி செய்யுங்கள் எனவும் மக்கள் உருக்கமான முறையில் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இ.இராஜ் தனபால்

(முற்றும்)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசு தனக்குள்ள பலத்தை நாட்டின் பலமாக்கினால்...

கடந்த ஆண்டில் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இருபது இலட்சம் மெற்றிக் தொன் அரிசியில், வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் இருந்தே அதிக அளவு பெறப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு தொடக்கம் எமது நாட்டில் இருந்து அரிசியை ஏற்றுமதி செய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. அத்திட்டத்தில் வடக்கு, கிழக்குப் பகுதிகளும் உள்வாங்கப்படும்.

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த யாப்ப அபயவர்த்தனா, இத்தகவலை தாம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் வெளியிட்டிருக்கிறார். அரிசி உற்பத்தியில் கிழக்கும் வடக்கும் பெரும் பங்களிப்பை வழங்கி வருவது ஒன்றும் புதிய சங்கதி அல்ல. அந்தப் பிரதேசங்களில் போர் வெடித்து மக்களின் வாழ்வியல் சீர்கெட்டுப் போனதால், இரண்டு மாகாணங்களிலும் விவசாயம் மட்டுமன்றி ஏனைய தொழில் வளங்களும் அடி மட்டத்தை நோக்கி இறங்குமுகமாகின.

இப்போது நிலைமை சீரடைந்துள்ளதால், பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு விவசாயிகளுக்கு விசேட ஊக்குவிப்புத் திட்டங்களை வகுத்து, அவர்களின் தொழில் தேவைகளை துரித கதியில் நிறைவேற்ற அரசு முன்வரவேண்டும். பெரும்பான்மையின மக்களைவிட வடக்கு, கிழக்கு மக்கள், விவசாயிகள் கடும் உழைப்பாளிகள், விடாமுயற்சி உடையவர்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று.

எனினும் இரண்டு மாகாணங்களிலும் விவசாய உற்பத்தியை பெருக்குவதற்கான வாய்ப்பும் வசதியும் பல வருடங்களாக முடங்கிப் போனதால், அவற்றுக்கென துரித அபிவிருத்திப் பணிகள் காலம் தாமதிக்காமல் தொடங்கப்பட வேண்டும்.

வடக்கு மாகாணத்தை விட,கிழக்கு அரிசி உற்பத்தியில் முன்னணி வகிக்கும் பிரதேசமாகும். மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் நீர்ப்பாசனத் தேவைகள் வேண்டிய அளவுக்கு பூர்த்தி செய்யப்படவில்லை என்று நாடாளுமன்றத்தில் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் பொன்.செல்வராசா சுட்டிக்காட்டி உள்ளார். 2004 ஆம் ஆண்டின் ஆழிப் பேரலையின்போது கரையோரப் பகுதிகள் பாதிக்கப்பட்டு குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டதோடு மட்டுமன்றி பல ஆயிரக் கணக்கான ஏக்கர் வயல் நிலங்களில் நெற்செய்கை மற்றும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதுள்ளதையும் நாடாளுமன்ற உறுப்பினர் விவரித்துள்ளார்.

இதேவேளை, வடக்கின் நெற்களஞ்சியமாக விளங்கிய வன்னிப் பிரதேசத்தில் நெடுங்காலமாக விவசாயத்துக்கு கைகொடுத்த குளங்கள், போர் முடிவுற்று மூன்று ஆண்டுகளாகும் வேளையிலும் திருத்தப்படாமலும், சீர்செய்யப்படாமலும் உள்ளன. அவற்றைத் தாமதமின்றிப் புனரமைத்தால் நெல் உற்பத்தியை மட்டுமன்றி ஏனைய விளைபொருள்களையும் அதிக அளவில் உற்பத்தி செய்யமுடியும்.

அதிக மழை, குளங்கள் பெருக்கெடுப்பு ஆகிய இயற்கைக் காரணங்களால் வன்னி மக்கள் மீளக்குடியமர்வின் பின்னர் பல கஷ்டங்களை அனுபவிப்பது மட்டுமன்றி, நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செலுத்தவே கஷ்டப்படுகிறார்கள். பல வகைகளாலும், வழிகளாலும் இன்னலுறுகிறார்கள். அதனால் நெற்செய்கைக்காகப் பெற்ற வங்கிக் கடன்களை மீளச் செலுத்த முடியாதுள்ளனர்.

அவர்களுக்கு உதவும் பொருட்டு விவசாயக் கடன்களை மானியமாக்க வேண்டும் என்ற கோரிக்கை விவசாய அமைச்சரிடம் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

அரிசி ஏற்றுமதி செய்யும் திட்டத்தில் வடக்கையும் கிழக்கையும் இணைக்க உள்ளதாக அறிவித்திருக்கும் விவசாயத்துறை அமைச்சர், அந்தக் கோரிக்கையை பரிசீலித்து அப்பகுதி விவசாயிகளுக்கு உதவ வேண்டும். அத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ள மூன்று வருட காலத்துக்குள் வடக்கு விவசாயிகளின் தேவைகளையும் குறைகளையும் தீர்க்க முன்வரவேண்டும்.

குடாநாட்டிலும் வயல் பிரதேசங்களில் உள்ள சிறுகுளங்களைப் புனரமைத்து ஆழமாக்கும் திட்டத்தை உருவாக்கிச் செயற்படுத்தினால் நெற்செய்கையை அதிகரிக்க வாய்ப்பு உண்டாகும்.

விவசாயத்துறை அமைச்சர் வகுத்துள்ள அரிசி ஏற்றுமதி செய்யும் திட்டம் நாட்டின் அபிவிருத்தியின் முதற்குறியீடாக விளங்க முடியும். நாட்டின் சகல பகுதிகளிலும், விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளைப் பெருக்குவதற்கு விசேட ஏற்பாடுகள் ஏற்றத் தாழ்வின்றி, அந்தந்தப் பிரதேசத்தின் தேவைகளை மட்டுமன்றி, விசேட தேவைகளையும் கருத்தில் கொண்டு ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

அமைச்சரின் அரிசி ஏற்றுமதித் திட்டம் திறம்படச் செயற்படுவதற்குச் சமாந்தரமாக, தமிழ் மக்களை வாட்டும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலும் அரசு, இழுத்தடிக்காமல் நியாய சிந்தனையுடனும் நாட்டு நலன் கருதியும் செயற்பட முன்வரவேண்டும். தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரசைகளாக வைத்திருக்க வேண்டும் என்று படிந்து இறுகியுள்ள அழுக்காறை நீக்கினால் அது ஒன்றும் கடினமானதல்ல.

எந்தப் பென்னம்பெரிய விவகாரத்திலும், வல்லமை உள்ள சக்தியிடம் மனம் உண்டானால் இடமுண்டு. அத்திசை நோக்கிச் செயற்பட அரசு மனங்கொண்டால், இப்போது அதற்குள்ள பலம் போதுமானதாகும். அரசு தனக்குள்ள பலத்தை நாட்டின் பலமாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படின் எதுவும் சாத்தியமே . ஆக்கபூர்வமான திசை நோக்கிய சிந்தனை, நாட்டை எல்லா வழிகளிலும் நிலைகளிலும் உயர்த்தும். உய்த்துணருமா அரசு...?

# வட மாகாணத்தில் துஷ்பிரயோகங்கள் உறுதிப்படுத்தினால் உடன் விசாரணை

## யாழ்.செயலகக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், டிசெ.08

வடமாகாணத்திலுள்ள கல்வி நிறுவனங்களில் போதைப் பொருள் பாவனை, சிறுவர் உரிமை மீறல் இடம்பெறுவது உறுதிப்படுத்தப்பட்டால் உடனடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின் போதே இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வடமாகாணத்திலுள்ள பாடாசலைகள், தனியார் கல்வி நிலையங்களில் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் உரிமை மீறல், பால் நிலை சமத்துவமின்மை போதைப்பொருள் பாவனை இடம்பெறுவதாக உறுதிப்படுத்துமிடத்து உடனடி விசாரணை மேற்கொள்ளப்படும். அத்துடன் ஆக்கபூர்வமான நடவடிக்களும் மேற்கொள்ளப்படும்.

வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுவால் இவை இனங்காணப்பட்டு உறுதிப்படுத்தப்படுமிடத்து உடனடி விசாரணை மேற்கொள்ளப்படும்.

எனவே பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களில் இவ்வாறான செயல்கள் இடம்பெறுமிடத்து வடமாகாணக் கல்வி அபிவிருத்திக் குழுவுக்குத் தகவல் வழங்க முடியும் என்று இந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-14)

# அஞ்ஞான இருள்போக்கும் கார்த்திகைத் தீபம்

## இன்று குமராலய தீபம்

அருவமும் உருவமாகவும், ஆதியாகவும் அநாதியாகவும், ஒன்றாகவும் பலவாகவும் நின்ற அருட்பெருஞ்சோதியின் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறுமுகமும், பன்னிரு கரமும் கொண்டு உலகம் உய்ய ஒரு திருமுருகன் உதித்தான். சரவணப் பொய்கையிலே ஆறுகுழந்தைகளாக வளர்ந்தபோது, கார்த்திகைப் பெண்கள் அறுவர் பாலமுதம் ஊட்டி தாலாட்டிச் சீராட்டி கண்மணி முருகனைப் போற்றி வளர்த்தனர். அதனால் அவன் கார்த்திகேயன் ஆனான்.

முருகப்பெருமானுடைய விரதம் கார்த்திகை விரதம். மாலை 5 மணிக்குமேல் கார்த்திகை நட்சத்திரம் இருக்கும் நாள் விரதநாளாகும். இந்த விரதத்தின் சிறப்பினையும் மகிமையையும் கார்திகைப் பெண்களுக்கு சிவபெருமான் எடுத்துக்கூறி அருள் பாலித்தார். முருகப்பெருமான் அவர்களிடமிருந்து வளர்ந்த காரணத்தால், அவர்களுடைய நாளான கிருத்திகை நட்சத்திரத்தில் விரதமிருந்து கந்தனை வழிபடு வோர்க்கு கல்வி, செல்வம், ஆயுள், நல்ல மனைவி மக்கள், சகல செல்வங்களும் பெற்று வாழ்வார்கள் என சிவபெருமான் அருள் புரிந்தார்.

பரணிநாளில் விரதம் தொடங்கி, கார்த்திகையில் உபவாசம் இருந்து வழிபாடு செய்து, அடுத்தநாள் ரோகினியில் காலையில் நீராடி, நித்திய வழிபாடு செய்து, அடியார்களோடு உணவு உண்ணவேண்டும். திருக்கார்த்திகை தினத்தன்று தீபங்கள் ஏற்றி இறைவனைச் சோதிவடிவில் வழிபடுவர். அடி முடியில்லாத பரஞ்சோதியாக நின்ற சிவ பரம்பொருள் நெருப்புக் கம்பத்திலிருந்து பரமசிவனாக வெளிப்பட்டு, பிரம்மா விஷ்ணுவுக்கு காட்சி கொடுத்தபின், நெருப்புக் கம்பமானது மலையாக அமைந்தது. இதுவே அண்ணாமலை, பிரம்மா விஷ்ணுவுக்கு நெருப்புக் கம்பத்திலிருந்து லிங்கோற்பவராகக் காட்சி கொடுத்த நாளே சிவராத்திரி. அவர்கள் வேண்டுதலால் இவ்வுருவை மீண்டும் திருக்கார்த்திகை நாளில் காட்டுவோம் என அருளினார். பரமசிவம் அடிமுடியில்லாத நெருப்புக் கம்பமாக நின்று, அனைத்து உலகங்களையும் சோதிவடிவாக, ஒளிவெள்ளமாக்கிய நாள் கார்த்திகைதீபம். திருக்கார்த்திகை நாளை கார்த்திகை தீபமாகக் கொண்டாடுகிறோம்.

நன்றி: ஞானச்சுடர்

# உன்னைப்போல் அயலவனையும் நேசி

அன்பின் வடிவமான தெய்வத்தை ஒருவன் எவ்வாறு கண்டுகொள்ள முடியும். இந்த உலகில் அன்னை, தந்தை, சகோதரன், மனைவி, நண்பர்கள், சுற்றத்தினர் ஆகியோர் வெளிப்படுத்தியவாறான பல்வேறு வடிவங்களை அன்பு ஏற்றுக்கொள்கிறது.

இத்தகைய உலகியல் அன்பில் நீ சுயநலத்தையும் சுயலாபத்தையுமே காண்கிறாய். ஆனால் தெய்வீக அன்பு முழுமையாக சுயநலமற்றது. இறைவன் எல்லோரையும் நேசிப்பதைப்போல நீயும் எல்லோரையும் நேசிக்க முயற்சிசெய்ய வேண்டும். பகவத் கீதையில் "மனவாம்ஸோ ஜீவலோகே ஜீவ பூதஸ் ஸநாதனக" அனைவரும் தெய்வீகப் பொறிகள் என்பது இதன் பொருள். ஆகவே இறைவன் உன்னை நேசிப்பது போலவே நீயும் மற்றவர்கள் எல்லோரையும் நேசித்து அவர்களுக்கு மகிழ்ச்சி கொடுக்கவேண்டும். எல்லாவற்றுக்குள்ளும் ஒரே தெய்வம் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். இந்த உண்மையைப் புரிந்துகொண்டு இந்த சத்தியத்தில் நம்பிக்கையை வளர்த்துக்கொண்டால் ஒவ்வொருவரையும் இவனால் நேசிக்கமுடியும். இன்று இத்தகைய அன்பைக் காணமுடிவதில்லை என்றால் இறைவனுடைய வாக்கில் மனிதனுக்கு நம்பிக்கை இல்லை என்றுதான் பொருள்.



## சாயி சிந்தனை

### நாளை

கார்த்திகை 23, வெள்ளிக்கிழமை 09.12.2011
திதி: சதுர்த்தசி மு.இ. 7.19வரை
நட்சத்திரம்: கார்த்திகை மாலை 5.32வரை
விஷ்ணுவாலய தீபம்
சுபநேரம்: 6.18-7.48 வரை, ராகு காலம்:10.48-12.18 வரை

உதயன்
08 டிசெம்பர் 2011 வியாழக்கிழமை

# பொதுப் பரீட்சைக் காலங்களில் ஒலிபெருக்கிப் பாவனைக்குத் தடை

## மீறுவோர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.8

மாணவர்களுக்கான பொதுப் பரீட்சைகள் நடைபெறும் காலங்களில் ஒலி பெருக்கிப் பாவனை மூலம் இடையூறு விளைவிப்போருக்கு எதிராகப் பொலிஸாரின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான பொதுப் பரீட்சைகள் நடைபெறவுள்ள காலங்களில் பரீட்சைக்கு ஒரு மாதம் முன்னரும் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலங்களிலும் மாணவர்களுக்கு இடையூறு எற்படுத்தும் வகையில் ஒலிபெருக்கிப் பாவனை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கோயில்கள், பொது இடங்களில் ஒலிபெருக்கிப் பாவனையால் அயலிலுள்ள மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இந்த நிலைமை தவிர்க்கப்பட வேண்டும்.

மாணவர்களுக்குஒலிபெருக்கி மூலம் இடையூறு செய்வோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸாரின் உதவி பெறப்பட வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் பணிப்புரை வழங்குவது என்றும் இதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-14)

# தீவுப் பகுதிகளில் கடலுணவுகள் பெருக்கம் தற்போது அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.8

தற்போதைய பருவ காலத்தில் குடாக்கடலில் கடலுணவுகளின்பெருக்கம் குறைவடைந்து காணப்படும் நிலையில் தீவுப் பகுதியில் அதன் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக நீரியல்வளத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

குடாக்கடலில் இருந்து வரும் கடலுணவுகளின் வருகை குறைவடைந்துள்ளமையால்தான் அதற்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. அத்துடன் விலையும் அதிகரித்துக் காணப்படுகிறது.

அத்துடன் தென்பகுதிக்கான ஏற்றுமதியும் மறுபுறத்தில் இடம்பெற்று வருகின்றது.

வேலணை மற்றும் வடமராட்சி கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமது கூலர் வாகனம் மூலம் இந்தக் கடலுணவுகளைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

தனியார் வியாபாரிகளும் கூலர் வாகனம் மூலம் இந்தக் கடலுணவுகளை இங்கிருந்து எடுத்துச் செல்கின்றனர்.

தற்போதைய காலநிலையில் கடலுணவுகளின் பெருக்கம் குறைந்து காணப்படுவதால் கடல்தொழிலும் மறுபுறத்தில் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் குடாநாட்டுச் சந்தைகளில் கடலுணவுகளுக்குப் பெரும் கிராக்கியும் தட்டுப்பாடும் நிலவி வருகின்றது.

யாழ்.நகரை அண்டிய கொட்டடி, குருநகர், பாஷையூர் சந்தைகளில் நேற்று மீனுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது.

பெரிய மீன்கள் கிலோ 600 ரூபாவாகவும் சிறிய மீன்கள் 400 ரூபாவாகவும், நண்டு கிலோ 450 ரூபாவாகவும், இறால் கிலோ 500 ரூபாவாகவும், கணவாய் கிலோல 450 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. (ம-26)

# டெங்கு பரவலைத் தடுக்க மாகியப்பிட்டியில் புகையூட்டல்

சண்டிலிப்பாய், டிசெ.8

மாகியப்பிட்டிப் பகுதியில் டெங்கு நோயாளர்கள் இருவர் இனம்காணப்பட்டதைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் தடுப்பு நடவடிக்கையாகப் புகையூட்டலை சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் பொலிஸாரின் உதவியுடன் வீடு வீடாகச் சென்று சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பற்றிப் பார்வையிடுவதுடன் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மாகியப்பிட்டி கொம்பனிப்புலம் என்னும் இடத்தில் வசிக்கும் கொழும்பிலிருந்து வந்த ஒருவரும் பாடசாலை மாணவர் ஒருவரும் டெங்கு நோயாளர்களாக இனம் காணப்பட்டனர்.

இதனையடுத்து வலி.தென்மேற்குப் பிரதேச சுகாதாரப் பிரிவினர் அந்தப் பகுதிக்குச் சென்று புகையூட்டல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதேவேளை, பொலிஸாரும் சுகாதாரப் பகுதியினரும் இணைந்து அந்தப் பகுதியிலுள்ள வீடுகளுக்குச் சென்று சுற்றுச் சூழலைப் பார்வையிட்டு வருவதுடன் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒலிபெருக்கி மூலம் பிரசாரம் செய்தும் வருகிறார்கள்.

அத்துடன் வெளிநாடுகளில் வசிப்பவர்களின் வெறும் காணிகளை மேற்பார்வை செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் சுகாதாரப் பிரிவினர் முன்வந்துள்ளனர். ஆரம்ப நடவடிக்கையாக இந்தக் காணிகளில் துப்புரவு செய்வது சம்பந்தமான விளம்பரங்களையும் ஒட்டி வருகிறார்கள்.

இதேவேளை, கடந்த ஒரு மாத காலத்துக்கு முன்பும் இதே இடத்தில் டெங்கு நோயாளர் இருவர் இனம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

# காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், டிசெ.8

கடும் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் இரவு படுத்த இடத்திலேயே மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பளையில் இடம்பெற்றது. பொத்துவிலைச் சேர்ந்த சரத் (வயது 22 ) என்னும் ஒரு பிள்ளையின் தந்தையே மரணமானவராவார்.

மூன்று தினங்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த இவர் கடந்த திங்கட்கிழமை பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வழமையாக தங்கும் அறையில் படுத்திருந்ததாகவும்

இவருடன் இருந்தவர்கள் காலையில் இவரை எழுப்பிய போது சடலமாக காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது

பளையில் நடைபெற்று வரும் வீதி அகலிப்பு பணியில் ஈடுபட்டுவரும் நிறுவனமொன்றில் இவர் கடமையாற்றிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு கிளிநொச்சி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். நீதிவானின் உத்தரவின் பிரகாரம் இவரின் சடலம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-207)

# பண்ணை வீதிக்கும் 'காப்பெற்'; ஜனவரியில் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ். பண்ணை வீதியையும் 'காப்பெற்' வீதியாக மாற்றியமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மழை காரணமாக இந்த வீதியின் அகலிப்பு மற்றும் புனர்நிர்மானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்தப்பணிகள் அடுத்தாண்டு ஜனவரி முதல் தொடர்ந்து இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் புனர்நிர்மாணப் பணிகள் நிறைவுற்றதும் பண்ணைச் சந்தியில் இருந்து மண்டைதீவுச் சந்திவரை 'காப்பெற்' போடும் பணிகள் முதற்கட்டமாக இடம்பெறும்.

இதேவேளை இந்த வீதி, அண்மையில் பெய்த மழையால் பெரும் சேதமடைந்து காணப்படுகின்றது.

வீதியில் ஏற்பட்ட சேதத்தால் போக்குவரத்துச் செய்வதிலும் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

இந்த வீதிப் புனரமைப்பு தென்பகுதியைச் சேர்ந்த தனியார் ஒப்பந்தகாரர் ஒருவரிடம் வழங்கப்பட்டும்கூட புனரமைப்புக்கள் மிக மிக மந்தகதியிலேயே நடைபெற்று வந்தன.

கடந்த ஒரு வருட காலத்துக்கு மேலாக இந்த வீதியின் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருவதால் போக்குவரத்துக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. (ம-26)

# நீண்ட கயிறுகளில் கால்நடைகள் வீதியோரம் கட்டப்படுவதால் நெருக்கடி

நவாலி,டிசெ.8

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் வீதியோரங்களில் மேய்ச்சலுக்காக கட்டப்படும் ஆடு, மாடுகளால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதுடன் விபத்துக்களும் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

இவ்வாறு மேய்ச்சலுக்குக் கட்டுப்படும் கால்நடைகள் நீளமான கயிறுகளில் கட்டுவதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இதேபோன்று வயல் நிலங்களிலுள்ள மேய்ச்சல் தரைகளிலும் நீளக் கயிற்றில் கட்டி விடுவதால் வயல்களில் நெற்பயிர்களை அழித்து வருவதாகவும் பிரதேச சபைத் தலைவரிடம் முறையிடப்பட்டுள்ளது.

இதனால் ஆடு, மாடுகளை மிகக் குறுகிய கயிற்றில் கட்டி மேய விடுமாறும் தவறும் பட்சத்தில் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதேசசபைத் தலைவர் அ.ஜெபநேசன் தெரிவித்துள்ளார். (ம-100)

# அரைநேர சேவை வழங்கும் மானிப்பாய் அரச வைத்தியசாலை

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஒரு வருட காலமாக அரை நேரம் மட்டும் இயங்குவதால் நோயாளர்கள் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. இங்கிருந்த நிரந்தர வைத்தியர் ஒருவர் ஓய்வு பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து மாலையில் இரண்டு மணித்தியாலங்கள் மட்டும் பதில் வைத்திய அதிகாரி ஒருவர் கடமையாற்றி வருகிறார்.

இதனால் காலையில் பாடசாலை செல்லும் மாணவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிலாளர்களும் இரவில் திடீரென ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சை பெறுவோரும் பெரும் சிரமமடைகின்றனர்.

வைத்தியர்களுக்கு தட்டுப்பாடு காரணமாக பல வைத்தியசாலைகள் இவ்வாறு அரை நேரம் மட்டும் செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டு வருகிறது. (ம-100)

# சொந்தக் காணியில் மூளாய்ச் சந்தை சுகாதார விதிமுறைகளுடன் அமையும்

## வலி. மேற்குப் பிரதேச சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிச.8

நீண்ட காலமாகத் தனியார் காணியில்இயங்கிவரும் மூளாய்ச் சந்தை சுகாதார விதிமுறைகளுக்கமையச் சொந்தக் காணியில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் வலிகாமம் மேற்குப் பிரதேச சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபைத் தலைவர் திருமதி என். ஐங்கரன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தச் சந்தை சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

சுகாதார சீர்கேட்டுடன் வசதியீனங்கள் மத்தியில் காலம் காலமாகத் தனியார் காணியில் இயங்கிவரும் மூளாய்ச் சந்தையைப் பாவனையாளர்களினதும் விவசாயிகளினதும் நலன் கருதி அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இப் பகுதியில் பொருத்தமான காணியைக் கொள்வனவு செய்து சுகாதார வசதிகளுடன் சந்தை அமைப்பதால் மக்களும் நன்மையடைவதுடன் சபையின் வருமானத்தையும் அதிகரிக்க முடியும் என்று கூறப்பட்டது.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

பிரதேச சபையில் கடமையாற்றும் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டுக்கான சீருடைகளை வழங்கத் துரித நடவடிக்கையை மேற்கொள்ளல்.

சுகாதாரத் தொழிலாளர்களின் நன்மை கருதி அவர்களுக்குக் கையுறைகள் வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முன்னால் அமைந்துள்ள நவீன சந்தையில் கடைகளை அதிகரித்து அபிவிருத்தி செய்தல். (ம-115)

# உதவிக் கொடுப்பனவு வந்து சேர்ந்தது

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் காசநோய், புற்றுநோய், யானைக்கால் நோய் என்பவற்றிற்கான உதவிப் பணங்களைப் பெற்றுக் கொள்பவர்களைக் கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தபாலங்களுக்குச் சென்று இக்கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(ம-100)

# குடாநாட்டில் இளவயதுக் கர்ப்பம் கட்டுப்படுத்த முடியாத நிலையில்

## யாழ்.அரச அதிபர் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ்.மாவட்டத்தில் இளவயதுக் கர்ப்பங்களும் திருமணத்தின் முன்னான கர்ப்பங்களும் அதிகரித்தே செல்கின்றன. இது தொடர்பான விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாதுள்ளது.

இவ்வாறு யாழ். அரச அதிபர் திருமதி இமல்டா சுகுமார் கவலை தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று பத்திரிகையாளர்களுடனான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போதே அரச அதிபர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த செப்ரம்பர், ஒக்டோபர் மாதங்களில் மட்டும் 68 இளவயதுக் கர்ப்பங்களும், 18 பேர் திருமணமாகாமலே கர்ப்பம் தரித்த சம்பவங்களும் வைத்தியசாலைகளில் பதிவாகியுள்ளன.

இவற்றுடன் சேர்த்து இந்த வருட ஆரம்பத்திலிருந்து ஒக்டோபர் மாதம் வரையில் 346 இளவயது கர்ப்பங்களும், 114 பேர் திருமணமாகாமலே கர்ப்பம் தரித்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இந்த வருட ஆரம்பத்திலிருந்து ஓகஸ்ட் மாதம் வரையில் 278 இளவயது கர்ப்பங்கள் பதிவாகியிருந்தன.


அத்துடன் 96பேர் திருமணமாகாமலே கர்ப்பம் தரித்ததாக வைத்தியசாலையில் பதிவாகியிருந்தது. கடந்த செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் இளவயதுக் கர்ப்பங்கள் 68 ஆகவும், திருமணமாகாத கர்ப்பம் 18 ஆகவும் காணப்படுகின்றது.

நெடுந்தீவு, வேலணை, காரைநகர், மருதங்கேணி ஆகிய உதவி அரச அதிபர் பணிமனைகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் இந்தச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவிலேயே இளவயதுக் கர்ப்பங்கள் பதிவாகியுள்ளன.

தொடர்ச்சியாக இவை அதிகரித்துக் கொண்டே தான் செல்கிறது. தடுப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமைதான் உள்ளது.

இந்த விடயங்களை நான் வெளியிடுவதால் சிலர் என் மீது கோபப்படுகின்றனர். இதனைக் கலாசார சீரழிவு அதிகரித்து செல்கின்றது என்று பலர் சொல்லுகின்றனர். உண்மையில் இது எமது சமூகத்தின் பரிதாபத்துக்குரிய நிலை. 6 லட்சம் மக்கள் வாழும் சமூகத்தில் ஆயிரம் பேர் செய்யும் தவறுகளை மட்டும் வைத்துக் கொண்டு ஒட்டுமொத்த சமூகத்தையும் குற்றம் சொல்லமுடியாது.

யுத்தத்தால் பெற்றோர் காணாமல் போய் அல்லது தடுப்புக்குச் சென்றமையால் உரிய பாதுகாவலர்கள் இல்லாததன் காரணத்தாலும் இந்த நிலை ஏற்படுகின்றது. பொருளாதார அபிவிருத்தியை மட்டும் வைத்துக் கொண்டு சமூகம் அபிவிருத்தி அடைந்ததாகச் சொல்ல முடியாது. எனவே சமூகம் அபிவிருத்தி அடைய வேண்டுமாயின் இவ்வாறான இளவயதுக் கர்ப்பங்கள் குறைக்கப்பட வேண்டும் இதற்கு உரிய வகையில் சமூக மட்டத்தில் விழிப்புணர்வு காட்ட வேண்டியது அவசியம் என்றார். (ம-15)



யாழ்.சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று வித்தியாலயத்தில் நடைபெற்றது. விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கொழும்புத்துறை சென்.சேவியர் குருமட விரிவுரையாளர் அருட்பணியாளர் அல்பிரெட் கிருபானந்தன் ஆகியோர் உட்பட விருந்தினர்கள் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியம் சகிதம் அழைத்து வரப்படுகின்றனர். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அருட்பணியாளர் அல்பிரெட் கிருபானந்தன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (ம-167)

# மட்டுவில் முசுறி ஊடாக பஸ்சேவை

தென்மராட்சி, டிசெ.8

மட்டுவில் முசுறி ஊடாக யாழ்ப்பாணத்துக்கான மினிபஸ் சேவை நேற்றுத் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமத்திலிருந்து காலை 6.50 மணிக்கு புறப்படும் மினிபஸ் மீசாலை புத்தூர் சந்தி, வேம்பிராய், கனகன் புளியடிச்சந்தி, மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில், முசுறி, மட்டுவில் தெற்கு கைதடி நுணாவில் வைரவர் கோயிலடி ஊடாக யாழ்ப்பாணம் சென்றடையும்.

அங்கிருந்து பிற்பகல் 2.05 மணிக்கு புறப்பட்டு இதே மார்க்கத்தில் கொடிகாமம் சென்றடையும்.

மட்டுவில் கிழக்கு , முசிறி, மட்டுவில் தெற்கு ஆகிய பகுதி மக்கள் தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்துக்கு விடுத்த வேண்டுகோளையடுத்து இந்த சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-207)

# காணாமல் போன தபால் பெட்டி

தென்மராட்சி, டிசெ.8

நீண்டகாலமாக சரசாலை கனகன் புளியடிச் சந்தியில் காணப்பட்ட தபால் பெட்டி திடீரென காணாமல் போயுள்ளதால் மக்கள் தபால்கள் போடுவதற்கு அலைந்து திரிவதாகப் விசனம் தெரிவித்தனர்.

கனகன் புளியடிச் சந்தி ஐந்து முச்சந்தியாக உள்ளதால் சரசாலை, மட்டுவில் பகுதிக்கு உட்பட்ட மக்களும் வாகனங்களில் வருவோரும் இந்தத் தபால் பெட்டிகளில் தமது தபால்களைச் சேர்ப்பதா கவும் அண்மைக் காலமாக இந்தத் தபால் பெட்டி காணாமல் போயுள்ளதால் இப்பகுதி மக்கள் தபால்களை பெட்டிகளில் சேர்ப்பதற்கு அலைவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மட்டுவில் கிழக்குப் பகுதி மக்களுக்கென முத்துமாரி அம்பாள் ஆலயத்துக்கு அருகில் தபால் பெட்டி பொருத்துமாறு உரிய அதிகாரிகளுடன் பலமுறை தொடர்பு கொண்டும் இதுவரை அங்கு பெட்டி வைக்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர். (ம-207)

# மதுப்பிரியர்களின் அட்டகாசம் வீதியால் செல்வோர் சிரமத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.8

பிரான்பற்று பண்டத்தரிப்பு சூரிய வைரவர் ஆலயத்தின் முன்பாக மாலை நேரங்களில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் தொடர்ந்து இடம்பெற்று வருவதால் அந்தப் பகுதி மக்களும் வீதியால் பயணிப்போரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆலயச் சூழலில் மதுப்பிரியர்கள் அண்மைக் காலமாகத் தொடர்ந்து ஒரே இடத்தில் ஒன்றுகூடி பலத்த சத்தங்களுடன் உரையாடுவதுடன், வீதியில் பயணிக்கும் பெண்கள், முதியவர்கள் போன்றோருடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்று கூறப்படுகிறது.

ஆலயச் சூழலில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவது அந்தப் பிரதேசத்தில் வாழும் இந்து மக்களை அவமதிக்கும் செயலாகவும் அமைந்துள்ளது.

இதனால் மாலை நேரங்களில் ஆலய வழிபாட்டுக்குச் செல்வதற்கும் மக்கள் அச்சமடைந்து வருகின்றனர்.

இது தொடர்பாக பிரதேச மக்கள் இராணுவத்தினரிடம் முறையிட்டபோது இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு இராணுவத்தினர் கூறியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-313)

# வர்த்தக நிலையங்கள் உடைப்பால் அச்சத்தில் குடாநாட்டு வர்த்தகர்கள்

சண்டிலிப்பாய், டிச.8

குடாநாட்டில் இரவு நேரங்களில் வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டுத் துணிகரமான முறையில் இடம் பெற்று வரும் திருட்டுச் சம்பவங்கள் வர்த்தகர் மத்தியில் பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இத் திருட்டுச் சம்பவங்களையடுத்து வர்த்தக நிலையங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு முன்வந்துள்ள வர்த்தகர்கள் இரவு நேரங்களில் காவலாளிகளை நியமிப்பது பற்றி வர்த்தக சங்கத்துடன் ஆலோசித்து வருகிறார்கள்.

கடந்தவாரம் திருநெல்வேலியில் பிரதான வீதியிலுள்ள பல வர்த்தக நிலையங்கள் இரவு வேளை உடைக்கப்பட்டு பலலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளன.

இதே போல் செவ்வாய்க்கிழமை இரவும் வடமராட்சியிலுள்ள பல கடைகள் இரவு நேரத்தில் உடைக்கப்பட்டும் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

குடாநாட்டில் படையினர் மற்றும் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையும் 24 மணி நேரமும் இடம் பெற்று வருகின்றது.

இந்த நிலையில் பிரதான வீதிகளிலுள்ள பிரபல்யமான கடைகள் இரவு நேரங்களில் உடைக்கப்பட்டுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இதேவேளை மானிப்பாய்ப் பொலிஸாரும் வர்த்தக சங்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தி தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்துள்ளார்கள். (ம-115)

# யாழ். நகர வர்த்தக நிலையத்தில் இடம்பெற்ற திருட்டு முயற்சி

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ். நகரப் பகுதியில் உள்ள மின் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் பிரபல வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு திருட்டு முயற்சிகள் இடம்பெற்றுள்ளன. நேற்று முன்தினம் இரவு யாழ். நகரப் பகுதியில் ஸ்ரான்லி வீதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மின்னகத்தின் கூரையைப் பிரித்து உள்ளே இருந்த 'லெவல் சீற்' ரையும் உடைத்து திருடர்கள் உள் நுளைந்துள்ளனர்.

கடையின் இரண் டாம் மாடியின் வாசலில் உள் நுளைய திருடர்கள் முயன்றுள்ளனர். இது கைகூடாமையால் அங்கிருந்து வெளியேறி யுள்ளனர்.

நேற்றுக்காலை கடமைக்கு வந்த ஊழியர்கள் இதனை அவதானித்து இந்த விடயம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். குறித்த இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-319)

### குமுதினியின் சேவையில்

# அடிக்கடி நேரமாற்றத்தால் அலைக்கழியும் பயணிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.8

அடிக்கடி ஏற்படும் நேர மாற்றங்களால் நெடுந்தீவு குறிகாட்டுவான் படகுச் சேவை குறித்து பயணிகள் குழப்பமடைந்துள்ளனர்.

இதனால் சில சமயங்களில் படகுச்சேவைகள் அட்டவணையில் கூறப்பட்டபடி குறிப்பிட்ட நேரத்தில் இடம்பெறுவதில்லை.

இதனால் பயணிகள் துறைமுகங்களில் வந்து காத்திருந்து பின் திரும்பிச் செல்ல வேண்டியுள்ளதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

சேவையைச் சீராக்க உதவி அரச அதிபர், கடற் படையினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோர் கலந்துரையாடி ஒரு திட்டவட்டமான நேர அட்டவணையைத் தயார் செய்ய வேண்டும் என்றும் அதற்கமைவாக படகுச் சேவைகள் இடம்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 2.2.1927
இறப்பு: 8.11.2011



அமரர் **மாணிக்கம் சபாரத்தினம்**

கடந்த 08.11.2011 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச்செய்தி கேட்டு பல வழிகளிலும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று [08.12.2011] வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன் னாரது இல்லத் தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையி லும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

33/8, இராஜேஸ்வரி வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (11346)(1,6,9)

இன்பவதி, குணவதி
(மகள்மார்)

# கண்ணீர் அஞ்சலி



எமது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கடமையாற்றும் சி.பிரணவன் (சுகாதார கல்வி உத்தியோகத்தர்) அவர்களின் அன்புத் தாய்

**திருமதி செல்வராணி சிவசுப்பிரமணியம்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஊழியர் நலன்புரி சங்கம்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.
(சி/8655) (2-6-9)

# பெயர் மாற்றம்

பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஸ்வநாதன் மோகனப்பிரியா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரினை விஸ்வநாதன் பாத்திமா சைனப் என மாற்றம் செய்து சகல ஆவணங்களிலும் கையொப்பமிடுவேன் என தெரிவித்துக்கொள்கின்றேன்.

விஸ்வநாதன் பாத்திமாசைனப்

## Personal Calass

புதிய ஆண்டுக்கான தரம் 3-A/L வரையான வகுப்பு மாணவர்களுக்கு English Personal class உம் Spoken with grammar கற்க விரும்புபவர்களுக்கும் (No age limit) வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (அனுமதிக்கு முந் தவும்). தொடர்பு: பலாலி வீதி, கந்தர்மடம். TP. 0778361521

## தேவை

நல்ல நிலையில் உள்ள 100 CC மோட்டார் சைக்கிள் உடன் தேவை.
0789144729, 0775576347

## வாடகைக்கு

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் வாகன தரிப்பிட வசதிகள் கொண்ட மூன்று மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0779585366, 021 222 9777

## Bank Balance Sponsorship

100% Cash Deposit
100% Visa
Reasonable Rate

Uk - USA - Canada - Australia and All Europe நாடுகளின் VISA தேவைகளுக்கு நியாயமான வீதத்தில் Bank இல் பணவைப்பு செய்து கொடுக்கப்படும்.

Hotline: 0779463485

## B.com

PART I
B.com – PART II
FINAL

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)
மேற்படி பிரிவுகளுக்கான விரிவுரைகள்
ஆரம்பம்:-10.12.2011 காலை 8 மணி
விவரங்களுக்கு:-
S.அருள்நங்கை(நிர்வாகி)
**புதிய உயர்கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி,யாழ்ப்பாணம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கந்தசாமி முருகவேல்**
(B.Sc. Dip in Edu, M, Ed., S.L.E.A.S - III)
வலயக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

வளம் பல பெருகும் வலிகாமம் கிழக்கிலமைந்த
சிறப்புக்கள் நிறைந்த இடைக்காடு தன்னில்
சீர் செம்பதியாம் தேற்றாவடியில்
தோன்றி எம் பள்ளியிற் சாலப் பயின்று
பலகலை கற்று நாளும் வளர்ந்து
நன்நிலை அடைந்த முருகவேல் அவர்களுக்கு
முகமன் கூறி மேலும்
பட்டம் பதவிகள் பலப்பல பெற்று
நீள் நெடுங்காலம் வாழ்க என்று
வாழ்த்தினோம் வாழி வாழ்க நீர் நீடூழி



பழைய மாணவர் சங்கம், யா/இடைக்காடு ம.வி.
(11347)(1,6,9)

# யாழ் மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடத்துக்கான விண்ணப்பம் கோரல்

பதவி : காவலாளி
சம்பள குறி.இல : 315/16
சம்பள அளவுத் திட்டம் : 9200-70X10-75X10-10650
(கூ.வே. ஆ. சுற்றுநிருபம் 66/2006 ன் படி)

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 17ஆவது சம்பளத் திட்ட பதவி யொன்றில் ஒரு (01) வருடத்திற்குறையாத அனுபவம்.

அல்லது

05 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் நல்ல தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

வயதெல்லை - 21-50

மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பப்படிவத்தினை சங்கக் காரியாலய கடமை நாள்களில் ரூபா 10/- இனை செலுத்தி பெற்று பூரணப்படுத்தி பொதுமுகாமையாளர் யாழ் மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம், இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் என்ற முக வரிக்கு பதிவுத் தபாலில் 20.12.2011 க்கு முன்னர் கிடைக்கக் கூடிய தாக அனுப்ப வேண்டும்.

(C/6656) (6-9-8)
பொது முகாமையாளர், யா/மா/த/பா/உ/கூ/சங்கம்
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

# நெடுந்தீவு பிரதேச சபை

## சந்தையும் கடல் உணவும் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதியும், இறைச்சிக் கடை குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல்-2012

நெடுந்தீவு பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பொதுச் சந்தை, இறைச்சிக் கடை ஆகியன 01.01.2012 ஆம் திகதி தொடக்கம் 31.12.2011 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 15.12.2011 நண்பகல் 12 மணி வரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி : 22.12.2011 முற்பகல் 11 மணி வரை
03. கேள்வி திறக்கும் திகதி : 22.12.2011 பிற்பகல் 1 மணி

| இல | குத்தகையின் வகை | சபைக்குச் செலுத்த வேண்டிய மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர்ந்த) | கேள்விப் பிணைப் பணம் | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01. | மாட்டிறைச்சிக்கடை | 150.00 | 60,000.00 | 3,000.00 | 500.00 |
| 02. | பொதுச் சந்தையும் கடல் உணவும் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதியும் | - | 90,000.00 | 3,000.00 | 500.00 |

1. கேள்விப் பத்திரம் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தலைவர், நெடுந்தீவுப் பிரதேச சபை, நெடுந்தீவு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பு தல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணை யாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக் கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.
4. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
5. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் சந்தையும் கடல் உணவும் உற்பத்திப் பொருள்களின் ஏற்று மதியினது கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் இறைச்சிக் கடைக்குரிய கேள்வித் தொகை யின் 2/3 பகுதியையும் 28.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் நெடுந்தீவுப் பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நெடுந்தீவுப் பிரதேச சபை.
08.12.2011 (C/6653)(6-9-8)

தானியேல் றெக்சியன், தலைவர்,
நெடுந்தீவு பிரதேச சபை.

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி நவரத்தினம்



சிறுப்பிட்டி மேற்கைப் பிறப்பிட மாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நவரத்தினம் (07.12.2011) புதன்கிழமை சிவ பதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான சின்னத்தம்பி - மாணிக்கம் தம்தியரின் அன்புமகனும், காலஞ் சென்றவர்களான தம்பிப்பிள்ளை -தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மங்கையர்க் கரசியின் அன்புக் கணவரும், அரங்கேசன், அனந்தகோபன், காலஞ்சென்ற அருள் தீபன் மற்றும் அமலரூபன், அகிலானந் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிங்கரத் தினம் மற்றும் செல்வரத்தினம் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் சறோஜினிதேவி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2011) வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் அவ ரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பத்தகலட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரீ ஞான வைரவர் வீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. (11291)(6/9/8)

தகவல்:
குடும்பத்தினர்.

# ரூபாவின் மதிப்பிறக்கத்தை கண்டித்த அமைச்சர்கள் மீது ரோஹித அதிருப்தி

## கூட்டாக எடுக்கப்பட்ட தீர்மானங்களை விமர்சிக்கக் கூடாதாம்

கொழும்பு,டிசெ.8

அரசில் அங்கம் வகிக்கும் சில அமைச்சர்களும், அரச அதிகாரிகளும் ரூபாவின் பெறுமதி குறைப்பு தொடர்பில் வெளியிட்டுவரும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இவ்வாறான அமைச்சர்களின் நடவடிக்கைகள் குறித்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

''அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக அரசு என்ற ரீதியில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அனைத்து அமைச்சர்களும் கூட்டாக ஆதரவளிக்க வேண்டும். கூட்டாக எடுக்கப்படும் தீர்மானங்களை பகிரங்கமாக விமர்சனம் செய்வது பொருத்தமாக அமையாது'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் பல நன்மைகளை உள்ளடக்கியுள்ளதாகத் தெரிவித்த அவர், அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு



சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கூறினார். (ச)

# மக்களிடம் பிரிவை வளர்க்க கட்சிகள் முயற்சிக்கக்கூடாது

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு,டிசெ.8

''மக்கள் மத்தியில் பிரிவை வளர்ப்பதற்கு அரசியல் கட்சிகள் முயற்சிக்கக்கூடாது. அனைவரும் ஒற்றுமையு டன் செயற்படுவதன் மூலமே நாட்டை அபிவிருத்தி அடையச் செய்ய முடியும்'' என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறந்த உள்ளூராட்சி மன்றத்துக்கு விருது வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 30 ஆண்டுகளாகப் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கிய நாட்டில் தற்போது சமாதானம் நிலைநாட்டப்பட்டுள்ளது.

விருப்பு வாக்கு பிரச்சினையால் சில உள்ளூராட்சி மன்றங்களில் ஆளும் கட்சி உறுப்பினர்களே அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதில்லை என்று தெரியவந்துள்ளது. இது பிழையான நடவடிக்கையாகக் கருதப்பட வேண்டும்.

விருப்பு வாக்கு பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி மக்களுக்கு சேவையாற்றுவதனை நிராகரிக்க முடியாது- என்றார். (ச)

# பிரிட்டன் விஸாவுக்கு போலி ஆவணம் சமர்ப்பித்தவர் கைது

கொழும்பு,டிசெ.8

பிரிட்டன் விஸாவுக்காக போலி ஆவணங்களைச் சமர்ப்பித்த இலங்கை விண்ணப்பதாரி ஒருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகம் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் கடமையாற்றும் தாயுடன் இணைவதற்காக, தனது இளைய சகோதரனுடன் குறித்த விண்ணப்பதாரி பிரிட்டன் விஸாவுக்காக விண்ணப்பித்திருந்தார்.

18 வயதிற்கு மேற்பட்ட இந்த விண்ணப்பதாரி போலியான பிறப்புச்சான்றிதழ் மூலம் வயது குறைந்தவர் என்று காட்ட முனைந்துள்ளார். போலியான கல்விச் சான்றிதழ்களையும் சமர்ப்பித்துள்ள இவர் உயிருடனுள்ள தந்தை இறந்துள்ளார் என்று போலி மரணச் சான்றிதழையும் சமர்ப்பித்துள்ளார்.

இந்த இருவரினதும் விஸா விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்டவர் 10 வருடங்களுக்கு பிரிட்டன் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் குடிவரவு விதிகளை மீறுவதை எம்மால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

எங்கேயாவது, விதிகள் மீறப்பட்டால் உரிய நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்று பிரிட்டன் எல்லை முகவர் நிலைய முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ச)

# உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் அரசைப் பலவீனப்படுத்த முயற்சி

**நீதி அமைச்சர் குற்றச்சாட்டு**

கொழும்பு,டிசெ.8

உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் அரசைப் பலவீனப்படுத்த முயற்சித்து வருவதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பயங்கரவாதத்தை வெற்றிகரமாகத் தோற்கடித்த காரணத்தினால் இவ்வாறு சில சக்திகள் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடிப்படையற்ற இந்தக் குற்றச்சாட்டுக்களை வெற்றிகரமாக முறியடிக்க சகல இன சமூகங்களினதும் ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மை இன சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத் திட்டத்தின் மூலமே நாட்டில் நிரந்தர சமாதானத்தை நிலை நாட்ட முடியும் என்பதனை தமிழ், முஸ்லிம் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டிய அவர்,

புலம்பெயர் தமிழ்ச் சமூகம் ஓர் அரசியல் கட்சி நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும், இதனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுகொள்ளாது எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு பெரும்பான்மை இன சமூகத்தின் சிறந்த வரவேற்பு காணப்படுகின்றது. இதனால் தமிழ், முஸ்லிம் இன சமூகங்கள் நிரந்தரத் தீர்வுத் திட்டமொன்றை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் காணப் படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# பொன்சேகா மீதான மோசடி வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,டிசெ.8

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஹைகோப் நிதி மோசடி வழக்கு மீதான விசாரணையை கொழும்பு மேல் நீதிமன்றம் நாளை வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைத்துள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, இந்த வழக்கை முதலாம் இலக்க மேல் நீதிமன்ற கட்டடத்தில் விவாதிக்க அரச மற்றும் எதிர்தரப்பிற்கு ஆட்சேபனை உண்டா என்று மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ கேள்வியெழுப்பியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த இரு தரப்பு சட்டத்தரணிகளும் எதிர்ப்பு இல்லை என்று தெரிவித்ததற்கிணங்க, முதலாம் இலக்க மேல் நீதிமன்ற கட்டடத்தில் ஹைகோப் நிதி மோசடி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இராணுவத்தில் ஆயுதக் கொள்வனவு செய்தபோது நிதி மோசடி இடம்பெற்றதாகக் கூறி சரத் பொன்சேகாவிற்கு எதிராக ஹைகோப் நிதி மோசடி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



சர்வதேச பாலஸ்தீன நட்புறவு தினத்தை முன்னிட்டு கருத்தரங்கு கொழும்பு பொது நூலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பாலஸ்தீன தூதுவர் அன்வர் அல்அகா, மக்கள் விடுதலை முன்னணியின் பொது செயலாளர் டில்வின் சில்வா, சோசலிஷ இளைஞர் மன்றத்தின் தலைவர் பமல் ரத்நாயக்க, கியூபா - இலங்கை நட்புறவு சங்க செயலாளர் நாகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வன்புணர்வால் வரும் கர்ப்பங்களை கலைப்பதற்கு விரைவில் சட்டம்

கொழும்பு,டிசெ.8

துஷ்பிரயோகங்களால் கர்ப்பத்திற்கு உள்ளானால், அவர்கள் கருக்கலைப்பு செய்ய அனுமதிக்கும் சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற, வரவு - செலவுத் திட்டத்தில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு தொடர்பான குழு நிலை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வன்புணர்வுக்கு உட்படும் பெண்கள் அநாவசிய கர்ப்பத்தால் துன்பப்படுவது துரதிஸ்டவசமானது. எனவே மருத்துவ நிபுணர்களின் சிபார்சின் படி கருக்கலைப்பு செய்ய சட்டமியற்றப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச)

# தலைவர் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு,டிசெ.8

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கே கட்சிக்குள் கூடுதலான ஆதரவு உள்ளது என்று தினமின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கட்சித் தலைவர் பதவிக்காக வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், ரணில் வெற்றியீட்டுவார் என்று அந்த பத்திரிகை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

கட்சித் தலைமைப் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்குவதற்கு, கரு ஜயசூரிய உள்ளிட்ட தரப்பினர் முயற்சித்து வருகின்றனர்.

எனினும், பெரும்பான்மையான செயற்குழு உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாகச் செயற்படுகின்றனர் என்று அந்தப் பத்திரிகை கூறுகின்றது. (ச)

# பிரகீத்தின் மனைவி மீதான குறுக்கு விசாரணை ஒத்திவைப்பு

காணாமல் போயுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியான, சந்தியா எக்னெலிகொடவிடம் குறுக்கு விசாரணை செய்ய இடமளிக்குமாறு சட்ட மா அதிபரினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கைக்கு ஹோமாகம நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடமளிக்கவில்லை.

பிரகீத் எக்னெலிகொடவை நீதிமன்றில் முன்னிலை படுத்தக் கோரி அவருடைய மனைவி தாக்கல் செய்த மனு நேற்றுமுன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனுவில் பிரதிவாதியாக முன்னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸின் பெயரை இணைக்க வேண்டி இருப்பதால் மேன்முறையீட்டு நீதிமன்றில் அனுமதி பெறும்வரை சந்தியா எக்னெலிகொடவிடம் குறுக்கு விசாரணை செய்வதை பிற்போடுமாறு மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனைக் கருத்திற்கொண்ட ஹோமாகம நீதிவான் நீதிமன்றம் சந்தியா எக்னெலிகொடவிடம் குறுக்கு விசாரணை செய்வதை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது. (ச)

# சனல்-4 மற்றும் இலங்கை ஆவணப்படங்கள் அமெரிக்காவில் ஒரே அரங்கில் காட்சி

சனல்-4 தொலைக்காட்சி தயாரித்த 'சிறிலங்காவின் கொலைக் களங்கள்' ஆவணப் படமும் அதற்குப் போட்டியாக இலங்கை அரசு வெளிட்ட லைஸ் அக்ரீட் அப்பொன் ஆவணப் படமும் ஒரே அரங்கில் நேற்றுமுன்தினம் திரையிடப்பட்டதுடன் அது பற்றிய விவாதம் ஒன்றும் இடம் பெற்றது.

'சிறிலங்காவின் உள்நாட்டுப் போர்: ஊடக சுதந்திரங்களும் போர்க் குற்றச் சாட்டுகளுக்கான பதிலும், என்ற தலைப்பில் நியூயோர்க்கில் பார்க் அவென்யூவில் ஆசிய சொசைற்றியில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 6.30 மணிக்கு இடம்பெற்றது.

இரு ஆவணப்படங்களும் திரையிடப்பட்ட பின்னர், 'சிறிலங்காவின் கொலைக் களங்கள்' ஆவணப்படத்தின் இயக்குனர் கல்லும் மக்ரே, முரண்பாடுகளுக்கான அனைத்துலகக் குழுவைச் சேர்ந்த பொப் ரெம்லர் ஆகியோருடன், கொழும்பிலிருந்து வெளியாகும் 'தி நேசன்' வார இதழின் ஆசிரியர் மலிந்த செனிவிரட்ண இணைய வழியிலும் கலந்து கொண்ட கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெற்றது.

'நியூஸ்வீக் இன்ரநசனல்' இதழின் ஆசிரியர் துன்கு வரதராஜனின் தலைமையில் இடம் பெற்ற இந்தக் கலந்துரையாடலில் இலங்கை அரச மற்றும் அனைத்துலகசமூகப் பிரதிநிதிகளும் பங்கேற்பர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை அரசின் தரப்பு நியாயங்களை ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்ன எடுத்துக் கூறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் பங்கேற்று விளக்கமளிக்க ஒப்புக்கொண்ட பாலித கொஹன்னவோ அல்லது இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவோ இந்த நிகழ்வில் பங்கேற்க வில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதல்முறையாக இரு ஆவணப் படங்களும் ஒரே அரங்கில் திரையிடப்பட்டு அது பற்றிய கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதுடன் இணையம் மூலம் நேரலையாகவும் ஒளிபரப்புச் செய்யப்பட்டுள்ளது.

# வரணி வடக்கு கூட்டுறவுக் கிளைக்கு மின் விளக்கு பொருத்துமாறு கோரிக்கை

வரணி, டிசெ.8

வரணி வடக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைக்கு மின் விளக்கு பொருத்தித் தருமாறு பொது மக்கள் கிளை முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கிளை அமைந்திருக்கும் சுற்றாடலில் பொதுமக்களின் குடியிருப்புகள் இன்றிக் காணப்படுகிறது. இதனால் கடந்த காலங்களில் மாசேரி பிரதேசத்திலுள்ள கடை ஒன்றில் பெறுமதியான பொருள்கள் இரண்டுமுறை களவாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனவே கிளை நிர்வாகத்தை இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-122)

# அரச கணக்காய்வு அறிக்கை இனி இணையத்தில் கிடைக்கும்

கொழும்பு, டிசெ.8

நாட்டில் முதற்தடவையாக அனைத்து கணக்காய்வுகளையும் இணையத்தில் வெளியிடுவதற்கு கணக்காய்வாளர் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

www.auditorgeneral.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக இந்த அறிக்கைகளை மக்கள் பார்வையிட முடியும் என்று கணக்காய்வாளர் நாயகம் எச்.ஏ. எஸ். சமரவீர குறிப்பிட்டார்.

இதன் மூலம் கணக்காய்வு நடவடிக்கைகளின் தரம் குறித் து மக்கள் அறிந்து கொள்ள முடியுமென அவர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு கட்டங்களின் கீழ், ஆயிரக்கணக்கான கணக்காய்வு அறிக்கைகளை தமது இணையத்தளத்தின் ஊடாக வெளியிடவுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் கூறினார்.

ஜனவரி மாதம் முதல் அறிக்கைகளை இணையத்தின் ஊடாக மக்கள் பார்வையிட முடியுமென தெரிவிக்கப்படுகின்றது.

(வ)

# சட்ட விரோதமாக மணல் அகழ்ந்த 17 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 17 சந்தேக நபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பன்னவல - தம்பகந்த பிரதேசத்தில் மாஓயாவில் நேற்று முன்தினம் மணல் அகழ்ந்து கொண்டிருந்த நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் விசேட அதிர டிப் படை குருநாகல் முகாம் பொறுப் பதிகாரி வேட்ட விதான தெரிவித்தார்.

மணல் அகழ்ந்தது மாத்திரமன்றி பெக்கோ இயந்திரத்தைப் பயன்படுத்தி மண் வெட்டியதாகவும் இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, மணல் ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட 3 டிப்பர் வாகனங்கள், மண் ஏற்றிய 5 டிப்பர்கள், உழவு இயந்திரங்கள் 3 மற்றும் 5 பெக்கோ இயந்திரங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர்கள் பன்னல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(வ)

# முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் வதிரியில் பயிற்சிகள்

வடமராட்சி, டிசெ. 8

வதிரி வடக்கு மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் கேக் ஐசிங், வீட்டு மின் இணைப்பு, முக அழகுக் கலை, தையல் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிக்குப் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். (வ-236)

# சண்டிலிப்பாய் மக்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு

நவாலி, டிசெ.8

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் இம்மாத ஓய்வூதிய வவுச்சருடன் அனைவருக்கும் நத்தார், புதுவருடம், பொங்கல் வாழ்த்துக்கள் என்ற பிரசுரமும் வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரமும் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த மாதத்துக்குரிய ஓய்வூதியம் இன்று வழங்கப்படுகின்றது.

(வ-100)


## புதுக்குடியிருப்பு பிரதேச சபை வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் இக்ராட் (ICTAD) C11 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவுச் சான்றிதழ் வைத்திருப்போர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழே காட்டப்பட்டவாறு கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் கேள்விவைப்புப் பணத்தினையும் அலுவலக நேரத்தில் செலுத்துவதன் மூலம் கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம்.

01. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 12.12.2011 திகதி தொடக்கம் 22.12.2011 திகதி வரை
02. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி: 26.12.2011 திகதி நண்பகல் 12 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 26.12.2011 பிற்பகல் 1.30 மணி
04. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவிலுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
05. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
06. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு கடித உறையின்இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு ஒரு பிரதியை செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, றெட்பானா, விசுவமடு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமோ குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புவதுடன் மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக விவரங்களை புதுக்குடியிருப்பு பிரதேச சபை தலைமை அலுவலகத் தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (VAT வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 01. | றெட்பானா சந்தைக் கட்டடத்திருத்தம் | 5,000.00 | 1,000.00 |
| 02. | பிரதேச சபை உப அலுவலகக் கட்டடத் திருத்தம் (புதுக்குடியிருப்பு) | 5,000.00 | 1,000.00 |
| 03. | உடையார்கட்டு பொதுச் சந்தையில் மாட்டிறைச்சிக்கடை, கோழியிறைச்சிக் கடை அமைத்தல் | 5,000.00 | 1,000.00 |
| 04. | புதுக்குடியிருப்பில் மாட்டிறைச்சிக் கடை, கோழியிறைச்சிக் கடை அமைத்தல் | 5,000.00 | 1,000.00 |
| 05. | கொல்களம் அமைத்தல் | 5,000.00 | 1,000.00 |

பிரதேச சபை அலுவலகம்
றெட்பானா, விசுவமடு.
07.12.2011

(சி/6650) (6,8,9)

சி.அ. ஆனந்தகுமார்,
செயலாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேசசபை.


# சரசாலை வீரமாகாளி ஆலயத்துக்கு ராஜகோபுரம்

சரசாலை வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் இராஜகோபுரம் அமைக்கும் பணி இடம் பெறுகிறது. மூன்று தளங்கள் கொண்டதாக அமைக்கப் படவுள்ள இந்தக் கோபுரக் கட்டுமானத்தில் வைரக் கற்களாலான வியாழவரி அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. லண்டனில் வசிக்கும் சந்திரன் என்பவர் அளித்த 9 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவுடன் வியாழவரி அமைப்பதற்கு 15 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக திருப்பணி வேலையைச் செயற்படுத்தி வரும் வை. விஜயகுமாரன் தெரிவித்தார்.

இதேவேளை 30 லட்சம் ரூபா செலவில் சித்திரத் தேர் ஒன்றை அமைப்பதற்கான பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (வ-38)


## கண்ணீர் அஞ்சலி

எமது வலயக்கல்வி அலுவலகத்தில்
ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப்
பணிப்பாளராகக் கடமையாற்றும்
தி.சோமசேகரம்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி மகேஸ்வரி தியாகராசா
அவர்கள் (03.12.2011) அன்று இறைபதம்
அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிகழகம்,
வலயக்கல்வி அலுவலகம்,
தீவகம், வேலணை.

வலயக்கல்விப் பணிப்பாளரும்,
அனைத்து அலுவலர்களும்.

(சி/6648) (2-6-9)

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 14.12.1935
விண்ணில்: 17.11.2002
திதி: திரயோதசி (08.12.2011)

அமரர்
சுப்பிரமணியம் கந்தசாமி
(ஓய்வுபெற்ற ஆசிரியர், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)



வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு
நல்லாசானாய் தந்தையாய் இருந்து
எமக்கு வழிகாட்டிய
எங்கள் அன்பு ஐயாவே
நீங்கள் காட்டிய பாதையில்
தொடர்ந்து நாம் பயணிக்க
என்றென்றும் உங்கள்
நல்லாசிகளை வேண்டி நிற்கும்

4 ஆம் குறுக்குத்தெரு,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்

(11272)(1,6,9)

# ரஷ்யத் தேர்தலில் தில்லுமுல்ளு; புடினுக்கு எதிராக மக்கள் பேரணி



மொஸ்கோ ,டிசெ.8

ரஷ்யாவில் பிரதமர் விளாடிமிர் புடினின் தேர்தல் வெற்றிக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரக் கணக்கானோர் திரண்டு ஊர்வலம் நடத்தியுள்ளனர்.

ரஷ்யாவில் கடந்த 4 ஆம் திகதி, நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் முறைகேடுகள் நடந்துள்ளதாக ஐரோப்பிய கண்காணிப்பு அமைப்பு கூறியதைத் தொடர்ந்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டனும் ரஷ்ய தேர்தலைக் கடுமையாக விமர்சித்துள்ளார். இதையடுத்து நேற்று முன்தினம் தலைநகர் மொஸ்கோவில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தத் தேர்தலைக் கண்காணித்த சுயேச்சை அமைப்பான ''கோலோஸ்'', கள்ள வாக்குகள் உள்ளிட்ட முறைகேடுகள் நடந்தது தொடர்பாக 5,300 புகார்கள் பதிவானதாகத் தெரிவித்தது. ''ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு'' என்ற கண்காணிப்பு அமைப்பு, பிரதமர் புடினுக்கு ஆதரவாகவே தேர்தல் நடந்ததாகத் தெரிவித்தது.

இந்நிலையில், லிதுவேனியாவில், சுற்றுப் பயணம் மேற்கொண்ட அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் ரஷ்யத் தேர்தலில் நடந்த முறைகேடுகள் குறித்து கவலை தெரிவித்ததுடன், ''தேர்தல் முறைகேடுகள் குறித்து விசாரிக்க, ரஷ்ய வாக்காளர்களுக்குத் தகுதி உண்டு'' என்றார்.

இதையடுத்து தலைநகர் மொஸ்கோவில் உள்ள நாடாளுமன்றக் கட்டடமான கிரெம்ளினை நோக்கி எதிர்க்கட்சியினர் ஊர்வலம் சென்றனர். கிரெம்ளினைச் சுற்றி குவிக்கப்பட்டிருந்த மத்திய உள்துறை அமைச்சக பொலிஸார், அவர்களைத் தடுத்து நிறுத்தியபோது ஏற்பட்ட தள்ளு முள்ளில், 300 பேர் கைது செய்யப்பட்டனர்.

அதேநேரம், மொஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் புடினுக்கு ஆதரவான பேரணியும் நடத்தப்பட்டது. தொடர்ந்து, பல ஆர்ப்பாட்டங்களுக்கு எதிர்க்கட்சிகள் திட்டமிட்டிருப்பதால், மொஸ்கோவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ந)

## ஆப்கனுக்கான நிதி உதவிகள் தொடரும்

### மேற்கத்தைய நாடுகள் வாக்குறுதி

பான்,டிச.7


ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் அடுத்த ஆண்டுகளில் விலக்கிக் கொள்ளப்பட்டாலும் தொடர்ந்து உதவிகள் அளிக்கப்படும் என்று அமெரிக்கா உட்பட மேற்கத்தைய நாடுகள் வாக்குறுதி அளித்துள்ளன.

ஜேர்மனியின் பான் நகரில் திங்கட்கிழமை நடைபெற்ற 100 நாடு களைச் சேர்ந்த 1,000 பிரதி நிதிகள் கலந்து கொண்ட ஆப்கானிஸ்தான் குறித்த சர்வதேச மாநாட்டில் கர்சாய், ஆப்கானிஸ்தானுக்கு அமெரிக்காவும் மேற்கத்தைய நாடுகளும்தொடர்ந்து உதவிகளைச் செய்ய வேண்டியது மிகமிக அவசியம். அப்படிச் செய்தால் தான் இப்போது நாம் அடக்கப்பட்ட தீவிரவாதிகள் மீண்டும் தலை தூக்காமல் பார்த்துக் கொள்ள முடியும். இந்த உதவிகள் இதே அளவில் இன்னும் 10ஆண்டுகளுக்காவது தொடர்ந்து கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் .

அத்துடன் ஆப்கனின் பொருளாதாரத் தேவைகளை எதிர் கொள்ளவும் ராணுவ வீரர்களுக்குச் சம்பளம் தரவும் தங்களுக்கு 2015இல் 1,000 கோடி அமெரிக்க டொலர் தேவைப்படும் என்று ஹமீத் கர்சாய் மாநாட்டில் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கைக்கு எவ்வளவு தருவோம் என்று திட்டவட்டமாக உறுதி அளிக்காவிட்டாலும் ஆப்கானிஸ்தானுக்கான நிதியுதவிகள் தொடரும் என அந்த மாநாட்டில் பங்கேற்ற நாடுகள் உறுதியளித்துள்ளன.

ஆனால் இந்த முக்கியமான மாநாட்டில் ஆப்கானிஸ்தானுக்குப் பக்கத்து நாடும் அந்த நாட்டுப் பழங்குடி இன மக்களுடன்தொப்புள்கொடி உறவு வைத்துள்ளதுமான பாகிஸ்தான் பங்கேற்கவில்லை. (ந)



சீனா வந்திருந்த கம்போடியா அதிபர் ஹெங்சாம்ரின் (இடது), அந்நாட்டு துணை அதிபர் ஜி-ஜிகாங்கை, பீய்ஜிங் நகரில் சந்தித்துப் பேசினார்.

## ஸ்லோவேனியாவில் ஆட்சி சில்லறை வியாபாரி கையில்

லுஜுபுல்ஜானா, டிச.8

முன்னாள் யுகோஸ்லோவியக் கூட்டரசிலிருந்து பிரிந்து தனி நாடான ஸ்லோவேனியாவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், சில்லறை வர்த்தக வியாபாரியின் இடதுசாரிக் கட்சி எதிர்பாராத வெற்றியைப் பெற்றுள்ளது.

ஸ்லோவேனியாவில் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் ''பொஸிடிவ் ஸ்லோவேனியா'' என்ற இடதுசாரிக் கட்சி வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டின் மிகப் பெரிய சில்லறை வியாபாரியான ஸென் ஜோன் கோவிக், பொஸிட்டிவ் ஸ்லோவேனியா என்ற கட்சியை கடந்த இரு மாதங்களுக்கு முன்தான் ஆரம்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இரு மாதங்களேயான இந்தக் கட்சி ஸ்லோவேனியாவில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது அரசியல் அவதானிகளிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆட்சியைப் பிடித்துள்ள பொஸிடிவ் ஸ்லோவேனியக் கட்சியின் தலைவர் ஜோன் கோவிக் வெற்றி குறித்து கருத்துத் தெரிவிக்கையில்:

மக்கள் திறமை மிகுந்த மாற்றம் ஒன்றை விரும்பியுள்ளனர் எனவும் கடந்த ஆட்சியாளர் களிலிருந்து மாறுபட்டு நாட்டை ஒரு நிறுவனத்தைப் போலத்தான் நிர்வகிக்கப் போகிறார் என்றும் செய்தியாளர்களிடம் கூறினார். (ந)

## பாகிஸ்தானுக்கு யுரேனியம் வழங்க ஆஸ்திரேலியா மறுப்பு

பாகிஸ்தானுக்கு யுரேனியம் வழங்க ஆஸ்திரேலியா மறுப்புத் தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கு யுரேனியம் விநியோகம் செய்வதற்கு ஆஸ்திரேலிய ஆளும் தொழிலாளர் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து தங்களுக்கும் யுரேனியம் விநியோகம் செய்ய வேண்டும் எனப் பாகிஸ்தான் கோரியுள்ளது.இதுதொடர்பாக இந்தியா வரவுள்ள ஆஸ்திரேலிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் கூறுகையில், பாகிஸ்தானுக்கும் யுரேனியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் ஆதரிக்கவில்லை.

இந்த விவகாரத்தில் இந்தியாவுக்கு விதிவிலக்கு உண்டு. இந்தியா சர்வதேச அணுசக்தி சட்டங்களுக்கு ஒத்துழைப்பதுடன், அணுசக்தி வழங்குவோர் குழுவிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. ஆனால் பாகிஸ்தான் இதில் எதற்கும் ஒத்துப் போகவில்லை எனக் கூறியுள்ளார். (ந)

## சீர்குலைந்த அமெ. உறவை வலுப்படுத்த கிலானி விருப்பம்

வாஷிங்டன்;டிசெ.8

அமெரிக்கா உடனான சீர்குலைந்த உறவை மீண்டும் வலுப்படுத்த விரும் புவதாக பாகிஸ்தான் பிரதமர் கிலானி தெரிவித்த கருத்தை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

நேட்டோ தாக்குதல் விவகாரத்தில் பாகிஸ்தான்- அமெரிக்கா இடையிலான உறவுகள் சீர்குலைந்தன. எனினும் நிலவரம் மேலும் மோசமாகாமல் தடுக்க, இருதரப்பிலும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் பாகிஸ்தான் பிரதமர்

### வாஷிங்டன் வரவேற்பு

யூசுப் ரசா கிலானி அளித்த பேட்டியில்; அமெரிக்கா உடனான பாகிஸ்தானின் நல்லுறவு, மீண்டும் தொடர வேண்டும் எனத் தான் விரும்புவதாக தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த அமெரிக்க வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மார்க் டோனர்; 'கிலானியின் விருப்பத்தை வரவேற்கிறோம். இந்த உறவு அமெரிக்காவின் பாதுகாப்புக்கு மிக முக்கியமானது. பாகிஸ்தானின் நலனுக்கும் உகந்தது என்றார். (ந)

## பல ஆயிரம் கோடி தொன் வைரத்துடன் புதிய கிரகங்கள்



வாஷிங்டன்

பூமியை விட 15 மடங்கு பெரிய, பல ஆயிரம் தொன் வைரங்களுடன் புதிய கிரகங்கள் இருப்பது சமீபத்திய கண்டுபிடிப்பில் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஒஹியோ மாநிலப் பல்கலைக் கழக புவியியல் துறை விஞ்ஞானிகள் இந்தக் கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

கார்பன் எனப்படும் கரிய தாதுக்கள் பூமிக்கடியில் அதிக அழுத்தத்தில் இருக்கும்போது ஒளிரும் தன்மை பெறுகின்றன. அவைதான் வெட்டி எடுக்கப்பட்டு வைரம் எனப்படும் விலை மதிப்புமிக்க பொருளாகக் கருதப் படுகின்றன. இத்தகைய கார்பன் படிமங்களை அதிகம் கொண்ட கிரகங்கள் சூரிய மண்டலத்தைச் சுற்றிலும் அதிகமாக காணப்படுகின்றன என ஒஹியோ மாநிலப் பல்கலைக்கழக புவியியல் துறை ஆராய்ச்சிக் குழுத் தலைவர் வெண்டி பனேரோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

பூமியைவிட 15 மடங்கு பெரிய கிரகங்கள் இருக்கின்றன. அவற்றில் பாதிக்கும் மேற்பட்ட பரப்பு வைரப் படிமங்களைக் கொண்டிருக்கலாம். காற்று இல்லாததால் உயிரினங்கள் வசிக்க வாய்ப்பற்ற இந்தக் கிரகங்களில் உள்ள வைரங்கள் பல ஆயிரம் கோடி தொன்களாக இருக்கும் . அதிக வெப்பம் கொண்ட இந்தக் கிரகங்களின் கார்பன் படிமங்களில் பெரும்பாலானவை வைரமாக இருக்க வாய்ப்புள்ளது என்று வெண்டி கூறினார். (ந)

## ஈராக்கில் தொடர் குண்டுத் தாக்குதல்கள் 28 யாத்திரிகர்கள் சாவு; 70 பேர் காயம்

ஹில்லா, டிசெ.8


ஈராக்கில் தொடர்ச்சியாக நடைபெற்ற குண்டுத் தாக்குதல்களில் 28 யாத்திரிகர்கள் உயிரிழந்தனர்; 70 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

தலைநகர் பக்தாத்துக்கு அருகேயுள்ள ஹில்லா நகரில் யாத்திரிகர்கள் கூடியிருந்த இடத்துக்கு அருகில் நின்றுகொண்டிருந்த காரினுள் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 16 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 45 பேர் காயமடைந்தனர். இந்த நகரின் மற்றொரு இடத்தில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் இருவர் உயிரிழந்தனர். இதுபோன்று



பாக்தாத்தின் பல்வேறு இடங்களில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 10 பேர் உயிரிழந்ததுடன் 30 பேர் காயமடைந்துள்ளனர் . முகரம் பண்டிகையை யொட்டி புனிதத் தலங்களுக்குச் சென்று கொண்டிருந்த ஷியா பிரிவைச் சேர்ந்த முஸ்லிம்கள் மீதே தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. (ந)

# இன்றைய இலங்கையின் கல்விமுறை






## ஆக்கபூர்வமானது

தற்போதைய இலங்கையின் கல்வி முறையானது மிகச் சிறந்த ஒன்றாகும். கடந்த காலங்களிலிருந்த கல்வி முறையைக் காட்டிலும் மேலானதாகவே தற்போதைய கல்வி முறை இருக்கின்றது.

தற்போதைய கல்வி முறையானது ஆஸ்திரேலியா நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருக்கும் கல்விமுறைக்கு ஒப்பானதே. தனியே பாடப்புத்தகத்துடனான கல்வியை நாங்கள் தான் மேற்கொள்கின்றோமே தவிர, இலங்கையின் கல்வி முறை அப்படி அமையவில்லை. ஒப்படைகள் என்பது எமது கல்விச் செயற்பாடுகளின் ஒரு அங்கமாகவே இருக்கிறது. ஒப்படைகள் மூலம் நாங்கள் எமது கல்விச் செயற்பாடுகளின் ஒவ்வொரு விடயத்தையும் செய்முறை அனுபவ- ரீதியாக செய்யக்கூடியதாக உள்ளது.

மேலும் தற்போதைய கல்வி முறையில் பாடவிடயங்களுக்கும் மேலதிகமாக உள்ள வாழ்க்கைத் தேவையான சில கல்விச் செயற்பாடுகளும் எமது கல்வி முறை தரமானது என்பதையே எடுத்துக் காட்டுகின்றன. அத்துடன் சர்வதேச தரத்துக்கு இணையான பரீட்சை முறைகளும் காணப்படுவதால் இலங்கையின் கல்வி முறை ஆரோக்கியமானது என்று கூறமுடியும்.

நி.தர்ஷன், கோண்டாவில்.

## ஆக்கபூர்வமற்றது

அதீத திறமை கொண்ட எமது நாட்டவர்களுக்கு எமது நாட்டுக் கல்வி முறையானது வாய்ப்பானதாகவோ வளம்மிக்கதாகவோ அமையவில்லை. ஒரு தாயின் வயிற்றுக்குள் வளரும் குழந்தை கூட தரம்- 5 புலமைப்பரீட்சையின் கெடுபிடி அவலத்தை எண்ணி பிறக்கவா விடவா என்றெண்ணும் நிலைமையில் உள்ளது.

தரம்- 8 இல் அமையும் புலமைப்பரீட்சைதான் இலங்கையையே மாற்றி அமைக்கும். பாடத்திட்டங்களையும் பரீட்சைகளையும் அமுல்படுத்துவதில் வெற்றிகண்டிருக்கின்றோமே தவிர நமது நாட்டுக்கேற்ற வகையிலான கல்வி முறையில் இன்னுமே வெற்றி காணப்படவில்லை. விவசாயத்தை மையமாகக் கொண்ட தொழில்நுட்பம் ஊடாகத் தன்னிறைவை எட்டக்கூடியதான ஆக்கபூர்வமான கல்வி முறை வெல்லப்பட்டாலொழிய புத்திசாலிகளை ஏற்றுமதி செய்கின்ற ஒரு வறுமை நாடாகவே இலங்கையின் கல்வி முறை அமைந்துள்ளது. உலகையே நம்பித் தவமிருக்கும் கல்விமுறையிலேயே நாம் வாழ்ந்து வருகின்றோம்.

எனவே எமது கல்விமுறை எமது நாட்டுக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்படும் வரையில் ஆரோக்கியமற்றதே.

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

# இலட்சியக் கனவொன்று

நான் சுமப்பது வலையை மட்டுமல்ல
மன உறுதியையும்தான்- உன்
கனவுகளுக்காக நான் விரிப்பது
வலைகளை மட்டுமல்ல
என் இரத்தத்தையும்தான்
உன் இலட்சியத்துக்காக நான் தூக்குவது
வலைகளை மட்டுமல்ல - உன்
வெற்றிக்கான பாதுகாப்பு வலைகளையும்தான்!
மீனவனாய் படகில் நான் கடலுக்கு செல்கையிலும்

சிந்தனையோ உன் கல்வியிலே!
இந்த ஏழைத் தந்தையின் இமைகளிலும்
இலட்சியக் கனவொன்று உண்டு
இவ்வுலகில் அழியாத செல்வமாய்
சேமிப்பது கல்வி ஒன்றே
கல்வி என்பது கரை காண முடியாதது
கல்லாதவன் கண் இருந்தும் குருடனாவான்
உனது வாழ்வினில் எந்நிலை வந்திடினும்
கல்வியால் உயர்ந்திடு - அதையே
உன் கனவாகக் கொண்டிரு

பி.நிவேதிகா,
சக்கோட்டை.

விவாதமேடை பகுதியில்
"இன்றைய இளம் சமுதாயத்தின் இணையப்பாவனை ஆரோக்கியமற்றது" என்ற அணி வெற்றி பெற்றுள்ளது. அந்த அணிக்காக வாக்களித்தவர்களில் வெற்றி பெற்றோர் விவரம்:

ச. அனுஷா- சித்தன்கேணி
லோஜி செந்தில்லிங்கம்-
189, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.
பி.விசாகன்- மீசாலை மேற்கு, மீசாலை.

சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர்:
வி.திவாகரன்-
யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி

மேலும் சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர்கள்:
க.கஸ்தூரி-
தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி.
க.சோபிகா- சாவகச்சேரி.
எஸ்.சுலக்ஷன்-
சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.
ஆத்மிகா பகவத்சிங்- நீர்வேலி தெற்கு.
ஆர்த்திகா சுவேந்திரன்-
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

# சிகரங்களைத் தொட சிரமங்களை ஏற்க வேண்டும்

நேற்று நமக்கு முடியாமல் இருந்தது இன்று நமக்கு முடிவதாக இருக்கும். தொடர் முயற்சி நல்வினை பயக்கும். "நேற்று அசாத்தியமாய் இருந்தது இன்று சாத்தியமாகும் அற்புதத்தை ஒவ்வொரு நாளும் நாம் கண்டு வருகின்றோம்" என்றார் அண்ணல் காந்தி. வேதனையைப் பொறுத்துக் கொள்பவனே வெற்றியடைவான். சிரமங்களைத் தாங்கிக் கொள்பவனே சிகரங்களைத் தொடுவான்.

மார்க்கோணி வானொலியைக் கண்டுபிடித்து தனது தாய்நாடான இத்தாலியில் அமைக்க முயன்றபோது அதனை இத்தாலிய அரசு ஏற்க மறுத்துவிட்டது.

கலிலியோ 'பூமி தான் சூரியனைச் சுற்றுகிறது' என்ற பேருண்மையைச் சொல்லியதற்காக மதவிரோதி என்று முத்திரையிட்டு அவரை உயிரோடு எரித்தனர்.

கருணையே உருவான அன்னை தெரேசா அன்பு காட்டி எல்லோருக்கும் தொண்டு செய்தபோது மதத்தைப் பரப்ப வந்தவர் என்று குற்றஞ்சாட்டினார்கள்.

சாதனையாளர்களின் ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும் சொல்ல முடியாத துன்ப நிகழ்வுகளும் சோதனைகளும் சொல்லித் திரிவதைவிட வருவதை ஏற்று எல்லாம் நன்மைக்கே என்றெண்ணி காரியமாற்றிட வேண்டும். எதற்கெடுத்தாலும் மற்றவர்களையும் சமூகத்தையும் குறைகூறிக் கொண்டே இருப்பவர்களால் ஒருபோதும் முன்னேற முடியாது.

நாம் இன்றைக்கு மலைப்போடு நோக்குகின்ற பிரச்சினைகள் நாளைக்கும் தொடர வேண்டிய அவசியமில்லை. பல கஷ்டங்கள் நிரந்தரமானவை என்று நாம் தான் தப்பாக நினைக்கின்றோம். வானத்திலுள்ள சூரியனை மேகம் மறைக்கின்றபோது இருள் படர்கிறது. சிறிது நேரத்தின் பின்னர் மேகம் விலகியவுடன் பிரகாசம் திரும்பவும் வந்து விடுகிறது. வாழ்க்கையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளும் அப்படித்தான் நிரந்தரமானவை அல்ல.

வல்லூறு வானத்தில் மட்டும் ஜெயிக்கும், முதலை நீரில் மட்டுமே ஜெயிக்கும், புலி காட்டில் மட்டுமே ஜெயிக்கும். நாங்கள் வாழ்க்கையில் ஜெயிக்க வேண்டும்.

கடல் தாண்டும் பறவைகளுக்கு வழியில் மரங்கள் கிடையாது. ஆனாலும் கண்டம் தாண்டும் சிறகுகள் வலிக்காது. முடிவான இலக்கை நோக்கிப் பயணிக்கும் போது பயணம் ஒளிமயமானதாக இருக்கும். சிறுசிறு துன்பங்களும் இன்பங்களாக மாறிவிடும். இலக்கில்லாத முயற்சி, சிறகு இல்லாத பறவை, நூலில்லாத பட்டம் பயன் பெறப் போதில்லை. அதுபோலவே மனிதர்களும் வெற்றியின் சிகரத்தைத் தொட பல சிரமங்களை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். "உளி தாங்கும் கற்கள்தானே மண் மீது சிலையாகும், வலி தாங்கும் உள்ளம் தான் நிலையான சுகம் காணும்."



சித்திரா போகீந்திரன், மாவிப்பாய்.

# சமாதானத்தின் கதவு திறக்கப்படுமா ?


ஏய்... வெண்புறாவே!
தமிழனாய்ப் பிறந்த தலைவிதியை
நொந்து
ஏந்துகிறேன் எந்தன் கைகளில்
ஆயுதங்கள்! அல்ல...
எழுதுகோளை
புதியதோர் சரித்திரம் எழுதுகிறேன்
சமாதானத்தின் கதவு திறக்கப்படும்
என்ற நம்பிக்கையில்

ஏய்... வெண்புறாவே!
மானமுள்ள தமிழராய் மார்புதட்டி
நிமிர்ந்து நின்றவர்கள் பூமிக்குள்
புதையுண்ட மாயமென்ன?

ஒவ்வொரு இரவுக்கும் விடியல் உண்டு
ஆனால்... தமிழனுக்கு
விடிவு என்பது இல்லை
ஏனெனில் சிறுபான்மையினர்!
எனும் முத்திரை குத்தப்பட்டமையால்

ஏய்... வெண்புறாவே!
ஒவ்வொரு பூட்டும் செய்யப்படும்போது
அதற்கான திறவுகோளும்
செய்யப்படுகின்றன- ஆனால்...
தமிழனுக்கான சமாதானத்தின்
கதவுகள் திறக்கப்படுவதற்கு
அந்தத் திறவுகோளும் இன்றுவரை
செய்யப்படவில்லை...
அதுதான்
தமிழன் எங்கு சென்றாலும்
அங்கெல்லாம் அவனுக்கான
சமாதானத்தின் கதவுகள்
பூட்டப்பட்டே உள்ளன
சமாதானம் என்பது
ஒருவேளை பிணத்துக்கும்
கிடைக்கலாம்...!
ஆனால்.. தமிழனுக்கு!?

பி. அகில்,
யாழ்ப்பாணம்.



## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

இன்றைய இலங்கையின்
கல்வி முறை

| ஆக்கபூர்வமானது | ஆக்கபூர்வமற்றது |
|---|---|
| ☐ | ☐ |

பெயர்: ....................................
முகவரி: ....................................
அடையாள அட்டை இல..
....................................

உங்கள் தீர்ப்புக்களை 29.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

இளவல்கள் வட்டம்

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :-....................................
முகவரி :-....................................
....................................
.................... ....................
திகதி கையொப்பம்

# நாட்டு மக்களை ஒன்றிணைப்பதே ஜனாதிபதியின் அடுத்த இலக்கு



### பிரதமர் தெரிவிப்பு

கண்டி, டிசெ.8

நாம் அனைவரும் இலங்கையர் என்ற சிந்தனையின் அடிப்படையில் இந்த நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றிணைப்பதே ஜனாதிபதியின் அடுத்த இலக்கு என்று பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கண்டி மஹிய்யாவ மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பாடநூல் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் அனைவரும் இலங்கையர் என்ற கோட்பாட்டின் கருத்து, சிந்தனை ரீதியான ஒன்றிணைப்பே தவிர மதங்களையும், இனங்களையும், கலாசாரங்களையும் ஒன்று சேர்ப்பதல்ல. மதங்கள் மற்றும் கலாசாரத்துக்கு எவ்வித பாதிப்பும் இதனால் வரப்போவதில்லை.

இன்று மாணவர்கள் மத்தியில் ஒழுக்க விழுமியங்கள் படிப்படியாக மறைந்து வருகின்றன. இதன் காரணமாகவே பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் போதைப் பழக்கம் மற்றும் அமைதியின்மை போன்ற செயல்கள் இடம்பெறுகின்றன.

எனவே பாடசாலை ஆசிரியர்களுக்கு மாணவர்களை ஒழுக்க சீலர்களாக மாற்றுவது பொறுப்பான கடமையாகும்.

இன்று 37 மில்லியன் புத்தகங்கள் இலவசமாக மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டன. முழு உலகிலும் இவ்வாறு அதிகமான புத்தகங்களை இலவசமாக வழங்கும் நாடு இலங்கையாகத்தான் இருக்கும் - என்றார். (ச)

# ஆசிரியர் இடமாற்றத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்



சம்மாந்துறை,டிசெ.8

கிழக்கு மாகாணத்தில் முறையற்ற விதத்தில் இடம்பெறும் ஆசிரியர் இடமாற்றத்தை நிறுத்தக்கோரி சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்கள் நேற்று சம்மாந்துறை ஹிஜ்ரா பள்ளிவாசலின் முன்பாக இருந்து வலயக் கல்வி பணிமனையை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பெண்களின் இடமாற்றத்தை இரத்து செய், எமது குழந்தைகளின் உரிமையை பாதுகாக்க, சம்பூரில் பெண் ஆசிரியைக்கு நடந்த நிகழ்வை எமக்கு ஏற்படுத்தாதே, தாயையும் குழந்தையையும் பிரித்து தாய்-சேய் உரிமையை மறுக்காதே என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி கோஷங்கை எழுப்பினர். (ச)

## மின்சாரம் தாக்கி யானைகள் பலி

அம்பாறை,டிசெ.8

அம்பாறை, வீரகொடை பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி இரண்டு யானைகள் கடந்த திங்கட்கிழமை இரவு உயிரிழந்துள்ளன என்று வீரகொட பொலிஸார் தெரிவித்தனர்.

வீரகொட, 17ஆவது கொலனி விகாரைக்கு அண்மையிலுள்ள பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலியூடாக இந்த யானைகள் ஊடுருவ முற்பட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளன.

உயிரிழந்த யானைகளை அப்புறப்படுத்தி புதைக்கும் நடவடிக்கைகளில் பொலிஸாரும் வனவிலங்கு அதிகாரிகளும் ஈடுபட்டு வருகின்றதாக வீரகொட பொலிஸார் தெரிவித்தனர். (ச)



நாடாளுமன்றில் சமர்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து ஜே.வி.பி. உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பதுளை பிரதான பஸ் நிலையத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## கிண்ணியாவில் டெங்கு ஒழிப்பு

திருகோணமலை,டிசெ.8

கிண்ணியா நகரிலிருந்து டெங்கு நோயை முற்றாக ஒழிக்க கிண்ணியா நகர சபை டெங்கு ஒழிப்பு செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்தத் திட்டம் வெற்றியடையும் பட்சத்தில் டெங்குநோயை இங்கிருந்து முற்றாக ஒழிக்கமுடியும் என்று கிண்ணியா நகரபிதா டாக்டர் எம்.எம். ஹில்மி மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் வெற்றியளிக்க அனைத்து உதவிகளையும் தாம் வழங்கத் தயாராக இருக்கிறோம் என்று யு.எல். ஏ. அஸீஸ் தெரிவித்துள்ளார்.

## ரயில் சேவை மட்டுப்படுத்தப்பட்டது

குருநாகல்,டிசெ.8

குருநாகல் ரயில் நிலையத்துக்கு அண்மையில் ரயில் ஒன்று தடம்புரண்டுள்ளமையால் பிரதான ரயில் பாதைகளில் ரயில் சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில் கட்டுப்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தடம்புரண்ட ரயிலை மீட்டு பாதையை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில் கட்டுப்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## நிதி மோசடியில் ஈடுபட்ட பிக்குவுக்கு விளக்கமறியல்

கண்டி, டிசெ.8

நிதிமோசடியில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின்பேரில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பிக்குவை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நிதிமோசடியில் ஈடுபட்டார் எனக் கூறப்பட்டு கண்டிப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த இந்தப் பிக்கு கடந்த திங்கட்கிழமை சட்டத்தரணி மூலம் கண்டி நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ச)

## ஆபாசப் படம் வைத்திருந்த இரு இளைஞர்கள் கைது

### ஒரு வாரத்துக்குள் 20 பேர் மாட்டினர்

திருகோணமலை, டிசெ.8

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப் படங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இரு இளைஞர்களை உப்புவெளிப் பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் செல்வநாயகபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசத்தின் முக்கிய இடமொன்றிலிருந்து ஆபாசப் படக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த வேளையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் றொஹான் ஜயவர்தன முன் னிலையில் ஆஜர்படுத்திய போது ஒருவருக்கு தலா 1,500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதே குற்றத்துக்காக இந்த வாரத்துக்குள் 20 இற்கு மேற்பட்ட இளைஞர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தியதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## ஹெல்மெட்டுக்கு வெள்ளி விடுமுறை கேட்கிற கிழக்கு உலாமா கட்சி

### உலமா கட்சி ஜனாதிபதிக்கு மகஜர்

மட்டக்களப்பு,டிசெ.8

தலைக் கவசம் அணியும் சட்டத்தை வெள்ளிக்கிழமை நாள்களில் தளர்த்துமாறு அகில இலங்கை உலமா கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீத், ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மனுவிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உள்வீதிகளால் பள்ளிவாசல்களுக்குச் செல்வோர் கூடத் தலைக் கவசம் அணிய வேண்டும் எனப் பொலிஸார் கட்டாயப்படுத்துவது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

அக்கரைப்பற்று - கல்முனை ஆகிய பிரதேசங்களில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் தலைக்கவசம் அணியும் சட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது. குறிப்பாக உள்வீதிகளிலும் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்துவதனால் பள்ளிவாசலுக்குச் செல்வோரும் கட்டாயம் தலைக்கவசம் அணியவேண்டும் என்று பொலிஸாரால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் பள்ளிவாசல்களுக்குச் செல்லுகையில் பெரும்பாலும் தலையில் தொப்பி அணிந்துசெல்வர். அத்துடன், தலைக்கவசங்கள் பள்ளிவாசல்களுக்குள் நிறைவது அசௌகரியங்களை தொழுபவர்களுக்கு ஏற்படுத்தும்.

நமது நாடு மதங்களுக்கும், கலாசாரங்களுக்கும் மதிப்பளிக்கும் நாடு என்ற வகையில் உள்வீதிகளால் தொப்பி அணிந்து பள்ளிவாசல்களுக்குச் செல்வோர் விடயத்திலும், வெள்ளிக்கிழமை பிரதான வீதியால் தொப்பி அணிந்து பள்ளிவாசல் செல்வோருக்கும் இந்த விடயத்தில் சலுகை வழங்குங்கள்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பாடசாலைக்கு நிதி ஒதுக்கீடு

மஸ்கெலியா, டிசெ.8

மஸ்கெலியா மோட்டிங்ஹேம் தமிழ் வித்தியாலயத்திற்கு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜதுரையின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து கட்டடத் தொகுதி ஒன்றை அமைப்பதற்காக 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ச)

## போலி உலோகத் துண்டுகளை விற்றோர் கைது

ஹபரனை,டிசெ.8

தங்கத்துண்டுகளெனக் கூறி வர்ணம் தீட்டிய போலியான உலோகத் துண்டுகளை விற்பனை செய்தனர் என்று கூறப்படும் மூன்று பேரை ஹபரணைப் பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்துள்ளனர்.

ஹபரனை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
வழக்கமான சில பணிகளை தங்கு தடையின்றி செய்து முடிப்பீர்கள். அபாயகரமான பொருள்களைக் கையாளும் போது கவனம் அவசியம். கடிதங்கள் மூலம் எதிர்பார்த்த முக்கிய தகவல்கள் வரலாம். பெற்றோரின் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். கோபத்தைத் தவிர்க்கவும்.

**இடபம்:**
சில விடயங்களில் கருணை, பரிவுடன் நடந்து கொள்வீர்கள். மற்றவர்களின் விமர்சனங்களுக்கு ஆள்படாமல் இருக்க எந்த வேலையையும் கவனமாகச் செய்ய வேண்டும். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகள் அனுகூலமாக முடியும். நீண்ட நாள்களாகச் சந்திக்க நினைத்த ஒருவரை சந்திக்கலாம். பணிகளில் தடை, தாமதம் நேரும்.

**மிதுனம்:**
நண்பர் ஒருவரின் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பீர்கள். குறை சொல்லிக் கொண்டிருந்த உறவினர் ஒருவரே உங்களைப் பாராட்டும் சூழ்நிலை உருவாகும். முக்கியஸ்தர்களின் சந்திப்பு நிகழும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். அதிக அலைச்சலை கொடுக்கும் என்று நினைத்த வேலை சுலபமாக முடியலாம்.

**கடகம்:**
பொது விடயங்களில் அக்கறை காட்டி புகழ் பெற நினைப்பீர்கள். இதுவரை வராத உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டிற்கு வரலாம். நீண்ட நாள்களாக மன உளைச்சலைக் கொடுத்த பிரச்சினை முடிவுக்கு வரும். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். நண்பர் கள், சக ஊழியர்களிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம்.

**சிங்கம்:**
பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் பங்கேற்கலாம். உங்களுக்கு எதிராகச் செயற்படும் சிலர் முன்னிலையில், நண்பர் ஒருவர் உங்களைப் பாராட்டலாம். மற்றவர்கள் செய்த வேலை ஒன்றை நீங்கள் செய்ததாகக் காட்டிக் கொள்வீர்கள். சில விடயங்களில் மனக்கோட்டை கட்டி, அது கடைசி நேரத்தில் கை நழுவலாம்.

**கன்னி:**
தெய்வ வழிபாட்டின் மூலம் திருப்தி காண வேண்டிய நாள். பெரிய அளவில் திட்டமிட்ட வேலை ஒன்று சிலரின் நடவடிக்கையால் தடைப்படலாம். பெற்றோர், குடும்ப உறுப்பினர்களுடன் கடும் வாக்குவாதம் ஏற்படலாம். கிடைக்கும் நேரத்தை வீண் பேச்சுக்கள் பேசி வீணடித்து விட்டு, பின்னர் அவசரமாகச் செயற்படுவீர்கள். மன அமைதி கெடும்.

**துலாம்:**
வாகன யோகத்துக்கு வாய்ப்பு உண்டு. கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவருக்கு பதில் உதவி செய்வீர்கள். நடக்குமோ, நடக்காதோ என்று நினைத்த காரியம் ஒன்று நல்லவிதமாக நடந்து விடலாம். முக்கியமான விடயம் ஒன்றுக்காக பொன், பொருள்களை அடகு வைக்கலாம். இனிய அனுபவம் பெறலாம்.

**விருச்சிகம்:**
சிக்கலாகுமோ என்று பயந்த ஒரு விடயம் எளிதாக முடிந்து விடும். உத்தியோக சூழ்நிலை ஆறுதல் தருவதாக அமையும். வியாபாரிகள் வர்த்தக விடயங்களில் கொடுத்த வாக்கைக் காப்பாற்றலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசுவீர்கள். சிலரை வெறுப்பேற்றும் வகையில் பேசுவீர்கள்.

**தனுசு:**
உங்களின் வேலை ஒன்றுக்காக மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள். சில விடயங்களில் ஆரம்பத்தில் தடை ஏற்பட்டாலும், பின்னர் சுமூகமாக முடிவுக்கு வரும். செவிகுளிரும் செய்திகளைக் கேட்கலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். நீங்கள் நல்லது சொன்னாலும், சிலர் அதைத் தவறாகப் புரிந்து கொள்ளலாம்.

**மகரம்:**
ஒய்வெடுக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொடுப்பீர்கள். உறவினர் ஒருவர் தாங்கள் செய்ய வேண்டிய வேலை ஒன்றை உங்களை நம்பி ஒப்படைக்கலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, புதியவர் ஒருவரின் உதவி கிடைக்கும்.

**கும்பம்:**
தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய பணவரவுகளைப் பெறலாம். வழிகாட்டியாக இருந்த சிலரைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்குத் தெரியாமல் ரகசியமாகச் சில காரியங்களைச் செய்வீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் நாள். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். கலகலப்பான அனுபவம் உண்டு.

**மீனம்:**
கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போனது போன்ற சூழ்நிலையைச் சந்திக்கலாம். உங்களிடம் பணமிருந்தும் நண்பர்கள் சிலருக்கு உதவி செய்யாமல் தட்டிக் கழிக்கலாம். வீண் பேச்சு பேசுவதில், அரட்டை அடிப்பதில் நாட்டம் செல்லும். தெரியாத விடயம் ஒன்றில் தலையைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம்.

# அதிகார பகிர்வு அனுபவங்களை இலங்கை அரசுடன் பகிர்ந்து கொள்ள எந்நேரமும் தயார்!

### இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் ரன்கின் மின்னஞ்சல் மூலம் 'உதயனு'க்கு விசேட செவ்வி

**கேள்வி:-** இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து சுருக்கமாகக் கூறுவீர்களா?

**பதில்:-** ஒரு பீடையைப்போல கடந்த 30 வருடங்களாக இலங்கையை வாட்டி வதைத்து வந்த உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. இதைப் பிரிட்டன் பெரிதும் வரவேற்கின்றது. அரசியல் நல்லிணக் கப்பாட்டை அடைவதற்கும், நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்குமான அரும் பெரும் முயற்சிகளுக்கு நாம் சமத்துவ ஆதரவை வழங்க விரும்புகிறோம்.

பொருளாதார சுபீட்சத்தைக் கட்டி எழுப்புவதற்கு இது மிக அத்தியாவசியமாகும். பிரிட்டன் இலங்கையின் இரண்டாவதாகப் பெரிய வர்த்தக பங்குதார நாடாகத் திகழ்கிறது. பொருளாதார ரீதியாக இலங்கை சுபீட்சத்தைத் தழுவுவதையே நாம் ஆவலுடன் நோக்குகின்றோம்.

**கே:-** நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிடும் விடயத்தில், அரசு நீண்டகாலமாக அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கின்றது. இது குறித்து தங்களின் கருத்து என்ன?

**ப:-** நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பூர்த்தியடைந்துள்ளமையை நாம் வரவேற்கின்றோம். அதேவேளை, அதன் தாமதமற்ற வெளியீட்டை எதிர்பார்க்கின்றோம். அதில் இடம்பெற்றுள்ள அம்சங்கள் குறித்து எங்களால் முன்கூட்டியே தீர்மானித்து விட இயலாது. அத்துடன், தேசிய மீள் நல்லிணக்கப்பாட்டுக்கும், ஸ்திரப்பாட்டுக்கும் அது குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கக்கூடும் என நம்புகின்றோம்.

***கே:-*** அரசு போர்க் குற்றவாளிகளைத் தண்டிக்கும் என ஒரு மாநாட்டில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவரது அறிவித்தலை நீங்கள் வரவேற்கின்றீர்களா? அதேவேளை, அரசு தனது வாக்குறுதியைக் காப்பாற்றுமா?

**ப:-** இலங்கை அரசின் சமீபத்திய அறிக்கைகளை நாம் வரவேற்கின்றோம். மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டோருக்கு புகலிடம் அளிக்கப்படமாட்டாது என்பதை அவை துலாம்பரமாக தெளிவுபடுத்துகின்றன. இரு தரப்புகளிலும் யுத்தகாலத்தில் பாரதூரமான மீறல்கள் இடம்பெற்றிருக்கலாம். அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகள் மிக அவசியம் என நாம் கருதுகின்றோம்.

**கே:-** நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை இலங்கை அரசு வெளியிட்ட பின்னர், அதிலுள்ள பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கு, இலங்கை அரசுக்கு, பிரிட் டிஷ் அரசு அழுத்தம் கொடுக்குமா?

**ப:-** நாங்கள் முதலில் அறிக்கையைப் பார்வையிட வேண்டும். அதற்குப் பின்னரே கருத்துத் தெரிவிக்க முடியும். இத்தருணத்தில் சமீபத்தில் பிரிட்டிஷ் அமைச்சர் அலிஸ்டயர் பேர்ட் குறிப்பிட்டதையும் நினைவு கூருகிறேன்.

அவர் தமது அறிக்கையில், தேசிய நல்லிணக்கப்பாடு, ஸ்திரப்பாடு, சண்டை இழப்புகளுக்கான சுலபமான மீட்சி ஆகியவற்றில் தான் கொண்டுள்ள ஈடுபாட்டை - அர்ப்பணிப்பை வெளிப்படுத்த இந்த முக்கிய வாய்ப்பை இலங்கை அரசு தக்க வகையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் இதையே தாங்கள் எதிர்ப்பார்க்கின்றனர் என்றும் குறிப்பிட்டிருந்தார்.


***கே:-*** பிரிட்டனிலும், உலக நாடுகளிலும் வாழும் இலங்கைத் தமிழர்கள், பிரிட்டிஷ் அரசு மீது பழி சுமத்தியும், அதனை விமர்சித்தும் இருக்கிறார்கள். இனப்படுகொலையைத் தடுக்க தக்க தருணத்தில் நடவடிக்கை எடுக்க பிரிட்டிஷ் அரசு தவறிவிட்டது என்பதே அவர்களின் வேதனையாகும். இந்தச் சூழ்நிலையில் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு, இலங்கை அரசுக்கு, பிரிட்டிஷ் அரசு துணிகரமாக அழுத்தம் கொடுக்க முன்வரும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?

**ப:-** ஒரு ஜனநாயக சமூகம் என்ற அடிப்படையில், அடுக்குத் தொடர்போல் உள்ள பல்வேறு சமூகங்களின் அபிப்பிராயங்களுக்கும் பிரிட்டிஷ் அரசு செவிமடுக்கிறது. இலங்கையைப் பொறுத்த மட்டில் நாம் இலங்கை அரசுடனும், அரசியல் கட்சிகளுடனும் தொடர்பில் இருக்கின்றோம்.

அதேவேளை, அனைத்து வகையிலான பின்புலங்களையும் கொண்ட புலம்பெயர்ந்த இலங்கையர்களுடனும் தொடர்பில் உள்ளோம். இவர்களில் சிங்களவர்கள், முஸ்லிம்கள், தமிழர்கள் ஆகியோரும் அடங்குவர். எனினும், எந்த வொரு வெளிக் குழுமமும் எங்களின் கொள்கை யைத் தீர்மானிப்பதில்லை.

எங்களின் மரபுரிமை, பாதுகாப்புக்கும் சுபீட்சத்துக்குமான உலக இலக்குகள் ஆகியவற்றை எங்கள் கொள்கை அடிப்படையாகக் கொண்டது. இந்நிலையில் எல்லாப் பின்புலத்தையும் கொண்டிருக்கும் புலம்பெயர்ந்த இலங்கையரால் - இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கும், நல்லிணக்கப்பாட்டை ஊக்குவிப்பதற்கும் காத்திரமான பங்களிப்பை நல்க முடியும் என நாம் நம்புகின்றோம்.

**கே:-** நோர்வே, இலங்கையில் தான் மேற்



> **கடந்தகால துயரங்களுக்கு இலங்கை நேர்மையான பரிகாரம் தேடுவதே தற்போதைய அதிமுக்கிய தேவை.**

கொண்ட சமாதான முன்னெடுப்புக்கள் தொடர் பான ஆய்வறிக்கையைச் சமீபத்தில் வெளியிட் டிருந்தது. அனைத்து சமாதான முன்னெடுப் புகளும் தோல்வியுற்றமைக்கு எந்தத் தரப்புப் பொறுப்பு எனக் கூறமுடியுமா?

ப:- சமாதான முன்னெடுப்புகள் சம்பந்த மான அனுபவத்திலிருந்து நாமெல்லோராலும் ஒரு படிப்பினையைக் கற்றுக் கொள்ள முடியும். தற்போதைய அதிமுக்கிய தேவையா னது, துயரத்துக்குரிய கடந்தகால நிகழ்வுக ளுக்கு நேர்மையோடு பரிகாரம் காண்பதற்கான முயற்சியில் இலங்கை ஈடுபடுவதாகும். இதுதான் தற்போதைய அதிமுக்கிய தேவை.

வலுவான, பிரகாசமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப இதுவே முக்கிய திறவுகோல் என நாம் நம்புகின்றோம். வட அயர்லாந்தில், நாம் மேற்கொண்ட சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பணியில், நாமாகவே கற்றுக் கொண்ட பாடமும் இதுதான்.

**கே:-** தமிழர்களின் அடிப்படை உரிமை களை ஈட்டுவதற்காக, மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த ஆயுதப் போராட்டம் குறித்து பேச வேண்டும் என்பது எனது நோக்கமல்ல. எனினும், போர் முடிவுற்று இரண்டரை வருடங்கள் கடந்துள்ள இச் சூழ்நிலையில், தமிழர்கள் தங்களின் அபிலாஷைகளை அடை வதற்கு சர்வதேச சமூகம் உதவுமா?

ப:- இலங்கையில் நீண்டகால அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான நடவடிக்கை களுக்கு நாம் ஆதரவளிப்போம். இது தொடர் பான விவகாரங்களில் சிலவற்றுக்கு பரிகாரம் காண்பதற்கான முன்னெடுப்புகளில் நாடாளு மன்றத் தெரிவுக்குழுவொன்று ஈடுபடவுள் ளது.

இந்த முன்னெடுப்புகளால் விளையும் பயன் களை நாம் எதிர்பார்க்கின்றோம். இலங்கை விரும்புமானால், நாங்கள் பிரிட்டனில் மேற்கொண்ட அதிகாரப்பகிர்வு சம்பந்தப்பட்ட பணிகளின் அனுபவத்தை அதனோடு பகிர்ந்து கொள்வதற்கு தயாராகவே உள்ளோம்.

**கே:-** இலங்கை அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இடம்பெறும் பேச்சுக்களின்போது, அவதானிப்பாளராக, மூன்றாவது தரப்பு ஒன்று பங்குபற்ற வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

ப:- இது சம்பந்தப்பட்ட தரப்புகள், தாங்களாகவே தீர்மானிக்க வேண்டிய ஒரு விடயம்.

**கே:-** இந்த நீண்டகால நெருக்கடிக்கு சமா தான தீர்வொன்றை எட்டுவதற்கு குந்தகமான தடை ஏதும் உண்டா?

ப:- இணக்கப்பாடான தீர்வொன்றுக்கான சாத்தியப்பாடு உண்டு என நாம் நம்புகின்றோம். சண்டையிலிருந்து மீள்வது எப்போதும் சுலப மானதொன்றல்ல. அனைத்துத் தரப்புகளிலும், கடினமான விட்டுக்கொடுப்புகள் தேவை. அவையும் இதயபூர்வமானவையாக இருக்கவேண் டும். அப்படியானால் நிரந்தரமான சமாதா னத்தை அடைந்துவிடலாம் என நாம் நம்புகின் றோம்.

பொருளாதார மீட்சிக்காக, இலங்கை அரசு கணிசமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதேபோல, தீர்க்கப்படாதுள்ள அரசியல் விவ காரங்களுக்கும் தீர்வுகாண அனைத்துக் கட்சி களும் முயல வேண்டும். இம்முயற்சிக்கு எமது ஆதரவு உண்டு.

**கே:-** வரவு-செலவுத்திட்ட பிரேரணையில், பாதுகாப்புத் துறைக்கு பெருந்தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது யுத்தத்துக் குப் பின்னரும், அரசு இராணுவத்தை மேம் படுத்த விரும்புகிறது என்பதையே பிரதிபலிக் கிறது.

இந்த நிலைப்பாட்டில், சமாதானத் தீர்வுக்கு அரசு முன்னுரிமை வழங்குமென நீங்கள் நினைக் கிறீர்களா?

ப:- விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு. இதன் நடவடிக்கைகள் மீளத் தலைதூக்குவதை எவரும் விரும்ப மாட்டார்கள். அதேவேளை, இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்காகவும் சிவில் நிர்வாகமும், இயல்பான சிவிலியன் வாழ்வும் துரிதமாக திரும்புவதற்கும் எமது ஆதரவு உண்டு. *

## விழித்திரை அடையாளம்



ஒரு மனிதரை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்றால் அதற் குச் சுலபமான வழி என்ன? பொதுவாக எல்லோரும் முகத்தைப் பார்த்துக் கண்டு பிடித்து விடுவார்கள்.

ஆனால் மனிதன் தப்பு செய்ய ஆரம்பிக்கும்போது அவனைக் கண்டு பிடிப்பதற்கு வேறுவழிகளைத்தான் கையாள வேண்டும்.

கைரேகைகள் அதற்கு மிகவும் உப யோகப்படுகின்றன.

கைரேகைகள் ஒருத்தருக்கு இருப்பது போன்று இன்னொருத்தருக்கு இருப்பதில்லை. பல்வரிசையும் அப்படித்தான். ஏமாற்றுபவர்கள் அதிகமாகிப் போனால் இருப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

பயோமெட்றிக் என்கின்ற ஒரு தொழில்நுட்பம் இதை உபயோகப்படுத்தி சில பாதுகாப்பு உத்திகளை ஏல்லாம் உருவாக்கி இருக்கிறார்கள்.

அமெரிக்காவில் வீட்டுக்குச் சொந்தக்காரர் குரல் கொடுத்தால் கதவு திறக்கும். அல்லது அவர் கை வைத்தால் கதவு திறக்கும். மற்றவர்கள் யார் என்ன செய்தாலும் கதவு திறக்காது இது எப்படி?

அவரின் குரல் அல்லது கை ரேகை ஒரு மின்னியல் சாதனத்திலே ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருக்கும்.

இவர் குரல் கொடுக்கும்போது அல்லது கையவைக்கும் போது அதை ஒப்பிட்டுப்பார்த்து சரியாக இருந்தால் கதவு திறப்பதற்கு. ஏற்றமாதிரியக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும்.

இதே மாதிரி ஒருத்தரின் விழித்திரையில் உள்ள ரத்தக் குழாய் அமைப்புக் கூட ஒருத்தருக்கு இருப்பது மாதிரி இன்னொருத்தருக்கு இருப்பதில்லை. அதனால் அதை வைத்து அடையாளம் கண்டுபிடிக்கக் கூடிய சாதனங்களும் இப்போது புழக்கத்துக்கு வந்துவிட்டன.

கைரேகையை ஒப்பிடும் சாதனத்தைவிட விழித்திரை இரத்தக் குழாய் அமைப்பை அடையாளம் காணும் சாதனம் மிகவும் நம்பத்தகுந்தது. ஒரு மனிதனை அடையாளம் காண இது எடுத்துக்கொள்ளும் நேரம் ஒரு விநாடிதான்.

குரலை வைத்து அடையாளம் கண்டு கொள்ளும் முறை உண்டு. ஒரு நபரின் குரலை குறியீடுகளாக இனங்காணக்கூடிய சாதனங்கள் ஏற்கனவே அமெரிக்காவில் விற்பனைக்கு வந்துவிட்டன.

ஒருத்தருக்கு ஜலதோசம் பிடிதிருந்தால் கூட அந்தச் சாதனம் சரியாகக் கண்டுபிடித்து விடுகின்றன. குரலை மாற்றிப் பேசுபவர்கள் கூட இந்தக் கருவியை ஏமாற்ற முடியாது.

இதை வைத்திய சாலை, வங்கிகளில் உள்ள இரும்புப் பெட்டகக் காப்பறைகளில் எல்லாம் உபயோகப்படுத்தலாம். குழந்தைகள் உள்ள இடங்களுக்கு இது மிகவும் உபயோகப்படும். கதவு பூட்டப்பட்டிருக்கிறது என்றால் கதவைத் திறக்க சாவியை உபயோகப்படுத்தத் தெரியாத குழந்தைகள் குரல் எழுப்பியே கதவைத் திறந்து விடமுடியும்.

எதிர்காலத்தில் இந்த முறை இன்னும் பல ஆச்சரியங்கள் ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரியரிஸ்கைத் தொட்டதும் கார் ஓடும் வகையில் தற்போது வடிவமைக்கப் பட்டுள்ளது. ஆனால் காரின் சொந்தக்காரன் தொட்டால்தான் கார் ஓடும். அதைப்போன்று ஒரு மனிதனின் நடையை வைத்தெல்லாம் ஆளை அடையாளம் காணக்கூடிய தொழில்நுட்பம் வரலாம்.

என்னதான் தொழில் நுட்பம் வளர்ந்தாலும் குடும்பத்துக்கள் நடக்கின்ற திருட்டுக்களைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டம்.

ஒரு வீட்டில் பெட்டியில் இருந்த பணம் காணாமல் போய்விட்டது. வீட்டுக்காரரோ அல்லது மகனோதான் எடுத்திருக்கவேண்டும். பெட்டியைத் திறந்து பார்த்த அந்த வீட்டுக்கார அம்மா; ''இதில் இருந்த பணத்தை எடுத்தது நிச்சயமாக என் வீட்டுக்காரர் அல்ல என்று உறுதியாகச் சொல்லி விட்டார். அந்த வீட்டுக்காரருக்கு மிகுந்த பெருமை ''எப்படி சரியாக சொல்கிறாய்'' என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண் ''பொட்டியிலே இன்னும் கொஞ்சம் பணம் எஞ்சி இருக்கிறது. அதனால்தான் அப்படிச் சொன்னேன் என்றார்.

**கோ.சுவாமிநாதன்**



நவாலி சென்.பீற்றேஸ் றோ.க.த.க.பாடசாலையில் நடைபெற்ற ஒளி விழா நிகழ்வில் மாணவிகள் நடனமாடும் காட்சி ஒன்று நடைபெறுகின்றது. (எ–100)

# மாணவர்கள் கல்வியறிவை பெருக்கிக் கொள்ள நிறையப் புத்தகங்கள் வாசிக்க வேண்டும்

## உள்ளூராட்சி அமைச்சின் உதவிச் செயலாளர்

வரணி,டிசெ.8

மாணவர்கள் கல்வியறிவை வளர்க்க வேண்டுமாயின் நிறையப் புத்தகங்களை வாசிக்க வேண்டும். புத்தகங்களை வாசிப்பதன் மூலம் பல தகவல்களை உள்வாங்கி அறிவை மேம்படுத்த முடியும் என வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தெரிவித்தார்.

பொது நூலக தேசிய வாசிப்பு மாத நிகழ்வு கடந்த மாதம் வரணியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:-

மாணவர்களுக்காகவே ஆசிரியர் தினம், வாசிப்பு மாதம் போன்ற தினங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன.

மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்துக்கு பெற்றோர் ஊக்கம் கொடுக்க வேண்டும். எமது சமூகத்தில் ஆற்றல் குறைந்தவர்களை நாம் மதிக்க வேண்டும். அரசு இன்று அவர்களுக்காகப் பல திட்டங்களை வகுத்து செயற்படுத்துகின்றது. மாணவர்களுக்கு ஒக்ரோபர் மாதத்தினை வாசிப்பு மாதமெனப் பிரகடனப்படுத்தி அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு இவ்வாறான நிகழ்வுகளை நடத்தி ஊக்குவிக்கின்றது.

6ஆம் தரத்துக்கு மேல் மாணவர்கள் சார்பில் பெற்றோரின் கவனம் வேறு திசையில் செல்கின்றது; ஆங்கில ஆசிரியர்களின் பங்களிப்பு வரணியில் கூடுதலாக உள்ளது. இது மகிழ்ச்சி தரக்கூடியதான விடயமாகும்.

மாணவர்கள் நூலகத்தில் அங்கத்தவர்களாக சேர வேண்டும். தினசரி பத்திரிகைகளை படிக்க வேண்டும். சஞ்சிகைகளை அதிகம் வாசிக்க வேண்டும். தமிழ் மொழியை எவரும் மறக்கக் கூடாது. மாணவர்களாகிய உங்களுக்காகவே இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கல்வி நிலை வளர வாசிப்புப் பழக்கத்தை உயர்த்த வேண்டியது அவசியம். ஒவ்வொருவர் வீட்டிலும் நூலகங்கள் இருக்க வேண்டும். பிள்ளைகளின் வளர்ச்சிக்கு பெற்றோர் முன்மாதிரியாக விளங்க வேண்டும் - என்றார். (எ-122)

# விழிப்புலனற்றோருக்கும் அரசியலில் பங்குபற்றும் உரிமை உள்ளதால் அவர்களைப் புறந்தள்ளி விடமுடியாது

## முன்னாள் கலைப்பீடப் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8

விழிப்புலனற்றோருக்கும் அரசியல் நீரோட்டத்தில் பங்கு பற்றும் உரிமை, தகுதி உண்டு. அவர்களைப் புறந்தள்ளி விட முடியாது என யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்தார்.

கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் சர்வதேச விசேட தேவைக்குட்பட்டோர் தினத்தில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இரா. சிவச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

விழிப்புலனற்றோர் இந்த நாட்டின் மக்கள். அவர்களை நாம் எந்தவொரு நடவடிக்கையிலும் புறந்தள்ளி விடமுடியாது.

விழிப்புலனற்றோர்கள் அரசியலிலும் பங்கு பற்றி நாடாளுமன்றம் வரை செல்ல வேண்டும்.

இவ்வாறு அரசியல் நீரோட்டத்தில் இணைவதற்கு அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது. எதிர்காலத்தில் விழிப்புலனற் றோர்களை அரசியல் நீரோட் டத்தில் இணைத்து தேர்தலில் களமிறங்குவதற்கு நான் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் போகிறேன்.

திருகோணமலை நகராட்சி மன்றத்தில் கூட முன்னர் விழிப்புலனற்றோர் ஒருவர் நகராட்சி மன்ற உறுப்பினராக இருந்து மக்களுக்கு அரும் பணியாற்றியதை மறக்கமுடியாது.

இப்படிப்பட்ட நிலையில் எதிர்வரும் தேர்தல்களில் விழிப்புலனற்ரோரும் பங்கு பற்றி மக்களுக்கு சேவையாற்ற முன்வர வேண்டும். ஊனமுற்றோர்களுக்கான உதவித் தொகை சம்பந்தமாக ஏற்கனவே இலங்கை அரசு ஐக்கிய நாட்டுடன்; ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. ஆனால் அந்த ஒப்பந்தம் கைச்சாத்திட்டும் அவை இது வரைக்கும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

சமூகத்தில் விழிப்புலனற்ற மக்களுக்கு அரசினால் இது வரை எந்த விதமான உதவிகளும் வழங்கப்படவில்லை.

இவர்களின் எதிர்கால வாழ்வுக்கு சர்வதேச தொண்டு நிறுவனங்கள் பல்வேறு உதவிகளை வழங்குவதற்கு முன் வர வேண்டும் - என்றர். (எ-26)

# மாகாணமட்ட சமூக விஞ்ஞான போட்டி முடிவுகள்

*(நேற்றுமுன்தின தொடர்ச்சி)*

வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையே அண்மையில் நடத்தப்பட்ட தமிழ், ஆங்கில மொழி மூல சமூக விஞ்ஞானப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றில் சில நேற்றுமுன் தின உதயனில் வெளியாகின. அவற்றின் தொடர்ச்சி வருமாறு:

**தமிழ்மொழி மூல போட்டி முடிவுகள்**

தரம்7- எஸ்.சாணுகா -நாரந்தனை கணேசா வித்தியாலயம், எஸ். கஜீபன்-கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, பி.கஸ்தூரி- வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை.

எஸ். கஜானனன்-மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம், எஸ்.சர்மிலன்-மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம், எஸ். விதுஷா-மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்.

எஸ்.மயூரன் -கிளி.வட்டக்கச்சி ம.வி, எம்.மதுசுயா- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, எ.ஆர்.எம். பஸாரத்-வவுனியா முஸ்லிம் ம.வி.

கே.கம்சிகா-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கே. கவிப்பிரியா- மீசாலை வீரசிங்கம் ம.வி, எம்.பாணுஜன் சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

தரம் 8 - கி.சாருஜா- கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, எஸ்.சிந்துராஜ் - ஆடியவளை சீ.சீ.தமிழ் கலவன் வித்தியாலயம், பி.விதூசிகன்- நல்லூர் இந்துத்தமிழ் கலவன் பாடசாலை,

ஐ.எம்.சஜித்-மன்னார் பண்டாரவெளி ஜி.எம்.என்.எஸ், எஸ்.அனுசியா-குளமங்கால் ஆர்.சி, எஸ்.கோவர்த்தன்- கிளி. உருத்திரபுரம் ம.வி.

எம்.வை.ஏ.ஷராப்-மன்னார் ரிஷாட் பதியுதீன் ம.வி, டபிள்யூ. சிறின் பாணு-மன்னார் ரிஷாட் பதியுதீன் ம.வி, எம்.சங்கீர்த்தனா -வடமத்திய மகளிர் கல்லூரி, ரி.பாசுபதன்-மீசாலை வீரசிங்கம் ம.வி, எஸ். மயூரன்- வவுனியா மத்திய மகா வித்தியாலயம், எச். திவாரகன்-வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் , எஸ்.முகுந்தன்-யாழ். இந்துக் கல்லூரி.

தரம் 9 - ஐ.துவாரகன்-கிளி.முட்கொம்பன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, ஐ.இலட்சனா- கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, எம். சுதர்சினி தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்,ஜே.நூறுள்ஷிபா-ஒஸ்மானியாக் கல்லூரி.

என். விதுசன்-கிளி உருத்திரபுரம் ம.வி, பி.சிற்சபேசன் -பொலிகண்டி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை, ஏ. சிந்துஜா- தாவடி இந்துத்தமிழ்க் கலவன் பாடசாலை.

பி.மிருநிஷா-கிளி. தென் திரேசா மகளிர் கல்லூரி, ஏ.ஏ.எப். அஷ்பா-மன்னார் ரிஷாட் பதியுதீன் ம.வி, என்.நதுர்ஷா- கிளி. தென் திரேசா மகளிர் கல்லூரி.

கே.கீர்த்தனா- வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, எம்.நிலுஜா- வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை, எஸ்.சோபிகா-மெதடிஸ் பெண்கள் உயர் தரப்பாடசாலை, எஸ்.சாரங்கன்-சாவகச்சேரி இந்துக்கல்லூரி, என். நிரோசாந்-சாவகச் சேரி இந்துக்கல்லூரி.

*(தொடரும்)*

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம், டிசெ.8

வள்ளியம்மை திருமணப் படிப்பு இன்று வியாழக்கிழமை முற்பகல் ஒன்பது மணி முதல் பண்ணாகம் விசவத்தனை முருக மூர்த்தி கோயிலில் நடை பெறவுள்ளது.

வள்ளியம்மை திருமண கந்தபுராண பாடல்கள் படிக்கப்பட்டு உரையும் வாசிக்கப்படவுள்ளன. மாலை ஆலய முன்றலில் குமராலய தீபம் நடைபெற்று சுவாமி வீதியுலா நடைபெறும்.

புராணபடனத்தின்போது அடியவர்கள் மாவிளக்கேற்றி வழிபாடு செய்வர். (எ-28)

* * *

சுழிபுரம்,டிசெ.8

பிள்ளையார் பெரும்கதைப் படிப்பு எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது. இதன் பொருட்டு பறாளை ஈஸ்வரவிநாயகர் ஆலய அடியார்கள் விரத நாள்களில் படிப்பதற்காகப் பெருங் கதை படிப்பு நூலை யாவருக்கும் இலவசமாக வழங்க ஈஸ்வர விநாயக அடியவர் ஒருவர் முன்வந்துள்ளார்.

இந்த நூல் யாவருக்கும் எதிர்வரும் 11ஆம் திகதி வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் நூலைத் தபாலில் பெறவிரும்புவோர் ரூபா இருபது பெறுமதியான முத்திரையை செயலாளர் பஜனைச் சபை சுழிபுரம் முகவரிக்கு அனுப்பி வைத்தால் நூல் அனுப்பி வைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (எ-28)

* * *

சங்கானை அரசடி வைரவூர் ஆலயத்தில் இன்றும் நாளை வெள்ளிக்கிழமையும் சுப்பிரமணிய சுவாமி நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் இடம்பெறவுள்ளது.

வழக்கம்பரை அம்மன் தேவஸ்தான பிரதிஷ்டாபிரதம குரு சிவஸ்ரீ சுந்தர. ஸ்ரீ ரங்கநாதக் குருக்கள் தலைமையில் இவ்விழா குறிப்பிட்ட நாள்களில் அதிகாலை 5 மணி முதல் இடம்பெறவுள்ளது. (எ-29)

* * *

வடமராட்சி, டிசெ.8

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோயிலில் திருக்கார்த்திகை உற்சவம் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் பகல் விசேட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து உற்சவமும் இடம்பெற்று சுவாமி வீதி உலாவந்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்குவார். (எ-236)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், டிசெ.8

'மனநிறைவாக வாழ்வோம்'' நூல் அறிமுக விழா இணுவில் சிவகாமி அம்பாள் கல்யாண மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்றது.

பி.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன், கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (எ)

# கூட்டுறவுச் சங்கங்களில் ஒழுக்காற்று நடவடிக்கை

"கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் கூட்டுறவுப் பணியாளர்கள் மீதான ஒழுக்காற்று விசாரணைகள் தொடர்பான நடவடிக்கைகள் சிலவற்றை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்."

**1972** ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதிக்கு முற்பட்ட காலத்தில் கூட்டுறவுப் பணியாளர்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவும் தொழில் பிணக்குச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய முடிவு செய்யப்பட்டு வந்தன. ஆனால் 1972 மார்ச் 18 ஆம் திகதிக்குப் பின்னர் அதாவது கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுச் சட்டம், துணை விதிகளின் நடைமுறைக்கு அமைய கூட்டுறவுப் பணியாளர்களின் நியமனம், இடைநீக்கல், ஒழுக்காற்று விசாரணை ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

கூட்டுறவுப் பணியாளர்களால் இழைக்கப்படும் குற்றங்கள் சாதாரண குற்றங்களா? அல்லது பெரிய குற்றங்களா? என நிர்ணயிப்பது மிகவும் சிக்கலான ஒரு விடயமாகும். சாதாரண குற்றமாக ஒருவருக்குத் தோன்றுவது இன்னொரு தரப்பாருக்குப் பெரிய குற்றமாகவும் தோற்றப்படுமாயின் அது ஒரு குழப்ப நிலைமையை ஏற்படுத்தி விடும்.

குற்றம் இழைத்த பணியாளர் சேவையில் இருக்கும் போது அவருக்கு எதிரான விசாரணை நடைபெறக்கூடாது எனக் கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுச் சட்டத்தில் எதுவும் கூறப்படவில்லை. ஆயினும் குறித்த பணியாளர் ஒருவரைச் சேவையில் ஈடுபடுத்தும் போது சிற்சில இடையூறுகள் ஏற்பட இடமுண்டு. ஆகவே விசேடமாகப் பெரிய குற்றம் இழைத்த பணியாளரைச் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்தோ அல்லது கட்டாய விடுமுறையில் அனுப்பியோ ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வது சாலச்சிறந்ததாகும்.

பணியாளர் ஒருவர் சாதாரண குற்றம் இழைத்திருந்தால் சேவையில் ஈடுபடுத்திக் கொண்டு ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வதில் தவறில்லை. குறித்த பணியாளரைச் சேவையில் ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் இடையூறுகள் ஏற்பட இடமுண்டு எனக் கூட்டுறவுச் சங்கம் கருதும் நிலையில் குறித்த பணியாளரைச் சேவை இடைநிறுத்தம் செய்யலாம். சாதாரண குற்றம் இழைத்த பணியாளர் ஒருவரைச் சேவையில் இருந்து நீக்குவதற்கோ அல்லது சேவை இடைநீக்கம் செய்யப்பட்ட காலப் பகுதிக்குச் சம்பளம் வழங்காதிருக்கவோ கூட்டுறவுச் சங்கத்துக்கு உரிமை இல்லை. ஆகவே சாதாரண குற்றம் இழைக்கப்பட்ட எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சேவையிலீடுபடுத்திக் கொண்டு ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வது சங்கத்துக்கு நன்மை பயக்கக் கூடியதாகும்.

பணியாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பின் அது பற்றிய ஆரம்ப விசாரணை ஒன்றை நடத்துவது சம்பந்தமாக தகுந்த நடவடிக்கைகளை எடுப்பது இயக்குநர்/ நிர்வாக சபையின் கடமையாகும். குற்றம் இழைத்த பணியாளர் சேவையில் இருக்கும் போது அல்லது அவரது சேவையை இடைநிறுத்தம் செய்த பின்னரும் ஆரம்ப விசாரணையை மேற்கொள்ளலாம். இத்தகைய விசாரணை மிக விரைவில் நடைபெறுவது பற்றி உரிய நிர்வாகிகள் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

ஆரம்ப விசாரணையின் பின்னர் சகல தகவல்களும் அடங்கிய விசாரணை அறிக்கை இயக்குநர் சபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். குற்றம் சுமத்துவதற்குப் போதிய காரணிகள் இருக்குமானால் அத்தகைய குற்றங்களை ஆதாரப்படுத்தக் கூடிய சாட்சிகள், ஆவணங்கள் முதலியவற்றை அடக்கிய அறிக்கை மீது இயக்குநர்/ நிர்வாக சபையினர் நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஆரம்ப விசாரணையை மேற்கொள்வதற்கு அது தொடர்பான சட்டம், ஏற்பாடுகள், பிணக்குச் சம்பந்தமான விடயத்தில் சிறப்புத் தேர்ச்சியும் அனுபவமும் உடைய ஒருவரை நியமிப்பது சிறந்தது. ஆரம்ப விசாரணை என்பது தேவைப்படும் தகவல்களை சேகரிக்கும் விசாரணையே தவிர பணியாளர் மீதான இறுதி நடவடிக்கை எடுக்கும் விசாரணை அல்ல. ஆரம்ப விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படலாம். ஒழுக்காற்று விசாரணை ஒன்று நடைபெறுவதைத் தடுத்துக் கொள்வது விவேகமானது.

ஆரம்ப விசாரணை அறிக்கை இயக்குநர் சபையால் ஆராயப்பட்டு குற்றம் இழைக்கப்பட்டுள்ளமையை நிருபிக்கக் கூடிய நிலை இருந்தால் இயக்குநர் சபை/ நிர்வாக சபை குற்றப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆரம்ப விசாரணையின் போது வெளிவந்தமை சாதாரண குற்றங்களாயினும் ஒழுக்காற்று விசாரணை ஒன்றை மேற்கொண்டு நடத்தாமல் தண்டனை வழங்கலாம். இவ்வாறான நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வது பொருத்தமற்றது என்றோ அல்லது பெரிய குற்றம் புரிந்துள்ளதாகவோ இயக்குநர்/ நிர்வாக சபை கருதுமிடத்து உரிய ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வது சிறந்தது.

ஒரு பணியாளர் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டு இரு வாரங்களுக்குள் அவர் மீதான குற்றப்பத்திரம் வழங்கப்படுதல் வேண்டும்.

குற்றப்பத்திரம் வழங்கும் போது அதனை உரிய பணியாளருக்கு நேரில் வழங்கி குற்றப்பத்திரத்தை இவர் பெற்றுக் கொண்டதை அத்தாட்சிப்படுத்தக் கூடிய வகையில் குற்றப்பத்திரப் பிரதியில் அவரது கையொப்பத்தைப் பெற்றுக் கொள்வது நல்லது.

போதிய காரணமின்றி வேலைக்குச் சமுகம் அளிக்காமை, போதிய காரணமின்றி வேலைக்குப் பிந்தி வருதல், வேலை அசமந்தமும் புறக்கணிப்பும், தனது வேலை சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட சட்ட ரீதியான கட்டளையை நிறைவேற்ற பணியாளர் வேண்டுமென்றே தவறுதல், வியாபார நடவடிக்கைகளுக்காக பணி கொள்வோரின் வளவுக்குள் வரும் பொதுமக்களிடம் பண்பின்றி நடத்தல், தனது பணி கொள்வோரின் வளவினுள் பொறுப்பாக உள்ளவரின் முன் கூட்டிய அனுமதி இன்றி தனது வேலைக்குச் சம்பந்தம் இல்லாத நோட்டீஸ்கள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் என்பவற்றை வழங்கலும், காட்சிப்படுத்தலும், பணி கொள்வோரின் வளவினை துப்புரவாகப் பேணுதல் தொடர்பாக கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீறுதல், பணி கொள்வோரினால் வளவினுள் புகைத்தல் தடை செய்யப்பட்ட இடத்தில் புகைப்பிடித்தல் போன்றன சிறு குற்றங்களாகும். (18 ஆம் பக்கம் பார்க்க)

வி.கே. அருந்தவநாதன்,
யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.






# கூட்டுறவுச்....

(17 ஆம் பக்க தொடர்ச்சி...)

பணி கொள்வோருக்குச் சொந்தமான அல்லது பொறுப்பில் உள்ள பண்டங்களை அல்லது பொருள் களை வேலையாளரின் நேரடியான புறக்கணிப்பு வேண்டுமென்றே செய்யும் தன்மை அல்லது மோசடி என்பன பொருந்தத்தக்க வகையில் சேதம் விளைவித்தல் அல்லது செய்தல், வேண்டுமென்றே கீழ்படிவில்லாது இருத்தல் அல்லது வேண்டுமென்றே ஒழுக்காற்றை மீறல், கூட்டுறவு வளவில் உள்ள பொருள்களைத் திருடல் அல்லது பணி கொள்வோரது வியாபாரத்துக்குத் தொடர்புடைய பொருள்கள் தொடர்பான நேர்மையீனம் அல்லது மோசடி, ஒழுக்கக் கேடு தொடர்பாக ஒரு குற்றவாளியாகக் காணப்படல், லஞ்சம் அல்லது சட்ட விரோதமான கையூட்டுக்களை ஏற்றலும், கொடுத்தலும், தாபனத்தில் வேலை நேரத்தில் கலக அல்லது ஒழுங்கற்ற முறையில் நடத்தல், கடமையின் போது தூங்குதல், வேலை நேரத்தில் மதுமயக்கத்தில் இருத்தல், பணி கொள்வோரின் வளவில் உள்ள பாதுகாப்புச் சாதனங்களுடன் தேவையற்றுத் தலையிடுதல், சங்கத்தின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட உண்மையான தகவல்களை கொடுக்கத் தவறுதல், பொய்க் கணக்குகள், மோசடிகளை மறைத்தல், குற்றவியல் நம்பிக்கைத் துரோகம் என்பன பெரிய குற்றங்களாகும்.

கடிந்துரை, கடுங்கண்டனம் அல்லது தகைவுரை ஒருவருடத்துக்கு மேற்படாத காலப் பகுதிக்குச் சம்பள ஏற்றங்களை நிறுத்தல், குறைத்தல் அல்லது பிற்போடல், உத்தியோகத்தரின் செலவில் ஓர் ஒழுக்காற்று இடமாற்றம், ஒழுக்காற்று விசாரணைக்குப் பின் விதிக்கப்படும் அற வீடு, ஒரு கிழமை சம்பளத்துக்கு மேற்படாத பணத் தண்டம் என்பன சிறிய குற்றங்களுக்கான தண்டனைகளாகும்.

பதவி நீக்கம் செய்தல், சேவை முடிவுறுத்தல், கட்டாய இளைப்பாறுதல், சேவை மூப்புக் குறைப்பு, வரிசைப் பதவிக் குறைப்பு.

ஒரு வருடத்துக்கு மேற்படாத காலத்துக்கு சம்பளத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஏற்றங்களை நிறுத்துதல், குறைத்தல் அல்லது பிற்போடல், குறித்த ஒரு காலப்பகுதிக்கு பதவி யேற்றப் பரீட்சைகளுக்குத் தோற்றும் தகுதி நீக்குதல், பதவியேற்றத்தைக் குறிக்கப்பட்ட காலத் துக்குப் பிற்போடல் என்பன பெரிய குற்றங்களுக்குரிய தண்டனைகளாகும்.

மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி

சுழிபுரத்தில் ஒரு புதிய உதயம்

## கந்தகோட்டம்

கல்வி நிலையம் - சுழிபுரம்

புதிய கல்வியாண்டு - 2012

ஆரம்பம்: 10.12.2011 சனிக்கிழமை காலை 9.30 மணி

★ தரம் 1 முதல் G.C.E. O/L வரை யாழ்.ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்
★ தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சி வகுப்புகள் திறமைமிக்க ஆசிரியர் குழுவின் வழி காட்டலில்
★ சிங்களம் ★ சங்கீதம் ★ English ★ Spoken English
★ ICT வகுப்புகள் சிரேஷ்ட பிரபல ஆசிரியர்கள்

மேலதிக விவரங்களுக்கு : 021 2250633, 0755511471
email: kandapakee@gmail.com
அனுமதி தினமும் பி.ப. 3-6 மணி
நிர்வாகம்

(11341)(1,6,9)

மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தின் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக கேள்விப் பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் தமது நிறுவனத்தின் பதிவுச்சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரிதியொன்றையும் மேல் நீதிமன்ற ஆணையாளர் மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 22.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக சீலிடப்பட்ட உறையில் வைத்துக் கையளித்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் நீதிமன்ற வளாகச் சுத்திகரிப்புப் பணிக்கான கேள்விப் பத்திரம் என தவறாது குறிப்பிடுதல் வேண்டும். ஏனைய நிபந்தனைகள் பின்வருமாறு

★ சுத்திகரிப்புப் பணிக்காக ஒரு மேற்பார்வையாளர் உட்பட மொத்தம் 10 பேர் சேவையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். இதில் 4 பேர் பெண்களாக இருத்தல் வேண்டும்.
★ 7.30 மணியிலிருந்து 3.30 மணிவரை பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படல்வேண்டும்
★ சுத்திகரிப்புக்குரிய உபகரணங்கள், ஏனைய மூலப்பொருள்கள் யாவும் தங்களால் விநியோகிக்கப்படல் வேண்டும்.
★ ஞாயிறு, பொது விடுமுறை தவிர்ந்த ஏனைய நாள்கள் கடமை நாள்களாக கருதப்படும்.

இது தொடர்பாக மேலதிக விவரங்கள் தேவைப்படின் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளருடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

க.பரமராஜா, தவிசாளர்.
மேல் நீதிமன்ற கேள்விச் சபை.
மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
(சி-6651)(1,6,9)

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிராசா நாகம்மா

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா நாகம்மா நேற்று (07.12.2011) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் மனைவியாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2011) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் தற்போதைய இல்லத்தில் (435, நாவலர் வீதி, ஆனைப்பந்தி) நடைபெற்று பூதவுடல் யாழ்.கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

435,நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தகவல்: குடும்பத்தினர் (மகன்)
(11344)(2,6,8)

# உரும்பிராய் மூன்று கோயில்களில் மூலப்பொருளாக உறைந்து அருள் செய்யும் கருணாகரப் பிள்ளையார்



உரும்பிராயில் ஒரே நேர் கோட்டில் கிழக்கு மேற்காக அமைந்திருக்கும் மூன்று கோயில்கள் வேறு எங்கும் கிடையா. இவற்றில் மூலப்பொருளாய் முழுமுதல் தெய்வமாக உறைந்திருந்து அருளாட்சி செய்யும் உரும்பிராய் கருணா கரப்பிள்ளையார் வரலாற்றுப் பெருமை மிக்கது, ஈழத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.

மூன்று கோயில்களில் மேற்குத் திசையில் ''பரத்தைப் புலம்'' இறையில் அமைந்துள்ள கருணாகரப் பிள்ளையாரின் அருள் வேண்டி இறைஞ்சாதோர் இல்லை. பல்வளச் செல்வங்களும் மலிந்து விளங்கும் உரும்பிராய் பகுதியில் கோயில் கொண்டுள்ள கருணாகரப் பிள்ளையார் ''கருணாகர ஐயர்'' என்பவரால்; ஆதியில் பூசிக்கப்பட்டு வந்தமையாலும், கருணாகரத் தொண்டானால் பூசிக்கப்பட்டமையாலும் ''கருணாகரப் பிள்ளையார்'' எனப் பெயர் பெற்றது என்பது கோயிலின் கர்ண பரம்பரைக் கதை.

இந்தப் பிள்ளையார் கோயில் உரும்பிராய்ப் பகுதியின் மேற்கு எல்லையிலும், இசை வல்லுநர்கள் நிறைந்து விளங்கும் இணுவில் பகுதியின் கிழக்குப் புற எல்லையிலும் மருத நிழல் சூழ்ந்து, ஓங்கி உயர்ந்த மரங்கள் நிறைந்த சோலையில் கோபுர தரிசனத் தோடு அழகுற அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தை அரசு செய்த தமிழ் அரசனான விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி வழிபட்ட பூர்வீக ஆலயங்களில் உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயம் ஒன்று என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

வரலாற்றுச் சிறப்பும், தொன்மை யும் கல்வெட்டு ஆதாரங்களும் கொண்டது. காலவரரையறை முறையில் சிறப்புப் பொருந்தியது என்பதற்கு ஆதாரமாக ஆலயத்தில் காணப்படும் 'கல்வெட்டு' கொள்ளப்படுகின்றது. ஆலயத்தில் காணப்படும் இந்தக் 'கல்வெட்டு' பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர்கள் குழுவால் ஆய்வுகள் செய்யப்பட்டது.

ஆலயம் அமைந்துள்ள சூழலில் காணப்பட்ட ஓர் அரசமரத்தின் கீழ் ஓர் பிள்ளையார்லிங்கம் இருந்ததாகவும் அது தோன்றிய காலம் எவருக்கும் தெரியாது என்றும், கிராமவாசிகளும் பாதசாரிகளும் வழிபட்டு அருள் பெற்று உய்த அதேவேளையில், அடியவர்கள் களிமண் கொண்டு சிறு கோயில் அமைத்து பூசித்து வந்தனர் என்றும் கூறப்படுகிறது. ஆலயத்தின் அருள்வியாபகத்தை அறிந்த கூழங்கைச் சக்கரவர்த்தியும் ஆலயத்தைத் தரிசித்து அருள் பெற்றதோடு பிள்ளையாருக்கு, செங்கல்லால் கோயில் கட்டுவித்து, தான் நித்தியம் வழிபடும் ஆலயங்களில் ஒன்றாக பேணி வந்தார் எனவும் கூறப்படுகின்றது.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் ஆலயக் கட்டடம் முற்றாக இடித்தழிக்கப்பட்ட நிலையில் சைவப் பெருமக்கள் ஆலயவிக்கிரகங்களை மறைத்து வைத்து மனதில் நிலை நிறுத்தி வழிபட்டதோடு ஆலய வழிபாட்டுக்கான சூழ்நிலை ஏற்பட்ட காலப்பகுதியில் தற்போதைய பூசகர்களின் வழித் தோன்றலும் முதற்சந்ததியினரு மான 'ஸ்ரீ கருணாகர ஐயர்' குழை மண் கொண்டு கோயில் அமைத்து வைதீக முறைப்படி பூசை செய்து வந்தார் என்றும் அவரின் வழிவந்த பரம்பரைக் குருமார்களே இன்று வரை ஆலய பூசைகள், கிரியைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

ஞானஆதவன்

''கோயில் சிறக்க குடி சிறக்கும்'' என்ற வாக்கிற்கு அமைய கருணாகரப் பிள்ளையாரின் அருள் வியாபகச் சிறப்பும் ஆலயம் சூழ் அமைவிடச் சிறப்பும் மேலோங்க அங்குள்ள குடிகளும் சிறந்து விளங்குகின்றனர்.

(தொடரும்)


## 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சிவகுரு நவரத்தினம்

(கனகா பத்திரிகை விற்பனையகம், திருநெல்வேலி)



பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளி விளக்கே
அறிவின் இருப்பிடமே
ஆண்டுகள் பதினேழு ஆகியும்
ஆறவில்லையே எம் மனம்

போகும் இடமெல்லாம் உங்கள் விம்பம்
கேட்கும் ஒலிகள் எல்லாம் உங்கள் குரல்
அப்பா என்று நாம் இனி யாரை அழைப்பது?
ஆறுதல் கிடைக்காமல் தவிக்கின்றோம்
காலங்கள் எத்தனை கடந்தாலும்
மறாது உங்கள் நினைவலைகள்

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

தோற்றம்:
27.11.1949

மறைவு:
17.11.1994

நிரந்தர முகவரி:
'கனக இல்லம்'
கைதடி கிழக்கு, கைதடி.

தற்போதைய முகவரி:
இல.60, பலாலி வீதி,
திருநெல்வேலி.

(11327)(1,6,9)

# போரை முடித்து வைத்த ஜனாதிபதி அரசியல் தீர்வையும் தரவேண்டும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,டிசெ.8

போரை முடித்து மக்களுக்கு ஆறுதல் தந்த ஜனாதிபதி நாட்டிலுள்ள அனைத்து இனங்களையும் திருப்திப்படுத்தக்கூடிய அரசியல் தீர்வை முன்வைக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வீ. எஸ்.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு சம்பந்தமான குழுநிலை விவாதத்தில் கலந்துகொணடு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டின் மிக முக்கிய பிரச்சினையாக இருந்த போர் முடிவடைந்திருக்கிறது. சமாதானத்தைத்தான் எல்லோரும் எதிர்பார்க்கின்றார்கள். சமாதானத்துக்கு மதிப்பு அதிகம். உலகின் பல்வேறு நாடுகளிலே ஆங்காங்கே பிரச்சினைகள் ஏற்பட்டுக்கொண்டிருப்பதை எங்களால் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இந்த நாட்டிலும் அவ்வாறு மீண்டும் பிரச்சினைகள் ஏற்பட முன்பே சமாதானத்தை ஏற்படுத்திவிட வேண்டும். ஜனாதிபதியால் அதைச் செய்ய முடியுமென்பதை நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

வடக்கு, கிழக்கிலே மற்றும் மலையகத்திலே பல்வேறு பிரச்சினைகள் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இருக்கின்றன. அவற்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் மட்டும்தான் தீர்க்க முடியும்.

நாட்டிலுள்ள அனைவரையும் திருப்திப்படுத்தக்கூடிய வகையிலே அவர்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகளை அவர் செய்யவேண்டும் - என்றார்.



தேசிய கலாபவனத்தில் தேசிய கலைக் கூடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த கண்காட்சியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைத்துள்ளார். (ச)

# விவசாயிகளுக்கு மீண்டும் ஓய்வூதியம்

கொழும்பு, டிசெ.8

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்கும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காகத் தபால் நிலையங்களிடம் நிதி வழங்கப்பட்டுள்ளது என்று விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபையின் தலைவர் சுமனா ஆரியதாஸ குறிப்பிட்டார்.

நிதி நெருக்கடி காரணமாக விவசாயிகளுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்கும் நடவடிக்கை தற்காலிகமாக சிறிது காலத்துக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

கடந்த வாரம் நாட்டிலுள்ள தபால் நிலையங்களுக்கு விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச)

# எரிபொருள் கப்பல்களுக்கு தாமத கட்டணமாக வருடாந்தம் பெரும் கோடிகள் செலுத்தும் நிலை

## விநியோகக் குழாய் சேதத்தால் இந்த அவலம்

கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவை வரை எரிபொருளை விநியோகிக்கும் குழாய் சேதமடைந்துள்ளமையால், இலங்கைக்கு வரும் எரிபொருள் கப்பல்களுக்கு அதிகளவு தாமதக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியுள்ளதாக பெற்றோலிய தொழிற்சங்கம் குற்றஞ்சாட்டுகின்றது.

கடந்த வருடம் மாத்திரம் 3,700 மில்லியன் ரூபா தாமதக் கட்டணமாகச் செலுத்தப்பட்டுள்ளது என்று தேசிய சேவைகள் சங்கத்தின், பெற்றோலியக் கூட்டுத்தாபன கிளைத் தலைவர் ஆனந்த பாலித்த குறிப்பிட்டார்.

இதனால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதிக நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவை வரை எரிபொருள் விநியோகிக்கும் குழாய் சேதமடைந்துள்ளமையால், எரிபொருளும் அதிகளவில் விரயமாகின்றது.

கப்பல்களில் கொண்டுவரப்படும் எரிபொருளை இறக்குவதற்கு சாதாரணமாக 4 நாள்கள் எடுக்கின்ற போதிலும், குழாய் சேதமடைந்துள்ள தால் 7 தொடக்கம் 8 நாள்களாக இது நீள்கிறது.

அத்துடன், நான்கு நாள்களுக்குப் பின்னரான மேலதிக நாள் ஒன்றிற்கு 30 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரை தாமதக் கட்டணங்களை செலுத்த வேண்டியுள்ளது என ஆனந்த பாலித்த தெரிவித்தார். போர்க் காலத்தில் பாதுகாப்பு காரணங்களுக்காக மாலை 6 மணிக்கு பின்னர் துறைமுகத்திற்கு வெளியே கப்பல்களை நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டமையினால் தாமதக் கட்டணங்கள் செலுத்தப்பட்டன. எனினும், தற்போது அவ்வாறான நிலைமை இல்லை.

ஆனால் குழாய் கட்டமைப்பின் சில பகுதிகளிலேயே கசிவுகள் ஏற்படுவதல் தாமதம் ஏற்படுகின்றது என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பதில் தலைவர் மெக்சிறி விஜேகுணவர்த தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்கள்

## செல்வி லைசா செல்வராணி துரைசிங்கம்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி லைசா செல்வராணி துரைசிங்கம் நேற்று முன்தினம் (06.12.2011) செவ்வாய்க் கிழமை கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்துவிட்டார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.12.2011) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் இல.5, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளியில் அமைந்துள்ள அவரது சகோதரனான A.T. மனோகரன் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டடி சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சபையார் ஏற்றுக்கொள்ளவும்.

இல.5, றக்கா ஒழுங்கை,
சுண்டிக்குளி.
(11283)(2,6,8)
தகவல்: A.T.மனோகரன்,
குடும்பத்தினர்.

## திருமதி ஞானப்பிரகாசம் நேசமலர் (நேசம்)



நீர்வேலி வடக்கு, பரலோகமாதா கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் நேச மலர் (நேசம்) கடந்த (03.12.2011) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எலியாஸ் - குளோறியா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான குருசுமுத்து, அருளானந்தம் (பொன்னுத்துரை), ஞானப்பு மற்றும் வரப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், மரியநாயகம், டெலாஸ், எலிசபெத், அருமைநாயகி, அன்ரனிதாஸ் (ஜேர்மனி), மரியடெறன்ஸ் (பிரான்ஸ்), விமலராக்கினி (ஜெயா - ஜேர்மனி), அயறின் ஆகியோரின் பாசமிகு தாயும், செல்வம், சிசிலியா, மரியகுமார், செல்வநாயகம் (அன்ரன்), ஞானமேரி (ஜேர்மனி), எமல்டா (பிரான்ஸ்), ஜஸ்ரின் ஜெலான் (ஜேர்மனி), ஜெரிக்கா ஆகியோரின் மாமியாரும் றஜீத் (சுவிஸ்), செலஸ்சினா, கொட்வின் ராஜ் (பிரான்ஸ்), கெலன்குமாரி, றொபின்ராஜ் (பிரான்ஸ்), சென்சியஸ், கொலஸ்ரிக்கா, கொன்சிக்கா, எனஸ்ரீன், பியூஸ்ரன், கலிஸ்ரன், அனோஜ், டொசாந் (ஜேர்மனி), சாம்சன் (ஜேர்மனி), அகல்யா (ஜேர்மனி), டிசாந் (பிரான்ஸ்), டினோ (பிரான்ஸ்), டிஸ்மன் (பிரான்ஸ்), ஜெனோஜ் (ஜேர்மனி),ஜெனற்,ஜென்சி (ஜேர்மனி), சிந்துஜன், மதுசன், மதுர்சிகா, ஜெலின்ரன், ஜெக்சன் ஆகியோரின் பாமிகு பேர்த்தியும், நிக்கொலஸ், ஆன்சி, சியான்சா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று (08.12.2011) வியாழக்கிழமை பி.ப ஒருமணியளவில் புனித பரலோகமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

*பரலோக மாதா கோயிலடி,*
*நீர்வேலி வடக்கு, நீர்வேலி.*
(11286)(2,6,9)
*தகவல்:*
*குடும்பத்தினர்.*

HND in Pharmacy (2 Years)
Job guaranteed Government Recognized Pharmacy Course. Study from the Leaders of Medical Education.
Knowledge Universe
Professional Education by Graduate Professionals
No 75,Temple Road,Jaffna.
www.kugroup.info
K.U Education -"Practical and Result Oriented." Tel:0776458253

# மரண அறிவித்தல்

## தம்பிராசா விஜயகாந்தன்

(ஓய்வு பெற்ற தே.ப.பொ.உ.விற்பனை கூட்டுறவுச் சங்கம்)



187, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா விஜயகாந்தன் நேற்று முன்தினம் (06.12.2011) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா-யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற புஸ்பராணியின் அன்புக் கணவரும், தே. கஜந்தினியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும்,இ.தேவகுமாரனின் (ஆசிரியர், கிளிநொச்சி மத்திய கல்லூரி) அன்பு மாமனும், அருள்நாயகி, ஜெயரட்ணம், ஜெயசீலன் (ஜேர்மனி), ஜெயந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஜீவகாருண்ணியம், (முன்னாள் உதவி முகாமையாளர், வ.பி.போ.ச. காரைநகர்) மற்றும் யோகலிங்கம் (ஜெயம்), நந்தினி(ஜேர்மனி), தே. நுவனிகா (யா/இந்து ஆரம்ப பாடசாலை), தே. துஷா ரகன், யோ.துவர்னிகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.12.2011) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: இ. தேவகுமாரன்
(ஆசிரியர், கிளிநொச்சி மத்திய கல்லூரி)
சி. யோகலிங்கம் (ஜெயம்)

187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (11337)(6-9-8)

German classes
ஜேர்மன் டொச், சுவிஸ் டொச் Classes அடுத்த பிரிவு தை மாதம் ஆரம்பம். எம்பசி பரீட்சைக்கான 3 மாத வகுப்பு ஜேர்மன் டொச் Classes ஆசிரியரால் கற்பித்து சகல ஏற்பாடும் செய்தும் தரப்படும். இப்பவே அட்மிசன் எடுக்கவும்.
0774847109
யாழ்ப்பாணம் Jaffna College,
464, Hospital Road.

மணமகன் தேவை
கனடா PR உள்ள சுவாதி 30.08.76 ஆம் ஆண்டு மணமகளுக்கு படித்த மணமகன் தேவை.
தொடர்பு: 0771249118

கணினி திருத்தம் (Computer Repair)
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகின்றோம்
தொடர்பு: 0779086737

வேலை ஆள்கள் தேவை
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவிலில் உள்ள செல்வா பிளாஸ்ரிக் கடைக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.
தொடர்பு: 0773982832

# ஒத்துமாறல்

கொழும்பு-12 இல் அமைந்துள்ள அரச திணைக்களம் ஒன்றில் முகாமைத்துவ உதவியாளர் தரம் III இல் பணி புரியும் ஒருவர் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற விரும்புகிறார். இதற்கு ஒத்துமாற விரும்புபவர்கள் 0779698942 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# தமிழர்கள் மீதான தாக்குதல்களை கண்டிக்காத மத்திய, மாநில அரசுகள்


சென்னை, டிச.8

தமிழகத்தில் இருந்து கேரளம் செல்பவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்காத மத்திய, மாநில அரசுகளுக்கு தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது;

தமிழகத்தில் இருந்து கேரளாவுக்குச் செல்லும் ஐயப்ப பக்தர்களை கேரள சமூக விரோதிகள் அடித்துத் துன்புறுத்துகிறார்கள் என்றும், அதனால் ஐயப்ப பக்தர்கள் பாதிப்புக்கும், தவிப்புக்கும் உள்ளாகி உள்ளனர். அத்துடன் பஸ் பயணிகளும் தாக்கப்படு கிறார்கள் என்றும் தெரியவந்துள்ளது. இது தமிழ்நாடு, கேரளாவுக்கும் இடையே நிலவி வரும் உறவுக்கு நல்லதல்ல.

மக்களுடைய உயிர்களுக்கும், உடமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டியது கேரள அரசின் கடமை. பாதிக்கப்பட்ட மக்கள் முறைப்பாடு



கொடுத்தாலும் கேரளாவைச் சேர்ந்த காவல் துறையினர் கண்டு கொள்ளாமல், அங்குள்ள சமூக விரோதிகளுக்கு அவர்கள் உடந்தையாகவும் உள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இந்திய ஒருமைப்பாட்டுக்கு வேட்டு வைப்பதாகும். இதைத் தட்டிக் கேட்க வேண்டிய இந்திய அரசோ மௌனம் காக்கிறது. பிரச்சினை இந்தளவுக்கு அதிகரிக்க மத்திய அரசு தான் காரணம். 2006 ஆம் ஆண்டே முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142

### விஜயகாந்த் கண்டனம்

அடியாக உயர்த்தலாம் என்று உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை இந்திய அரசு நிறைவேற்றி இருந்தால் இன்று இந்தக் கலவரம் ஏற்பட்டு இருக்காது.

இந்திய அரசும் காங்கிரஸ் கட்சியின் கையில் தான் உள்ளது. கேரளாவிலும் காங்கிரஸ் ஆட்சிதான் இடம்பெறுகின்றது. இருப்பினும் அப்பாவித் தமிழ் மக்கள் கேரளாவில் தாக்கப்படுவதை இந்திய, கேரள அரசுகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன். கேரளாவைச் சேர்ந்த சமூக விரோதிகள் மீதும், இந்தப்பிரச்சினைக்கு காரணமானவர்கள் மீதும் இந்திய அரசும், கேரள அரசும் உடனடியாக நடவடிக்கை எடுத்து தமிழக மக்கள் தாக்கப்படுவதை நிறுத்த வேண்டும் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.(வ)

# தமிழக - கேரள எல்லையில் தொடர்கிறது பதற்ற நிலை

### ஐயப்ப பக்தர்கள் பாதிப்பு



கம்பம், டிச.8

கேரளாவின் குமுளிப் பகுதியில் நேற்றுமுன்தினம் தமிழர்கள் மீது தாக்குதல் நடந்ததையடுத்து கம்பம் பகுதியில் உள்ள கேரள நிறுவனங்கள், நிதி நிறுவனங்களை தமிழக மக்கள் நேற்று தாக்கினர்.

முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக தமிழக-கேரள எல்லைப் பகுதிகளில் பதற்றம் நீடித்து வருகிறது.

கேரளா செல்லும் தமிழக வாகனங்கள் எல்லையிலேயே தடுத்து நிறுத்தப்பட்டன.

இதனால் சபரிமலைக்குச் செல்லும் பக்தர்கள் 2 ஆவது நாளாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கேரளாவுக்குச் செல்லும் பக்தர்கள் கூடலூர், கம்பம் வழியாகச் செல்லாமல் பழனி, பாலக் காடு வழியாகச் செல்லுமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டனர்.

கேரளாவுக்கு பால், காய்கறி மற்றும் சந்தைப் பொருள்களை ஏற்றிச் சென்ற லொறிகளைச் செல்லவிடாமல் ஆங்காங்கே தடுத்து நிறுத்தினர்.

இதனால் கூடலூர், கம்பம் ஆகிய பகுதிகளில் வீதிகளின் இருபக்கங்களிலும் வாகனங்கள் நீண்ட வரிசையில் அணிவகுத்து நிற்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# நாடாளுமன்ற வளாகத்தில் திருமாவளவன் உண்ணாவிரதம்

### ஐயப்ப பக்தர்களின் தாக்குதல் குறித்து பேச அனுமதி மறுப்பு

டில்லி, டிச.8

கேரளாவில் தமிழக ஐயப்ப பக்தர்கள் மீது நடந்த தாக்குதல் குறித்துப் பேச அனுமதி மறுக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து லோக்சபாவிலிருந்து வெளிநடப்புச் செய்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

லோக்சபாவில் நேற்று தமிழக ஐயப்ப பக்தர்கள் கேரளாவில் தாக்கப்பட்டது குறித்துப் பேச அனுமதி தருமாறு திருமாவளவன் கோரிக்கை விடுத்தார். ஆனால் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதையடுத்து அவர் வெளிநடப்புச் செய்து வெளியேறினார். பின்னர் நாடாளுமன்ற வளாகத்தில் அவர் உண்ணாவிரதப் போராட்டத் தில் குதித்தார்.

அப்போது அவர் கூறுகையில்: பிரதமர் மன்மோகன் சிங் உடனடியாக முல்லைப் பெரியாறு விவகாரத்தில் தலையிட்டு அமைதி திரும்பச் செய்ய வேண்டும். தமிழக ஐயப்ப பக்தர்கள், பெண் தொழிலாளர்கள் கேரளாவில் தாக்கப்பட்டு, மானபங்கம் செய்யப்பட்டுள்ளது கண்டனத்துக் குரியது - என்றார். (வ)

# தொடர்ந்து தமிழர் தாக்கப்பட்டால் தி.மு.க.முக்கிய முடிவு எடுக்கும்

### கருணாநிதி தெரிவிப்பு



சென்னை,டிச.8

கேரளாவில் தொடர்ந்து தமிழர்கள் தாக்கப்படுவதை கேரள அரசும் தடுக்கவில்லை, மத்திய அரசும் தடுக்கவில்லை. இந்த நிலை நீடித்தால் தி.மு.க. தனது செயற்குழுவைக் கூட்டிமுக்கிய முடிவை எடுக்கும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

கேரள எல்லையில் தொடர்ந்து தமிழர்களுக்கு விரோதமான செயல்கள் இடம்பெறுகின்றதே என்று செய்தியாளர்கள் கேட்டபோது அதற்கு அவர் பதிலளிக்கையில்: தொடர்ந்து தமிழ் நாட்டு மக்களுக்கு விரோதமாக வன்முறைச் செயல்கள் அங்கே நடைபெறுவதாகத் தகவல்கள் வெளிவருகின்றன. அவற்றைத் தடுத்து நிறுத்த கேரள அரசும் முன்வரவில்லை.

தடுத்து நிறுத்த கடமைப்பட்டுள்ள மத்திய அரசும் இதுவரை முன்வரவில்லை.

எனவே இந்த நிலைமை அங்கே தொடருமேயானால், அதுபற்றி தி.மு.க. செயற்குழு கூடி உரிய முடிவெடுக்கும் - என்றார். (வ)

# லோக்பால் பிரேரணை நாடாளுமன்றில் நாளை தாக்கல்

லோக்பால் பிரேரணை நாடாளுமன்றத்தில் நாளை வெள்ளிக் கிழமை தாக்கல் செய்யப்பட உள்ளது.

இது குறித்து பேசிய காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் மானு சிங்வி கூறுகையில்: லோக் பால் பிரேரணையைத் தாக்கல் செய்வதில் எந்தத் தாமதமும் இல்லை. லோக்பால் அறிக்கை எந்த தனிநபரையோ அல்லது அமைப்பையோ திருப்திப்படுத்துவதற்காக தயாரிக்கப்படவில்லை. - என்றார் அவர்.

# இந்திய ரூபாயின் மதிப்பில் 4 பைசா குறைந்தது

இறக்குமதியாளர்களிடையே அமெரிக்க டொலரின் தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதால் இந்திய ரூபாயின் மதிப்பில் 4 பைசா குறைந்துள்ளது.

நேற்றைய வர்த்தக நேர ஆரம்பத்தின் போது அமெரிக்க டொலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.51.45 ஆக காணப்பட்டது.

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

(உரிமையாளர் - K.V.K அரிசி ஆலை- உடுப்பிட்டி, K.V.K கல்லுடைக்கும் ஆலை- வல்லை, K.V.K ரான்ஸ்போட், J.R.M. அரிசி ஆலை- வவுனியா)



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை 04.12.2011 (ஞாயிற்றுக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் சிவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சாம்பசிவம்-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் நர்மதா (சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்), கிருபனா (ஆசிரியை - வ/ஸ்ரீநாகராஜா வித், சிதம்பரபுரம்), கிரு ஷாந்தன் (K.V.K வியாபார ஸ்தாபனம்), கலைச்செல்வி (கணிய அளவை யியலாளர்-சங்கென் கொன்ஸ்ரக் ஷன், யாழ்ப்பாணம்), மீரா (வணிக பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜனுஷனின் அன்புப் பேரனும் சரோஜினியம்மா (இளைப்பாறிய ஆசிரியர் - யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), பவானியம்மா, காலஞ் சென்ற சிவராஜசிங்கம் (முல்லை), லிலானி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவரஞ்சனின் (கணக்காளர் - மீள்குடியேற்ற அமைச்சு - கொழும்பு) அன்பு மாமனும் நடராசா, ஜெகராசரட்ணம் (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளி இந்து மயானத்துக்கு (வல்லை) எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.V.K, அரிசி ஆலை,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

(11343)(1,6,9)

Baby Cheramy

# அன்பும் பரிசும்













## அன்புடன் பொழியும் பரிசுகள் உங்களுக்காகவே !

**எப்பொழுதுமே தூய அன்பை மட்டும் வாரி வழங்கும்**
**பேபி ஷெரமியிடமிருந்து உங்கள் வாழ்வை மெருகூட்டும் பரிசு மழை**

ஒவ்வொரு மாதமும் குலுக்கலில் கீழ்வரும் பரிசுகளைப் பெற்று கொள்ளுங்கள்

1வது பரிசு - சுசுகி அல்டோ கார் 2வது பரிசு - ஸ்கூட்டி பெப் 2

3வது பரிசு - தங்க மாலைகள் 20 4வது பரிசு - கையடக்கத் தொலைபேசிகள் 20

WP / GT/ 3408

### போட்டி விதிமுறைகள்

1. குலுக்கலில் வெல்லப்படும் பரிசுகளுக்கு பதிலாக எந்தவொரு பணப்பரிசும் கிடைக்கப்பெறமாட்டாது.
2. பரிசினது வடிவம், நிறம் என்பன கையிருப்புக்கு ஏற்ப வேறுபடலாம்.
3. பரிசுகள் வழங்கப்பட்ட பின், பரிசுகளின் உத்தரவாதத்தை ஹெமாஸ் நிறுவனம் பொறுப்பேற்காது

இப்போட்டியில் ஹேமாஸ் நிறுவனம், சர்வா இன்டிகிரேட், பீனிக்ஸ் O&M ஊழியர்களும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களும் பங்கு பெற முடியாது. இவர்களை தவிர்த்து ஏனைய இலங்கை பிரஜைகள் பங்கு பெறலாம்.

### குலுக்கல் நடைபெறும் திகதிகள்

முதலாவது குலுக்கல் 2011 டிசம்பர் 15
இரண்டாம் குலுக்கல் 2012 ஜனவரி 15
மூன்றாவது குலுக்கல் 2012 பெப்ரவரி 15

### போட்டியில் கலந்துகொள்ளும் முறை

பேபி ஷெரமி சவர்க்கார உறைகள் 2 ம் கிறீம் லேபில் 1ம் உங்கள் பெயரையும், முகவரியையும் எழுதி கீழ்காணும் முகவரிக்கு அனுப்புங்கள்.

**"பேபி ஷெரமி, அன்பும் பரிசும்"**
**த.பெ. இல. 2285, கொழும்பு**




Baby Cheramy
தூய அன்பு

# மக்கள் சபை தேர்தல் புருடாவா? மகிந்த சிந்தனையும் பொய்யானதா?

## தயாசிறி ஜயசேகர சபையில் கேள்வி

மக்கள் சபை- (ஜனதா சபா) என்று கூறப்பட்டது தேர்தல் புருடாவா? நாடெங்கிலும் மக்கள் சபைகளை உருவாக்கி 14,500 பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும் என்று ஜனாதிபதி கூறியதும் மெய்யானதா? ஜனாதிபதியினால் கூறப்பட்ட மக்கள் சபை தொடர்பாக கேள்வி கேட்பது ஏற்புடைதாகாது என்றால் மஹிந்த சிந்தனையும் ஏற்புடையாதகாதா?

இப்படி அடுக்கடுக்காக இடைக்கேள்விகளைக் கேட்டு ஆளும்தரப்பினரை திக்குமுக்காட வைத்தார் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகர.

நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ரவி கருணாநாயக்க பொருளாதார அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

மக்கள்சபை- (ஜனதாசபை) உருவாக்கப்பட்டுள்ளதா? உருவாக்கப்பட்டுள்ள மக்கள் சபையின் எண்ணிக்கை எத்தனை? மக்கள் சபைகளை நிர்வகிக்கும் அதிகார அமைப்புக்கள் யாவை? மக்கள் சபைகளில் உள்ளடங்கும் பிரதிநிதிகள் யார்? மக்கள் சபை உருவாக்கப்படுதலின் மூலம் செயல் இழக்கும் - மூடப்படும் அமைப்புகள் யாவை?

என்று கேள்வி எழுப்பினார் ரவி கருணாநாயக்க இக் கேள்விக்கு அமைச்சரின் சார்பில் பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன பதிலளித்தார்.

இத்தனை கேள்விகளுக்கும் ஒரே பதிலைக் கூறிவிட்டார் பிரதி அமைச்சர்.

''உறுப்பினர் கேட்டது போல் மக்கள் சபை என்று ஒன்றும் அமைக்கப்படவில்லை. அதனால் அவர் எழுப்பிய ஏனைய கேள்விகளும் ஏற்புடையதாகது'' என்றார் லக்ஷ்மன் யாப்பா.

இந்த வேளையில்தான் பிரதி அமைச்சரை இடைக்கேள்வி ஒன்றின் மூலம் மடக்கினார் தயாசிறி ஜயசேகர.

''சபாநாயகரே! இந்த அமைச்சர் கூறுகின்றார் மக்கள் சபை என்று ஒன்று இல்லை என்று. ஆனால் ஜனாதிபதி என்ன கூறினார்...?

உள்ளூராட்சிச் சபைகளை ஒன்றிணைக்க மக்கள் சபைகள் அமைக்கப்படும்; அப்பிரதேச அபிவிருத்தி இந்தச் சபைகளிடமே ஒப்படைக்கப்படும்;இந்த சபைகளுக்கு 14,500 பட்டதாரிகள் செயலாளராக நியமிக்கப்படுவர் என்றும் கூறினார். தேர்தல் காலத்தில் நாட்டுமக்களையும், தொழில் வாய்ப்புக்களை எதிர்பார்த்திருக்கும் பட்டதாரிகளையும் ஏற்றுவதற்காகப் போடப்பட்ட தேர்தல் குண்டா இது? என்று கேட்டார்.

பிரதி அமைச்சர் பதிலளிக்கும் முன் ரவி கருணாநாயக்க மற்றும் ஒரு இடைக் கேள்வியைத் தொடுத்தார். ''ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனையில்'' அரச ஊழியர்களின் சம்பளம் பத்தாயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று வரை அது பூர்த்தி செய்யப்படவில்லையே'' என்றார்.

இதற்குப்பதிலளித்த பிரதி அமைச்சர், ''ஐயா! மஹிந்த சிந்தனை ஐந்து வருட அபிவிருத்தித் திட்டம். அதில் கூறப்பட்டதை எல்லாம் எடுத்த எடுப்பில் செய்துவிட முடியாது. ஐந்து வருட காலத்துக்குள் செய்து முடிப்போம். இப்போது படிப்படியாக சம்பள உயர்வுகளை வழங்கி வருகிறோம்'' என்று சமாளித்து விட்டார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை பிரதிச் சபா நாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது.

வாய்மூல விடைக்கான கேள்விகள் 7 கேட்கப்பட்டன. ஆனால் ஆறு கேள்விகளுக்கு விடையளிக்க காலஅவகாசம் கேட்கப்பட்டது. ஒரேஒரு கேள்விக்கு மட்டுமே பதில் அளிக்கப்பட்டது. வழமையான வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கு ஒரு மணிநேரம் ஒதுக்கப்படும். வரவு- செலவுத் திட்ட விவாதங்களின்போது கேள்வி நேரம் 30 நிமிடங்களாக குறைக்கப்படும். இது இப்படியிருக்க நேற்றுக் கேள்வி நேரம் பத்து நிமிடங்களில் முடிந்து விட்டது. இன்று சபை நடவடிக்கைகள் 9.40 மணிக்கே ஆரம்பித்து விட்டன.

### விவாதத்தை ஆரம்பிக்க ஆள் இல்லை

வழமையாகப் பத்து மணிக்கே விவாதம் ஆரம்பிக்கப்படும். என்ற நினைப்பில், பேச வந்த உறுப்பினர்கள் சபைக்குத் தாமதமாகவே வந்து சேர்ந்தனர்.

விவாதத்தை ஆரம்பிக்க ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினரான ஹரிசனின் பெயர் கூறி அழைக்கப்பட்டது. ஆனால் அவர் சபையில் இல்லை. இரண்டாவதாக ஆளும் தரப்பைச் சேர்ந்த குழுக்களின் பிரதித் தலைவர் சந்திரகுமார் அழைக்கப்பட்டார். அவரைக் கூடச் சபையில் காணோம். அதனால் பிரதி அமைச்சர் எச்.ஆர். மித்திரபால பேச்சை ஆரம்பிக்க வேண்டியதாயிற்று.

### எதிர்க்கட்சிகளின் விவாதம்

பிரதி அமைச்சர் பேச்சை ஆரம்பிக்கும்போதே ஒரு பீடிகையுடன் தான் ஆரம்பித்தார். ''சபா நாயகரே'' குழுநிலை விவாதம் எதிர்க்கட்சிகளின் விவாதம். எதிர்க்கட்சி உறுப்பினர்கள்தான் சபை அமைச்சர்கள் தொடர்பான குறை நிறைகளை விமர்சிக்கவேண்டும். ஆனால் இன்று எமது திட்டங்கள் தொடர்பாகக் குறை கூறவோ, விமர்சிக்கவோ ஒன்றும் இல்லை. அதனால்தான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒருவரும் வரவில்லை'' என்று கூறியே தனது பேச்சை ஆரம்பித்தார்.

### வாபஸ் பெறப்பட்டது சர்ச்சைக்குரிய சட்டமூலம்

நேற்று நாடாளுமன்றத்தில் முக்கியமான ஒரு விடயமும் இடம்பெற்றது. அதாவது நாடு, நகர திட்டமிடல் திருத்தச் சட்டமூலம் வாபஸ் பெறப்பட்டது.

இந்த சட்டமூலம் ஏற்கனவே சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கொழும்பு மாநகர சபை உட்பட கொழும்பு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளை உள்ளடக்கிய(மெட்ரோ பொலிட்டன் கோர்ப்பரேசன்) பெருநகர் கூட்டுத்தாபனம் ஒன்றை உருவாக்குவதே இந்தச் சட்டவரைவின் நோக்கம்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி உட்பட அரசியல் கட்சிகள் யாவும் இதற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தன. அத்தகைய எதிர்ப்புகளுக்கும் மத்தியில் அரசு இந்தச் சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்தது. எனினும் இந்தச் சட்டவரைவு தொடர்பாக உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்புப் பாதகமாக அமைத்துவிட்டதால் சட்டவரைவு வாபஸ் பெறப்பட்டது. முதலாவது வாசிப்பில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தை அரசு வாபஸ் பெறுவதற்கான அனுமதியையும் அங்கீகாரத்தையும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சபையில் கூறினார்.




சபையின் அங்கீகாரத்தின் பின் இந்தச் சர்ச்சைக்குரிய சட்ட வரைவு நேற்று வாபஸ் பெறப்பட்டது.

இதன் பின்னர் கமத் தொழில், பெருந்தோட்டக் கைத்தொழில், தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி, சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு, கால்நடை வளர்ப்பு கிராமிய சனசமூக அபிவிருத்தி ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கான குழுநிலை விவாதம் ஏக காலத்தில் இடம் பெற்றது.

### இறைச்சிக்காக மாடுகள் கடத்தல்

குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் கால்நடைகள் தொடர்பாக ஒரு விடயத்தை முன்வைத்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கால்நடைகள் மேய்ச்சல் நிலங்களை நம்பியே உள்ளன. அண்மைக் காலங்களில் இந்த கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலம் இல்லை. கிளிநொச்சி மாவட்டம் பால் உற்பத்தியில் முன்னிலை வகித்த பிரதேசம். அங்கிருந்த பால் சேகரிப்பு பதனிடும் நிலையம் போரால் சிதைக்கப்பட்டுள்ளது. இதனை மீண்டும் சீரமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அதேவேளை, இந்தப் பிரதேசத்தில் தினசரி நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகள் இறைச்சிக்காகச் சட்டவிரோதமாகக் கடத்தப்படுகின்றன. இதனைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

### தொழிலாளர்களின் நிதியை ஏப்பம் விடும் நிறுவனங்கள்

எதிர்க்கட்சி உறுப்பினரான கயந்த கருணா திலக்க மனிதாபிமான விடயம் ஒன்றைச் சபையில் குறிப்பிட்டார்.

''பெருந்தோட்டக் கம்பனிகள் பல தோட்டத் தொழிலாளர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாபநிதி, நம்பிக்கை நிதியம் என்பவற்றைச் செலுத்துவதில்லை. இந்த வகையில் பலகோடி ரூபாக்களை மத்தியவங்கிக்கு அனுப்பாமல் இந்த நிறுவனங்கள் ஏப்பம் விட்டுள்ளன.

''அண்மையில் ஓய்வுபெற்ற தொழிலாளி ஒருவர் தனது நிதியத்தை மீளப்பெறச் சென்ற போதே இந்த உண்மை தெரிய வந்துள்ளது. இதனைக் கேட்ட அந்தத் தொழிலாளி அதிர்ச்சியினால் உயிர் இழந்துள்ளார்'' என்றும் சுட்டிக் காட்டினார்.

இப்படியான தோட்டக் கம்பனிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

### மஹிந்த சமர சிங்கவை அரசு துஷ்பிரயோகம் செய்கிறது

''பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க திறமையான ஒரு அமைச்சர். அவர் முன்பு எங்களுடன் இருக்கும்போது வெளிநாடுகளுக்குச் சென்றால் ஏதாவது ஒரு நன்மையைக் கொண்டு வருவார். இப்பொழுது அவர் நாட்டில் இருப்பதே இல்லை. அதனால் தனது அமைச்சைப் பற்றிக் கவனிக்க முடியவில்லை. அரசு அமைச்சர் சமர சிங்காவின் திறமைகளைத் துஷ்பிரயோகம் செய்கின்றது.

''அவர் தேசம் தேசமாகச் சென்று நாங்கள் அதை செய்யவில்லை. இதைச் செய்யவில்லை. எதுவுமே செய்யவில்லை என்று நாட்டிற்காகப் பரப்புரை செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். பாவம் அமைச்சர் மஹிந்த சமரசிங்க'' என்றார் கயந்த கருணாதிலக்க.

### தங்கத்தையும் - எண்ணெயையும் உற்பத்தி செய்யவா கேட்கின்றோம்

ஜே.வி.பி. உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க சிரிக்கவும் - சிந்திக்கவும் கூடிய ஒரு விடயத்தை சபையில் குறிப்பிட்டார். ''சபாநாயகரே! நாம் என்ன இவர்களிடம் தங்கத்தை உற்பத்தி செய்யுங்கள் எண்ணெய்யை கிண்டி எடுங்கள் என்றா கேட்கிறோம். அவை இங்கு கிடைக்காது. ஆனால் நம்மிடம் உள்ள மூல வளங்களைப் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும்படி தானே கேட்கின்றோம். தெற்கில் பண்ணைக் காணிகளை அங்கு வசிக்கும் விவசாயிகளுக்குப் பகிர்ந்து அளிக்க கூடாது எனக் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார். ஆனால், அதே பண்ணைக் காணி அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு விற்கப்பட்டுள்ளது. இது தான் இவர்களின் தேசிய உற்பத்தித்திட்டம் என்று சாடினார் அனுர குமார திஸாநாயக்க.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் இதனை ஆட்சேபித்தார். சும்மா இருப்பாரா அனுரகுமார ''நாங்கள் கழுதைகளை வளர்க்கும்படி கூறவில்லை. கால்நடைகளை வளர்க்கத்தான் கூறுகிறோம்'' என்று பதிலடி கொடுத்தார்.

### சத்து இல்லாத பாண் நமக்கு வேண்டாம்

''நமது நாடு விவசாய நாடு. நமக்குத் தேவையான உணவுப் பொருள்களை இங்கேயே உற்பத்தி செய்யமுடியும். ஆனால் அமெரிக்காவில் இருந்து கோதுமை மாவை இறக்குமதி செய்கின்றோம். நாம் பாண் சாப்பிடப் பழகிவிட்டோம். ஆனால் அதில் எந்தவிதமான சத்தும் இல்லை. இந்தப் பாண் நமக்கு அவசியம் இல்லை. அண்டை நாடான இந்தியாவைப் பாருங்கள். அங்கே தோசை, இட்லி, இடியப்பம் என அரிசி உணவுகளையே உண்ணுகின்றனர். அவர்கள் திடகாத்திரமாக இருக்கின்றனர். நாமும் அரிசிப் பாவனையை அதிகரிக்க வேண்டும். கோதுமை இறக்கு மதியைத் தடை செய்ய வேண்டும்'' என்றார் பிரதமர் டி.எம்.ஜயரட்ண.

### தோட்டத் தொழிலாளர்களுக்கும் இரண்டு ஏக்கர் காணி

விவாதத்தில் உரையாற்றி பிரதமர் டி.எம்.ஜயரட்ண மலையகத்தைச் சேர்ந்தவர். தமிழ்த் தொழிலாளர்களின் ஆதரவுடன் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர். இந்த நன்றி உணர்வுடன் சில விடயங்களை முன் வைத்தார். தரிசாகக் கிடக்கும் தோட்டக்காணிகள் அந்தத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கே தலா இரண்டு ஏக்கர் வீதம் வழங்கப்படவேண்டும் என்றார்.

''மீள் நடுகைக்கான மானியம் வழங்கப்படவேண்டும். அவர்கள் கடும் உழைப்பாளர்கள். தேயிலைப் பயிர்ச் செய்கையில் நன்கு அனுபவம் உடையவர்கள் எனவே அவர்களுக்கு இந்தக் காணிகள் வழங்கப்பட்டால் அவர்களுக்கும் நன்மை நாட்டுக்கும் நன்மை'' என்று கூறினார் பிரதமர்.

### பால் உற்பத்தியை மூன்று மடங்காக அதிகரிப்போம்

கால்நடை அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் விவாதத்தில் பதில் அளிக்கும் போது, 2015 ஆம் ஆண்டில் பால் உற்பத்தியை மூன்று மடங்காக அதிகரிக்க முடியும்; அதற்கான திட்டங்கள் வகுத்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்றார்.

''பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி சிறந்த ரக பசுக் கன்றுகளையும் சேவல் இன்றி முட்டையிடும் உயர் ரகக் கோழிக் குஞ்சுகளையும் வழங்கவுள்ளோம்'' என்றும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார். ✱

# கிராமங்களில் பட்மின்டனை வளர்க்க விளையாட்டுத்துறை அமைச்சு பணிப்பு

பட்மின்டன் போட்டிகளை கிராம மட்டங்களுக்கு விஸ்தரிப்பதற்காக, மாகாண சங்கங்களுக்குள் வரையறுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மாவட்ட மட்டங்களுக்கு விரிவுபடுத்துமாறு பட்மின்டன் சங்கங்களுக்கு விளையாட்டுத்துறை அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

பட்மின்டன் போட்டிகளை கிராம மட்டங்கள் வரை விரிவுபடுத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் தொடர்பாக, விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையில், விளையாட்டுத்துறை அமைச்சில் நடைபெற்ற பட்மின்டன் சங்க முக்கியஸ்தர்களுடனான சந்திப்பின்போதே விளையாட்டுத்துறை அமைச்சர் மேற்படி பணிப்பை விடுத்தார்.

சர்வதேச ரீதியில் இலங்கைக்குப் பல பதக்கங்களை பெட்மின்டன் போட்டிகள் பெற்றுக்கொடுத்துள்ளன. எனினும், தேசிய ரீதியில் 25 மாவட்டங்களில் மொத்தம் 10 மாவட்டங்களிலேயே இப்போட்டிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. ஏனைய 15 மாவட்டங்களில் இப்போட்டிகள் இல்லாமையால், கிராம மட்டப் பாடசாலைகள் முதல் இப் போட்டிகளை விஸ்தரிக்கத் தேவையான வேலைத்திட்டங்களை உருவாக்குமாறும் அமைச்சர் கூறினார்.

இதன் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 100 பிரதேசங்களுக்கு பட்மின்டன் விளையாட்டு உபகரணங்கள் அடுத்த ஆண்டு முதல் வழங்கப்படவுள்ளன. இதற்கு அனுசரணையாளர்களாக அரச, தனியார் வங்கிகள் உள்ளிட்ட நிறுவனங்களுடன் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் கூறினார்.

இந்தச் சந்திப்பில் பட்மின்டன் சங்கத்தின் தலைவரான பராக்கிரம பஸ்நாயக்க உட்பட மாகாண பட்மின்டன் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

# சுமக்கத் தவறிய ஆரம்ப வீரர்கள் -புலம்புகிறார்சேவாக்



''மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 3ஆவது ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்திய அணியின் தோல்விக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் களின் மோசமான ஆட்டமே காரணம். அவர்கள் தமக்குள்ள சுமையை சுமக்கத் தவறிவிட்டனர்.'' என்று இந்திய அணித் தலைவர் சேவாக் கூறியுள்ளார்.

அஹமதாபாத்தில் கடந்த திங்களன்று நடந்த மேற்கிந்தியத் தீவுக ளுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்திய அணி, 16 ஓட்டங்களால் தோற்றது.

இந்தத் தோல்வி குறித்துக் கருத்துக் கூறும் போதே இந்திய அணியின் தற்காலிகத் தலைவரான சேவாக் மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:

261 ஓட்டங்கள் என்பது துரத்தக்கூடிய இலக்குத்தான். ஆனால் நான், கம்பீர் உட்பட முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் தொடக்கத்தில் அடுத்தடுத்து ஆட்டமிழந்து விட்டோம். இதனால் நல்ல கூட்டணி அமைக்கமுடியவில்லை. தொடக்கத்திலேயே இலக்குகளை வேகமாக இழக் கும் போது, அதன்பிறகு இலக் கைத் துரத்துவது கடினம்.

கடந்த 3 ஆட்டங்களை எடுத்துக்கொண்டால் முன்வரிசை வீரர்களைவிட பின்வரிசை வீரர்களே அதிகமான பங்களிப்பை வழங்கியிருக்கிறார்கள். இதனைச் சரிசெய்ய வேண்டியது முக்கியமானது. ஆரம்ப வரிசை வீரர்களில் யாராவது ஒருவர் 30 முதல் 40 பந்துப் பரிமாற்றங்கள் வரை களத்தில் நிற்க வேண்டியது அவசியமாகும். - என்றார்.

# ஹோக்லிக்கு ஐ.சி.சி. எச்சரிக்கை!



அஹமதாபாத் ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்திய வீரரான விராத் ஹோக்லி (20 ஓட்டங்கள்), ஆட்டத்தின் 9 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் சுழற்பந்து வீச்சாளரான சுனில் நரேனின் பந்து வீச்சில் எல்.பி. டபிள்யூ ஆனார்.

நடுவர் சுதிர் அஸ்னானி ஆட்டமிழப்புத் தீர்ப்பு வழங்கியதும் சரியான எல்.பி. டபிள்யூ அல்ல என்பதுபோல் அதிருப்தியை வெளிப்படுத்திய விராத் ஹோக்லி முணுமுணுத் துக் கொண்டே கோபத்துடன் 'பவிலியன்' திரும்பினார்.

ஐ.சி.சியின் விதிப்படி நடுவர் ஆட்டமிழப்பு வழங்கியதும் எந்த வித ஆட்சேபனையுமின்றி களத்தை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும். இதனை ஹோக்லி மீறியமையால், ஆட்ட நடுவர் அவருக்கு எச்சரிக்கை விடுத்தார்.

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.8

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவைமுன்னிட்டு அமரர்கள் சாந்தன், யூட்சன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 11 பேர் பங்குபற்றும் மின்னொளியிலான மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வைரபுளியங்குளம் யங்ஸ்ரார் மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம- 23)

# பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.8

வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளருடனான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வவுனியா பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் 2012 ஆம் ஆண்டு விளையாட்டுத் துறை அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்கள் தலைவர், செயலாளர்களை சமூகம் தருமாறு வவுனியா பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (ம-23)

# இரண்டு ஆண்டுகளின் பின் மீண்டும் கிடைத்த வய்ப்பை தக்க முறையில் பயன்படுத்துவேன்



''இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய அணியில் விளையாட கிடைத்த வாய்ப்பை, நன்கு பயன்படுத்திக்கொள்வேன்'' என்று இர்பான் பதான் தெரிவித்துள்ளார்.

மோசமான ஆட்டத்திறன் காரணமாக இந்திய அணியிலிருந்து நீக்கப்பட்டவர் இர்பான் பதான். இரண்டு ஆண்டுகளாகக் கடின முயற்சி செய்து வந்த இவர், தற்போதைய ரஞ்சிக் கிண்ணத் தொடரில் அசத்தியமையால், மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான மீதமுள்ள இரண்டு ஆட்டங்களில் விளையாட இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து இர்பான் பதான் கூறியவை வருமாறு:-

''இந்திய அணிக்கு திரும்பியமைக்கு எம்.ஆர்.எப்., பயிற்சியாளர் டி.ஏ.சேகருக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். அவரது பயிற்சியில் பலனடைந்தவர்களில் நானும் ஒருவன்.

பந்துகளை 'ஸ்விங்' செய்வது, மணிக்கட்டுகளைச் சரியான முறையில் சுழற்றுவது போன்றவற்றில் நுணுக்கங்களைக் கற்றுத்தந்தார். இதற்கான உடனடி பலன் தற்போது கிடைத்துள்ளது. நான் காயத்தால் அவதிப்பட்டபோது இந்திய கிரிக்கெட் சபைதான் (பி.சி.சி.ஐ.) வெளிநாட்டில் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தது.

எனது சகோதரர் யூசுப் பதான், சகோதரி இருவரும் ஊக்கப்படுத்தினர். எப்படியும் இந்தியாவுக்காக மீண்டும் விளையாடுவேன் என்ற உறுதியில் இருந்து மாறவில்லை. இதற்கான தன்னம்பிக்கையை எந்நிலையிலும் இழக்க வில்லை.

தேசத்துக்காக விளை யாடும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அதிஷ்டவசமாக எனக்கு இது மீண்டும் கிடைத்துள்ளது. இந்த மகிழ்ச்சியை விவரிப்பது கடினம்தான். இருப்பினும், இது மனதுக்கு ஆறுதலாக உள்ளது. கடவுளின் ஆசீர்வாதம் இருந்தால், நீண்ட ஆண்டுகள் அணிக்காக விளையாடுவேன்.- இவ்வாறு இர்பான் பதான் கூறினார்.

# கராத்தே நடுவர்களுக்கு பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம், டிசெ.8

இலங்கை கராத்தே சங்கத்தால் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை கொழும்பு சுகததாச உள்ளரங் கில் கராத்தே நடுவர்களான புதிய கராத்தே விதிமுறைகளை விளக்கும் பயிற்சிப் பாசறை நடத்தப்படவுள்ளது.

இலங்கை கராத்தே சம்மேளனத்தின் நடுவர் சபை தலைவர் சென்சேய். என். விக்கிரமகாலவின் தலைமையில் இந்தப் பயிற்சி இடம்பெறவுள்ளது. (ம-23)

# செல்வரட்ணம் ஞாபகார்த்த கிரிக்கெட்

யாழ்ப்பாணம், டிசெ.8

அருட்தந்தை ஏ.ஜே.சி. செல்வரட்ணம் ஞாபகார்த்தமான இரண்டு நாள் கொண்ட கிரிக்கெட் போட்டி நாளையும் நாளை மறுதினமும் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டம் இடம் பெறவுள்ளது.

இதில் கல்கிசை சென். தோமஸ் கல்லூரியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம- 23)

# நேபாளம், மாலைதீவு அணிகள் அரையிறுதிக்கு முன்னேற்றம்

இந்தியாவில் நடைபெற்று வரும் தெற்காசிய உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதிச் சுற்றுக்கு நேபாளம், மாலைதீவு அணிகள் முன்னேறின. பிரிவு 'பி'யில் 3 ஆட்டங்களில் விளையாடி 5 புள்ளிகளைப் பெற்ற நேபாளம் மற்றும் மாலைதீவு அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

தெற்காசிய உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன் தினம் டில்லி ஜவஹர்லால் நேரு மைதானத்தில் நேபாளம் அணி, பாகிஸ்தானுடன் மோதியது. இந்தப் போட்டி 1-1 என்ற கோல் கணக்கில்சமநிலையில்முடிந்தது.

இத்துடன் 3 ஆட்டங்களில் விளையாடி 5 புள்ளிகளைப் பெற்ற நேபாளம் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

நேற்றுமுன்தினம் நடந்த மற்றொரு ஆட்டத்தில் பங்களாதேஷ அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய மாலைதீவு அணியும் அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.

'பி' பிரிவிலிருந்து 3 போட்டிகளில் பங்கேற்று தலா 5 புள்ளிகளைப் பெற்ற நேபாளம், மாலைதீவு அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

# ஆஸ்திரேலிய மண்ணில் சச்சினின் 100 ஆவது சதம்

## ஆருடம் கூறுகிறார் சைமன்ஸ்

இந்திய வீரரான சச்சின் டெண்டுல்கர் தனது 100 ஆவது சதத்தை ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் அடிக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது என ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரரான சைமன்ஸ் தெரிவித்துள்ளார். 100 ஆவது சதம் அடிக்கும் நிலையிலுள்ள அவர் மிகுந்த நெருக்கடிக்குள்சிக்கியுள்ளார். எனினும்,அந்த சாதனையை எட்டும் திறன் அவரிடம் உள்ளது. அது ஆஸ்திரேலியாவில் நிகழ்ந்தால் மிகவும் சிறப்பாக அமையும் எனவும் சைமன்ஸ் மேலும் தெரிவித்தார்.

# கிண்ணம் வென்றது ஸ்பெயின்

டேவிஸ் கிண்ணத்துக்கான இறுதிஆட்டத்தில் நடா லின் அதிரடி ஆட்டத்தால் ஸ்பெயின் 3-1 என்ற கணக்கில் ஆர்ஜென்டினாவை வீழ்த்தி 5 ஆவது முறையாக சம்பி யன் பட்டத்தை தட்டிச் சென்றது. கடந்த 2 ஆம் திகதி நடந்த ஆட்டத்தில் நடால் 6-1, 6-1, 6-2 என்ற கணக்கில் ஆர் ஜென்டினா வீரர் மொனாக்கோவையும், பெரடர் 6-2, 6-7(2), 3-6, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் டெல்போர்ட்டோ வையும் வீழ்த்தினர்.

3 ஆம் திகதி நடந்த ஆட்டத்தில் ஆர்ஜென்டினா வீரர் கள் நல்பாண்டியன், இட்ச்வாங்க் ஜோடி 6-4, 6-2, 6-3 என்ற கணக்கில் ஸ்பெயின் ஜோடி லோ பஸ், வெர்டாஸ்காவை வீழ்த்தியது. கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த இறுதி ஆட்டத்தில் நடால் 1-6, 6-4, 6-1, 7-6



என்ற செட் கணக்கில் ஆர்ஜென் டினா வீரர் டெல்போர்ட்டோவை வீழ்த்தியதால் 3-1 என்ற கணக்கில் ஸ்பெயின் சம்பியன் பட்டத்தை 5 ஆவது முறையாக வென்றது. (15)

## போர்த் தளபாட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறக்குமதி நிறுவனமான 'ரோசோ போரன் எக்ஸ்போர்ட்' நிறுவனத்தின் பிரதிப் பொதுப் பணிப்பாளர் விக்ரர் கொமர்டின் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மலேசியாவில் நடைபெற்ற அனைத்துலக ஆயுததளபாடக் கண்காட்சி ஒன்றிலேயே அவர் இந்த தகவலைக் கூறியுள்ளார்.

இலங்கைக்கு ரஷ்யா நான்கு எம்.ஐ-17 உலங்கு வானூர்திகளையும், இரண்டு காலாட்படை சண்டை வாகனங்களையும், 19 துருப்புக்காவிகளையும் வழங்கியுள்ளதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த ஆண்டில் 14 எம்.ஐ- 171 உலங்குவானூர்திகள் வாங்குவதற்கு இலங்கை 300 மில்லியன் டொலர் கடனுதவியையும் ரஷ்யாவிடம பெற்றுள்ளதாகவும் ரஷ்யாவின் ராஸ் செய்தி நிறுவனத்தை மேற்கோள்காட்டி வொய்ஸ் ஒவ் ரஷ்யா தகவல் வெளியிட்டுள்ளது. (த)

## ஐ.தே.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் விக்கிரமபாகுக்கும் இடையே இக்கூட்டத்தின்போது கடும் வாய்த்தர்க் கம் ஏற்பட்டது. இதனால் சஜித் கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

''சிங்கள-பௌத்த கூட்டமே அங்கு நடை பெற்றது. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்து விட்டு கூட்டத்திலிருந்து வெளியேறி னேன்'' - என்று நேற்று மாலை 'உதயனு'க்குத் தெரிவித்தார் ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய.

அதேசயம், எதிர்க்கட்சிகளின் இந்த கலந்துரையாடல் தொடர்பில் 'உதயனு'க்கு கருத்து வெளியிட்ட நவசம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன கூறியவை வருமாறு-

ஐக்கிய தேசியக் கட்சி, சிங்கள இனவாதப் போக்கைக் கடைப்பிடிக்கின்றது. அதனை முன்வைத்தே அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவே அக்கட்சி திட்டமிட்டுள்ளது.

தேசிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, அரசியல் தீர்வு விவகாரம், மீள்குடியேற்றம் உட்படத் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகிய விடயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என நான் உறுதியாகக் கூறினேன்.

சரத் பொன்சேகாவின் விடுதலையைப் பிரதானமாகக் கொண்டே நாம் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்தக் கூட்டத்தில் கூறினார்.

இதற்கு நான் கடும் எதிர்ப்பை வெளியிட்டேன். இவ்வாறு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டால் அது சிங்கள இனவாத ஆர்ப்பாட்டமாகவே கருதப்படும் எனச் சுட்டிக்காட்டினேன்.

எனது கருத்தை ஏற்க மறுத்த சஜித் கடும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார். அவரும் ஜாதிக ஹெல உறுமயவின் அரசியல் கொள்கையைக் கடைப்பிடித்தே செயற்படுகின்றார் என்று நான் சாடினேன்.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே ஐக்கிய தேசியக் கட்சிக்கு அமோக ஆதரவு வழங்கியுள்ளனர். அதனை மறந்து பிரதான எதிர்க்கட்சி செயற்படக் கூடாது. அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் தமிழர் விவகாரங்களும் உள்ளடக்கபட வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடு என்றும் நான் வலியுறுத்திக் கூறினேன்.

இந்தக் கூட்டத்தின்போது, சரத்பொன்சேகாவின் விடுதலைக்கு உதவுமாறு கட்சித் தலைவர்களிடம் அனோமா பொன்சேகா கோரிக்கை விடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சிலர் எனது கருத்தை ஆதரித்துக் கருத்து வெளியிட்டனர் - என்றார் விக்கிரமபாகு.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சுமந்திரன், ஐதே.க. உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, புத்திக பத்திரண,ரோஸி சேனநாயக்க மற்றும் அர்ஜூன ரணதுங்க எம்.பி. உட்பட பல அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (த-சி)

## விவசாயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல நிலையிலிருந்து யுத் தத்தால் அது வீழ்ச்சியடைந்தது. வன்னி மக்கள் கடும் உழைப்பாளிகளாக இருந்து சொத்துகளுடன் வாழ்ந்தவர்கள். யுத்தத்தால் அவர்கள் அனைத்தையும் இழந்து இப்போது வெறுங்கையுடன் உள்ளனர்.

நெல் உற்பத்தியில் அவர்கள் பாரிய பங்களிப்புச் செய்தனர். ஆயிரக்கணக்கான உழவு மற்றும் நீர் இறைக்கும் இயந்திரங்கள் அனைத்தையும் முள்ளிவாய்க்காலில் விட்டுச்சென்றனர். இப்போது அவர்கள் மண்வெட்டிகூட இல்லாமல் இருக்கின்றனர்.

அந்த இயந்திரங்களை அவர்களிடம் மீண்டும் கையளிக்க முல்லைத்தீவு அரச பணிமனையின் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் அவை தோல்வியில் முடிந்தன. இறுதியில் அந்த இயந்திரத்தின் உதிரிப்பாகங்கள் தெற்கிற்கும் கொண்டுவரப்பட்டதுதான் மிச்சம்.

வன்னியில் உள்ள அதிக போதனாசிரியர் அலுவலகங்கள் இப்போது படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. அவை மீள ஒப்படைக்கப்படவேண்டும். போதனாசிரியர்களின் தட்டுப்பாடு நிவர்த்திசெய்யப்படவேண்டும்.

மன்னாரில் 25,000 ஏக்கர் நிலத்தில் நெல் உற்பத்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆனால், நெற்களஞ்சியங்கள் யுத்தத்தால் அழிக்கப்பட்ட நிலையில் உள்ளன. அவை புனரமைக்கப்படவேண்டும்.

மன்னார் கட்டுக்கரை குளத்துநீரைப் பயன்படுத்தி அங்கு நெல் உற்பத்தியை 37 ஆயிரம் ஏக்கர் நிலத்திலிருந்து 45 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஆனால், இந்த கட்டுக்கரை குளத்திற்கு மல்வத்து ஓயாவில் இருந்தே நீர் கொண்டுவரப்படுகின்றது. அதில் 10 சதவீதமான நீரே கட்டுக்கரை குளத்திற்கு வருகிறது. மீதி 90 சதவீதமான நீர் கடலில் கலக்கின்றது.

100 சதவீத நீரையும் கட்டுக்கரை குளத்திற்கே கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கோரி மன்னாரைச் சேர்ந்த விவசாயிகள் 5 ஆயிரம் பேர் கையெழுத்திட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

இந்த மகஜருக்கு ஏற்ப மல்வத்து ஓயா நீரை முழுமையாகக் கட்டுக்கரை குளத்திற்குத் திருப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (த-சி)

## யாழ்ப்பாணத்தில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசியுள்ளார்.

இந்த விஜயம் தொடர்பாக அவரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு;

''கடந்த ஞாயிற்றுக்கிழமை புலம்பெயர் நாடுகளில் உள்ள உறவுகள் சிலரையும் அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணம் வந்தேன். போரினால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களின் வாழ்வாதாரத்தில் இதுவரை எவ்வித முன்னேற்றமும் கிட்டவில்லை. எமது மக்களின் இந்த நிலையை புலம்பெயர் தமிழர்களுக்கு நேரடியாகக் காண்பிக்கவே அவர்களை அழைத்து வந்தேன். அத்துடன் என்னால் நடத்தப்படும் 'நேர்டோ' என்ற நிறுவனத்தின் கிளை ஒன்று பருத்தித்துறை இன்பருட்டியில் அமைந்துள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி அடிப்படை உதவிகளை வழங்கும் பணிகளை முன்னெடுப்பதற்காக அந்த அலுவலகத்தின் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட வேண்டியுள்ளன. அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதே எனது விஜயத்தின் நோக்கம்.

பருத்தித்துறையில் பொதுமக்கள், மீனவர்கள் ஆகியோரைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராய்ந்தோம். அவசர அடிப்படை உதவிகளை அவர்களுக்கு வழங்க வேண்டிய தேவை உள்ளது. அதனை முதலில் கவனிக்க வேண்டும். எமது மக்களுக்கு ஏதாவது செய்யதாக வேண்டும் என்ற மனநிலையில் நான் செயற்பட்டுவருகிறேன். இதனை விட வேறுநோக்கங்கள் எதுவும் என்னிடம் இல்லை. புலம்பெயர் தமிழர்களின் உதவியுடன் எமது மக்களுக்கு உதவும் திட்டங்கள் சிலவற்றை முன்னெடுக்கவுள்ளோம்.- என்றார் கே.பி. (த-15)

## மங்களநேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து மாநகரசபை உறுப்பினர் மனுவல் மங்களநேசன் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக விளக்கமளிக்கும் போதே கமலேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

உறுப்பினர் மங்களநேசன் மீது மாநகர சபையில் பணியாற்றும் பெண்கள் மீதான பாலியல் சேஷ்டை, மது பாவனை போன்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இவை தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படும். கட்சியின் உயர்பீடம் விரைவில் முடிவை அளிக்கும் என்றார் அவர்.

தன்னைக் கட்சியில் இருந்து நீக்கியபோது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தாலோ கட்சியை விட்டு வெளியேறுவதுடன் வேறு ஒரு கட்சியுடன் இணைந்து செயற்படப்போவதாகவும் மங்களநேசன் தெரிவித்தமை தொடர்பாகக் கமலேந்திரனிடம் கேட்டபோது,

அவர் இரண்டு மாதங்களுக்கு முன் இடைநிறுத்தப்பட்டு விட்டார். அவர் மீது கட்சி ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு முடிவை அறிவிக்கும் என்றார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவிக்கையில்,பலம் குறைந்தாலும் அந்தச் சவாலை எதிர்கொள்ள கட்சி தயாராகவே உள்ளது.

யாழ். மாநகரசபையில் ஊழல் மோசடி எனச் சபைக்கூட்டங்களில் இதுவரை எந்த ஒரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்படவில்லை. வெறுமனே பத்திரிகைகள் மூலம் எதிரணியினர் ஊழல், மோசடி எனத் தவறான தகவல்களை வெளியிட்டு வருகின்றனர். கடைத்தொகுதி தொடர்பாக நீதிமன்றம் வரை சென்றுள்ளது. மாநகரசபை சுமுகமாகவே நடைபெறுகின்றது. நல்ல ஆட்சிக்கான முதலிடம் மாநகர சபைக்குக் கிடைத்துள்ளது - என்றார். (த-7)

## அமைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன எரிக் சொல்ஹெய்முடன் விசேட சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போதே எரிக் சொல்ஹெய்மிடம் மேற்படி தாம் கூறினார் என அமைச்சர் ராஜித சேனாரத்ன 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த வாரம் நோர்வேக்குக் கடற்றொழில் அமைச்சின் முக்கிய அதிகாரிகள் சென்றிருந்தோம். அங்கு இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் சந்திப்பொன்றை நடத்தியிருந்தோம்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையில் யுத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் வெற்றிபெறாமல் போனமைக்கான காரணம் மற்றும் அது தொடர்பான ஆய்வறிக்கையை நோர்வே அரசு அண்மையில் வெளியிட்டிருந்தது. இது தொடர்பாகச் சில நிமிடம் அவருடன் கலந்துரையாடினோம்.

இதன்போது ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கையின் சமாதான முயற்சிகள் முறிந்து போவதற்கு இந்தியா எவ்வகையில் செயற்பட்டது என்றும், இந்திய அரசு மௌனம் காத்த் விடயம் தொடர்பாகவும் எரிக் சொல்ஹெய்ம் தனது கருத்துகள் சிலவற்றைப் பகிர்ந்துகொண்டார்.

அத்துடன், இலங்கையின் நடவடிக்கை குறித்தும் அவர் சிலவற்றைத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை, இந்தியா மட்டுமல்ல, சமாதான முயற்சிகள் தோல்வியடைவதற்கு நோர்வேயும் ஒரு காரணம் என்பதை விளங்கப்படுத்திச் சுட்டிக்காட்டினேன்.

இந்த விடயங்கள் தவிர இலங்கை-நோர்வேக்கு இடையிலான இராஜதந்திர மற்றும் பொருளாதார ரீதியிலான உறவு நிலை தொடர்பாக இச்சந்திப்பின்போது ஆழமாக ஆராயப்பட்டன.

- இப்படி அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார்.

இதேவேளை, இலங்கையில் நோர்வே மேற்கொண்ட அமைதி முயற்சிகள் தொடர்பிலான ஆய்வு அறிக்கை ஒன்றை நோர்வே அரசால் நியமிக்கப்பட்ட நோராட் என்ற நிறுவனம் அண்மையில் வெளியிட்டிருந்தது. இதில், இம்முயற்சிகள் தோல்வியடைவதற்கு இந்தியாவின் மௌனமே காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

"வருட இறுதியை முன்னிட்டு"

விசேட கழிவுடனான தள்ளுபடி விற்பனை

# ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

**10% முதல் 25% வரை விலைக் கழிவுகள்**

- தரம் 1 முதல் பல்கலைக் கழகம் வரையான பாட மற்றும் பயிற்சி நூல்கள்
- திடுக்கிடும் நகைச்சுவைக் கதைகள் மற்றும் நாவல்கள், பிரபல கவிஞர்களின் கதைக்களஞ்சியம்
- ஆங்கில நாவல்கள், ஆங்கில இல்கண, இலக்கிய நூல்கள்
- மருத்துவ மற்றும் சித்த மருத்துவ நூல்கள்
- விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூடப் பொருள்கள்
- எழுது பொருள்கள் காகிதாதிகள், பாடசாலை தர உள்ளீட்டுப் பொருள்கள், ஸ்ரேசனரி வகைகள்
- பொழுதை இன்பமாகக் கழிக்க டாம்போட், கரம்போட், செஸ்போட் மற்றும் விளையாட்டு உபகரணங்கள்
- Over Head Projector மற்றும் O.H.P. Screen வகைகள், Laminating, Binding manchine வகைகள்
- White board, Magnet Board அவற்றுக்குரிய ஸ்ரான் வகைகள், Philip Chant Board வகைகள்
- இசையுலகில் புதுமை மிகு பான்ட் வாத்திய கருவிகள், சுருதிப்பெட்டி, வயலின், தம்புரா, மிருதங்கம், டோலக், தாளம், றபான், தம்பறின் உட்பட பல இசைக்கருவிகள்

2000 ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய றெக்சின் பாக் இலவசமாக வழங்கப்படும்.

❖ அப்பியாசக் கொப்பிகள் விசேட கழிவு விலையில் விற்பனையாகின்றன.

உங்கள் நலன் கருதி எமது நிறுவனம் இம்மாதம் முழுவதும் சனி, ஞாயிறு தினங்களிலும் வாடிக்கையாளர் சேவையாற்றும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
*212, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

T.P.: 0212225542,
0215671527
E.Mail: acdil@y.mail.com

(C/6658)(5,6)

## கிளி/முரசுமோட்டை அ.த.க.பாடசாலை

மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாடுகள்

12.11.2011



(14030)(1,6)

## இளைஞனைக் காணவில்லை

கடைக்குவேலைக்குச் சென்ற இளைஞர் ஒருவர் கடந்த மூன்று நாள்களாக வீடுதிரும்பவில்லையென சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உடுவிலைச் சேர்ந்த 21 வயதான கண்ணுச்சாமி தர்சன் என்பவரே காணாமல்போயுள்ளவராவார்.

குறித்த இளைஞர் வன்னியில் இருந்துவந்துசுன்னாகத்தில் பெற்றோருடன் வசித்து வந்துள்ளார்.

இவர்கடந்ததிங்கள்கிழமை காலை வழமை போன்று யாழ்ப்பாணத்தில் உள்ளதான் தொழில் புரியும் தொலைத்தொடர்பு நிலையத்திற்கு செல்வதாகக் கூறி வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார் அவர் மாலையில் வீடு திரும்பாததைத் தொடர்ந்து பெற்றோர்கள் கடை உரிமையாளருடன் தொடர்பு கொண்ட போது அவர் கடைக்கு வரவில்லை என்று உரிமையாளர் தெரிவித்தார்.

(த-86)

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திதி: கார்த்திகை பூர்வபக்க திரயோதசி (08.12.2011)

அன்னை மடியில் 02.02.1987 — ஆண்டவன் அடியில் 01.12.1998

**அமரர் தேவசுதா வடிவேற்கரசு**
*(நிதியா)* **(வைத்தீஸ்வரன்)**

ஆண்டுக்கு ஒரு பூ மகிழம்பூ
அம்மாவின் ஆயுளிலும்
ஒரே பூ நீயம்மா
அன்று தொட்ட கனவெல்லாம்
அரை நொடியில்
நொறுங்கியதோ!

**ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்**

அம்மா
செல்வராணி வடிவேற்கரசு
சித்தம்பாதி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

(C/6660)(5,6)

## 31ஆம் நாள் நினைவலைகள்



**திருமதி மாணிக்கம் ரெத்தினம்**

நிஜமாக:
20.02.1927

நிழலாக:
07.11.2011

*அம்மா என்று உறவாட யாரும் -இல்லையே*
*அன்புமொழி பேசிவிட நீயும் -இல்லையே*
*ஆயிரம் சொந்தங்கள் வந்து நின்றாலும்*
*அன்பான எம் அம்மாவுக்கு நிகராகுமோ.*

இன்று (08.12.2011) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*உங்கள் பிரிவால் துயருறும்:*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*கும்பப்பிள்ளை,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

(C/6559)(6-8)

**Midea** Electro Mart

விசேட விலைக்கழிவும் இலவச மின் உபகரணங்களும்

**Midea** PC Show Room

Authorized Dealer for **Abans** Ltd.

08.12.2011 முதல் 31.12.2011 வரை.




**Abans**
நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக
சேவை.

www.Mideamart.com
e-mail: midea21@gmail.com

No.1-1,1-H, Stanley Road, Jaffna.
T.P:021 - 222 4566 Fax.021 222 1646

No.4, New market, chavakachcheri.
T.P:021 227 0268, Fax: 021 227 0129

## தமிழக மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி கடந்த ஒருவார காலமாகத் தமிழக இராமநாதபுரம் மீனவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், இன்று வியாழக்கிழமை தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர் எனவும் இராமநாதபுரம் மீனவர்கள் அறிவித்துள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன.

இதுதொடர்பாக கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

தமிழக மீனவர்கள் கூறுவதுபோன்று மீன்பிடித் தொழிலில் இலங்கைக் கடற்பரப்பினுள் பிரவேசித்துக் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டுவிட்டார்கள்.

இப்போது இலங்கைச் சிறையில் தமிழக மீனவர்கள் எவரும் இல்லை. ஆனால், போதைப்பொருள் கடத்தலின்பேரில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களே இங்கு சிறைவைக்கப்பட்டுள்ளனர். அவர்களை உடனடியாக விடுவிக்க முடியாது. சட்டம் என்று ஒன்று உள்ளது. அதன்படியே நாம் நடவடிக்கை எடுப்போம். தமிழக மீனவர்கள் தலைகீழாக இருந்து போராட்டம் நடத்தினாலும்கூட இவர்களை உடன் விடுவிக்கமுடியாது.

அதேபோன்று இந்தியக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, அங்கு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 21 இலங்கை மீனவர்களை முதலில் இந்தியா விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார் அமைச்சர்.

இதேவேளை, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த அனைத்து இந்திய மீனவர்களையும் விடுவித்துள்ளோம் என இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

அத்துடன், கடந்த 28ஆம் திகதி இலங்கைக்கு கடத்திவர முயற்சிக்கப்பட்ட 2 கிலோகிராம் ஹெரோயினுடன் 5 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு தொடர்ந்தும் தடுப்பில் உள்ளனர் எனவும அவர் கூறினார்.

எவ்வாறாயினும், இந்தியக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 21 இலங்கை மீனவர்களில் 15 பேர் ஆந்திராவிலும், 6 பேர் அந்தமானிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என கடற்றொழில் அமைச்சரின் செயலாளர் நரேந்திர ராஜபக்ஷ குறிப்பிட்டார். (த-சி)

## குடாநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாந்தோட்டை வரையான கடற்கரைப் பிர தேசங்களில் மணிக்கு 50 தொடக்கம் 70 கிலோமீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசும் என்று பேரிடர் முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனைத் தொடர் ந்து யாழ். மாவட்டச் செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் சகல பிரதேச செயலாளர்களுக்கும் உடனடியாக இந்த அறிவிப்புக் குறித்துத் தெரியப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து வடமராட்சிக் கிழக்குப் பிரதேசம் மற்றும் ஏனைய கடற்பிரதேசங்களில் பொலிஸாரினாலும் மீனவர் சங்கங்களினாலும் ஒலிபெருக்கி மூலம் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது. மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டது. இதனால் நேற்றுமாலை மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை. மாலையில் கடற்கரையோரமாகக் கடும் காற்று வீச ஆரம்பித்தது.

இதனால் ஆழியவளை, உடுத்துறை, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, தாழையடி ஆகிய கிராமங்களில் கடற்கரையோரமாக வசித்த மக்கள் இடம் பெயர்ந்து நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தஞ்சமடைந்தனர்.

நேற்று நள்ளிரவுவரை கடும்காற்றுப் பற்றிய மேலதிக தகவல் எதுவும் கிடைக்கவில்லை.(த-15-51-236)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை
## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2012

*01.01.2012 தொடக்கம் 31.12.2012 வரை கீழ்க்காணும் பொருள்களையும், சேவைகளையும் வழங்குவதற்காகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையுடன் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் ஒவ்வொரு பொருள்களுக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2012 எனக்குறிப்பிட்டு ''தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.'' என்ற முகவரிக்கு 23.12.2011 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அல்லது நேரில் வழங்கவேண்டும்.*

| தொ. இல. | வழங்கல் | மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01. | எழுத்து உபகரணங்கள். | ரூபா 1,500.00 |
| 02. | அலுவலக உபகரணங்கள் (பைலிங் கபினட்டுக்கள், உருக்குக் கபினட்டுக்கள், கணினி இயந்திரங்கள், கணினி உதிரிப்பாகங்கள்). | ரூபா 1,500.00 |
| 03. | தளபாடங்கள். | ரூபா 1,500.00 |
| 04. | மலசல தொட்டி வேலை, களஞ்சியப்பொருள் (தும்புத்தடி, பிரம்புக்கூடைகள், ஈக்கிள் தடிகள், கிருமிநாசினிகள், தெளிகருவிகள், குளோரின், சவர்க்காரம், கையுறை). | ரூபா 1,500.00 |
| 05. | அச்சடித்தல். | ரூபா 1,500.00 |
| 06. | இரும்புப் பொருள்கள், தீந்தைகள் (எல்லா வகையான இரும்புப் பொருள்கள், தீந்தைகள்). | ரூபா 1,500.00 |
| 07. | கட்டட, வீதி வேலைகளுக்கான பொருள்கள் (ஆற்று மணல், கிறவல், சரளைக் கற்கள், செங்கற்கள், ஓடுகள், களிமண்). | ரூபா 1,500.00 |
| 08. | நீர்விநியோகப் பொருள்கள் (பி.வீ.சி. பைப்புகள், குழாய்கள், பொருத்துக்கள் என்பன). | ரூபா 1,500.00 |
| 09. | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (வாகனங்களுக்கான பற்றரி, ரயர், ரியூப், உதிரிப்பாகங்கள்). | ரூபா 1,500.00 |
| 10. | நீர் இறைக்கும் இயந்திரங்கள், ஏனைய இயந்திரங்கள் | ரூபா 1,500.00 |
| 11. | வாகனங்கள் | ரூபா 1,500.00 |
| 12. | மின்சாரப் பொருள்கள் (வயர், மின்குமிழ், சுவிச், மின் இணைப்பு உபகரணங்கள்). | ரூபா 1,500.00 |
| 13. | நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள். | ரூபா 1,500.00 |

| தொ. இல. | சேவைகள் | மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01. | கட்டடங்கள் பழுது பார்த்தலும் பேணலும். | ரூபா 1,500.00 |
| 02. | மோட்டார் வாகனங்களைப் பழுது பார்த்தலும் சேவிஸ் இடுதலும். | ரூபா 1,500.00 |
| 03. | தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் பழுது பார்த்தல். | ரூபா 1,500.00 |
| 04. | இலத்திரனியல், இயந்திரங்கள் திருத்தலும், சேவிஸ் செய்தலும் | ரூபா 1,500.00 |
| 05. | படவரைஞர்கள், கட்டட ஒப்பந்தகாரர்கள் (கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் உட்பட) பதிவு செய்தல். | ரூபா 1,500.00 |

மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு இலக்கங்களுக்கும் எதிராக குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணங்கள் காசாக அல்லது காசுக்கட்டளையாக ''தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை'' என்று எழுதப்பட்டு பதிவு செய்வதற்கான விண்ணப்பத்துடன் வியாபார அனுமதிப்பத்திர சான்றிதழின் பிரதியினையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட வழங்குநர், ஒப்பந்தகாரரிடமிருந்து கூறு விலை கோரப்படும். ஆனால் அவசியம் ஏற்படின் ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் கூறுவிலை கோரவும், கொள்வனவு செய்யவும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளருக்கு உரிமை உண்டு. குறிப்பிட்ட கால எல்லைக்குள் கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது கட்டளை பிறப்பிக்கப்பட்டு உரிய காலத்தினுள் நிறைவேற்றத் தவறும் அல்லது வழங்கப்பட்ட சேவைகள் பொருள்கள் கோரப்பட்ட தரத்திற்கும் வழங்கப்பட்ட விவரக் கூற்றுக்களுக்கும் ஏற்ப அமையத் தவறும் வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்களின் பெயர்கள் அறிவித்தல் இன்றி பதிவேட்டில் இருந்து நீக்கப்படும். ஏற்கனவே தவறிழைத்த வழங்குநர்களிடமிருந்தும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

F.D. அன்ரன் (தவிசாளர்),
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.
07.12.2011



## இரவு வணிக நிலையங்களைப் பாதுகாப்பதற்கு ஆள் சேர்ப்பதற்கான விண்ணப்பம் கோரப்படுகிறது

நிபந்தனைகள்:

01. தென்மராட்சிப் பிரதேச செயலகப்பிரிவில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
02. வயது 20 முதல் 45 வரைக்கு உட்பட்டவராகவும் உடற்தகுதி உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
03. விண்ணப்பத்தாரியின் தேசிய அடையாள அட்டை போட்டோ பிரதி, சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம், தொலைபேசி இலக்கத்துடன் இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரி தாங்கள் வசிக்கும் கிராம அலுவலர் அவர்களினால் சிபார்சு செய்யப்பட்ட கடிதத்தை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
05. மாத வேதனம் ரூ.10,000/= வழங்கப்படும்.
06. மாதத்தில் 19 நாள்கள் மட்டும் கடமை நாள்களாக இருக்கும்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் தங்களின் விண்ணப்பங்களை 15.12.2011 ஆம் திகதிக்கு முன் ''செயலாளர், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்'' என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம். மேலும் விவரங்களை மன்றப் பணியகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராக
01.12.2011 முதல் கடமையேற்றிருக்கின்ற

### உயர்திரு. க.முருகவேல்

அவர்களை அகமகிழ்வுடன் வரவேற்பதோடு,
மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று
பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
கிளி/முரசுமோட்டை அ.த.க.பாடசாலை.


## மரண அறிவித்தல்கள்

### கா.ஐ. சின்னத்துரை

(ஓய்வுபெற்ற உதவி அஞ்சல் அத்தியட்சகரும் சமாதான நீதிவானும்)



புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கா.ஐ.சின்னத்துரை (06.12.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை-பரிமளம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயம்மாவின் அன்புக் கணவரும், நடராஜா, இரத்தினம், கனகம்மா, தர்மலிங்கம், இராசதுரை, குணசிங்கம், இராணி அம்மா, இராசாத்தி அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நேசரத்தினம் மற்றும் சபாரத்தினம், மகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி வீதி, புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

### கணபதிப்பிள்ளை வேலாயுதம்



அம்பன், குடத்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வேலாயுதம் 06.12.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-செல்லம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம்-பாறாத்தைப்பிள்ளை தம்பதியரின் மூத்த மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தயாபரன் மற்றும் யசிகரன் (கனடா), வனஜா, கிரிஜா, கோசலா (கனடா), விஜிதரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலைமகள், புனிதன் ஆகியோரின் மாமனும், ரதுர்ஷன், தேனிலா, கவித்திகன் ஆகியோரின் பேரனும், வீரகத்தியின் சகோதரரும், செல்லம்மாவின் மைத்துனரும், பரமேஸ்வரி, பரமானந்தம், ஜெயரட்ணம், கிருபாகரன், கேசவன், சுதர்ஷன், அஜிதா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பன்,
குடத்தனை.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## பதஞ்சலம் தியாகராசா

(அரசாங்க மரக்கூட்டுத் தாபன ஓய்வு பெற்ற முகாமையாளர்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பதஞ்சலம் தியாகராசா நேற்று (07.12.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பதஞ்சலம் -மாரிமுத்து தம்பதியரின் மகனும் சிவயோகத்தின் கணவரும் கருணாகரன், கிருபாகரன், பிரதீபா, பாமா ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்..

மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை

தகவல்:
குடும்பத்தினர்.

## கலந்துரையாடல்

அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாலயத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலையின் பழைய மாணவர், நலன்விரும்பிகளை இதில் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கிராமத்தில் வென்று
நகரத்தில் வெற்றிநடை போடும்
ஐடியல் அக்கடமி
தரம் 6 முதல் O/L வரை
கல்வியாண்டு 2012
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம்:10-12-2011 சனிக்கிழமை
சீரணிச் சந்தி சண்டிலிப்பாய் 4.00 PM
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (யாழ்.இந்து மைதானமருகில்) 8.00 AM
நாவலடிலேன், மானிப்பாய் 11.00 AM
குறிப்பு:- தரம் 6 ற்கான English Medium வகுப்புக்கள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்.

கணினி மலிவு விற்பனை
P iv கணினி மற்றும் LCD Monitor மற்றும் அதனுடன் கூடிய அனைத்துப் பொருள்களும் 23,750/= விலையில் விற்பனைக்கு உண்டு. Free 4 GB Pen/Web cam
SKY Computer
162, பிரதான வீதி, யாழ்./737, K.K.S. Road,
021 222 1417 / யாழ். 222 4865, 0750698608
Skype, V/Call, Internet பாவிக்கலாம்
ஒரு வருட உத்தரவாதம் உண்டு.
மொத்தமாக DDR 1, DDR II, DDR III, Power S/Y.

படிவங்கள் விற்பனையாகிறது
சமூக சேவை அமைச்சின் பதவி வெற்றிடங்கள் -07
01. முகாமைத்துவ உதவியார்
02. அலுவலக உதவியாளர்
03. ஆய்வு உதவியாளர்
04. மொழி பெயர்ப்பாளர்
05. ஆய்வு உத்தியோகத்தர்
06. பயிற்சி உத்தியோகத்தர்
07. விரிவுரையாளர்
01. அபிவிருத்தி உதவியாளர்
02. நிதி உதவியாளர்

அகரம் கல்வி நிலையம்
மல்லாகம்
தரம் (6 - 11) வரை
தமிழ்/ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்
தமிழ் மொழியும் இலக்கியமும் - திரு. இல.நிஷாந்தன்
வரலாறு - திரு.க.ரவிக்குமார், திரு. யோ.கஜன்
கணிதம் - திரு.சோ.கிருஸ்ணதாஸ், திரு.அசுபதி, திரு.ந.பிரசாந்தன், திரு.வி.கஜன்
ஆங்கிலம் - திரு. த.விஜயகரன், திரு. கு.லம்போதரன்
விஞ்ஞானம் - திரு. ச. அன்ரன், திரு.நா .சதீஸ்க்கரன், திரு.தெ.யதுர்ஷன், திரு.ம.டினேஸ்
வர்த்தகம் - பிரபல ஆசிரியர்
சுகாதாரம் - திரு.க. சுவாமிநாதன்
சமயம் - பிரபல ஆசிரியர்
(11281)(2-6-9)
அனுமதிகளை இன்று வியாழக்கிழமை பி.ப.3 மணி முதல் பெற்றுக்கொள்ளலாம்.
- நிர்வாகம்.

O/L MATHS
மேல் மாகாணக் கல்வித் திணைக்கள வினாத்தாள், பூபாலசிங்கம் புத்தகசாலை, அன்னை புத்தகசாலை, பாக்யா புத்தக சாலை , துர்க்கா புத்தகசாலை ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். 0774541044

புதிய யாழ் நகரின் No.1 கல்வி நிறுவனம்
நாவலர் கல்வி நிலையம்
புதிய கல்வியாண்டு 2012 தரம் 01 முதல் O/L வரை
தமிழ் மொழி மூல வகுப்புக்கள்
English Medium Classes
ஆரம்பம் 10.12.2011 சனி மாலை 3.00 மணி
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
புதிய அனுமதிகளை இன்றுமுதல் பெற்றுக் கொள்ளலாம்.

A/L தமிழ்
க.சந்தரலிங்கம் B.A(Hons)Ta-spl
2012 Paper Class sat,sun: 11-12
இலக்கணம் ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும். sat,sun: 11-12
ஆரம்பம்-10.12.2011 சனிக்கிழமை
A/L 2013 புதிய பிரிவு ஆரம்பம் sat,sun: 10-11
விடுமுறைகாலத்தில் வகுப்புகள் நடைபெறும்
DCM
யாழ். நகர் வேம்படி மகளிர் கல்லூரி அருகில்

SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE
நகரசபை எதிரில் ஸ்ரேசன் வீதி சாவகச்சேரியில்...
வார , மற்றும் சனி ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்
09.12.2011 வெள்ளி : பிரிவுகள் : 2-3, 3-4, 4-5
10.12.2011 சனி : பிரிவுகள் : 2-3, 3-4, 4-5
முதல் வகுப்பு அனுமதி. புத்தகம். மற்றும் சான்றிதழ் இலவசம்
MyWay 182, STANLEY RD, JAFFNA 077 33 63 456 222 9505

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
அன்றும் இன்றும் என்றுமே தனித்துவம் வாய்ந்த நிறுவனம்.
கல்வியாண்டு 2012
ஆண்டு 6 தொடக்கம் O/L வரை
ஆரம்பம் 10.12.2011
(தரம் 6, 7,8 - 12.30, தரம் 9, 10, O/L - 10.30)
கணிதம் -விக்கி, ரூபன்
ஆங்கிலம் - விஸ்வநாதன், கஜன்
வரலாறு - பார்த்தீபன், சதீஷ்
வர்த்தகம் - நிஷாந்தன்
விஞ்ஞானம் - தேவா, நிரோஜன், ஜெயவதனன்
தமிழ் - நர்த்தனன், நர்மதா
சமயம் - T.N. தரன், நர்மதா
புவியியல் - A.V. கர்ஜன்
40 வருட கால அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
* மாதாந்தப் பரீட்சைகள் நடைபெறும்
* கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த நிறுவனம்
* அனுமதிகள் இன்று முதல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்
நிர்வாகி
(C/6640)(6-19-8)

# மரண அறிவித்தல்



## திருமதி சிவகாமிப்பிள்ளை செல்லத்துரை

ஊர்காவற்றுறை, கரம்பன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல 215/2, புகையிரத நிலைய வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமிப்பிள்ளை செல்லத்துரை கடந்த 04.12.2011 இல் வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கரம்பன் திரு.திருமதி கந்தையா தம்பதியரின் மகளும். கரம்பன் காலஞ்சென்றவர்களான கரம்பன் திரு.திருமதி சுப்பையா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுப்பையா செல்லத்துரையின் அன்பு மனைவியும் பாக்கியலட்சுமி(ஜேர்மனி), கோபாலன்(வவுனியா றேடர்ஸ்), புவனேஸ்வரி(வவுனியா), ஞானசம்பந்தன், மனோன்மணி(கனடா), மாணிக்கவாசகர்(ஜேர்மனி), மங்கயர்க்கரசி(ஜேர்மனி), திலகவதி(கனடா), காந்திமதி(கனடா), காலஞ்சென்ற செல்வமதி ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் சோதிப்பிள்ளை(வவுனியா), தில்லைநாதன்(வுவனியா), சந்திராதேவி(யாழ்ப்பாணம்), கனகராஜா(கனடா), செல்வராஜா(ஜேர்மனி), சீதாதேவி(ஜேர்மனி), சண்முகராஜா(கனடா), கஜேந்திரன்(கனடா), ஆகியோரின் அன்பு மாமியும் சதீஸ்வரன்(ஜேர்மனி), பிரதீஸ்வரன்(ஜேர்மனி), சமித்திரா(வவுனியா), ரோசானி(கனடா), கீர்த்தனா(ஜேர்மனி), கிருசான்(ஜேர்மனி), பிரசாந்(கஜாலினி தளபாட விற்பனை நிலையம் கிளிநொச்சி), பிரியங்கா(யாழ்ப்பாணம்), பிரசன்(யாழ்ப்பாணம்), பிரஜீவன்(யாழ்ப்பாணம்), பிரவீனா(யாழப்பாணம்), கௌசிகன்(ஜேர்மனி), சோபனா(ஜேர்மனி), சந்தியா(கனடா), சுருதியா(கனடா), யஸ்மியா(கனடா), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சதாமதி(கனடா), அஜைய்(கனடா), அஜினா(கனடா), ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8.12.2011) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெட்சணாங்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல:215/2 புகையிரதநிலையவீதி,
வைரவப் புளியங்குளம், வவுனியா.

தகவல்: ஞா.பிரசாத் (பேரன்)
கஜாலினி தளபாட விற்பனை நிலையம், கிளிநொச்சி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.